www.tamilarangam.net

அன்பளிப்பு 40P

# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளை தாங்கிவரும் பத்திரிகை 13-05-1994

உள்ளே...

1. விடுதலைப்புலிகள் மகளிர் படையணியின் சிறப்புத் தளபதி ஜனா அவர்களுடனான நேர்காணல்
2. தமிழர் தாயகக் கோட்பாட்டிற்கு தமிழ்க் குழுக்கள் இழைத்த பெரும் துரோகம்
3. கோடைகாலப் போருக்கு இராணுவம் தயாராகிறது
4. சிறுகதை - வழித்துணை
5. தமிழீழத்திலிருந்து வெளியே செல்ல பயண அனுமதி கோரும் விண்ணப்பதாரரின் கவனத்திற்கு

# செயலால் தமிழீழ அரசை அங்கீகரிக்கும் சிறீலங்கா அரசு

- வேற்று நாட்டுடன் யுத்தம் செய்யும் பாணியில் படைகுவிப்பு
- தமிழர்களை வேற்று நாட்டினராகக் கருதி அரசியல் தீர்வுக்கு மறுப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைதிவழி அரசியல் தீர்வுக்கான அழைப்புக்கள் அனைத்தையும் தொடர்ந்து நிராகரித்து வரும் சிறீலங்கா அரசாங்கம், வேற்று நாட்டுடன் யுத்தம் செய்யும் பாணியில் படைக்குவிப்பில் ஈடுபட்டு வருகின்றது. இது தமிழீழ அரசின் இருக்கை நிலையை, சிறீலங்கா செயலளவில் அங்கீகரித்துவிட்டதன் எதிர்செயற்பாடே என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். தமிழீழ மக்கள் தமது தேசிய பாதுகாப்புக்கான (National Security of Tamil Eelam) அரசாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையிலான அரசு நோக்கிய அரசை (Defacto Government) நிறுவியுள்ளமை அரசியல் யதார்த்தம். எனவேதான் தமிழீழ மக்களை இன்னொரு நாட்டினராக கருதி அந்நாட்டின் மீது படையெடுத்து, அந்நாட்டின் உருவாக்கத்தை உருக்குலைப்பதற்கான முயற்சிகளில் சிறீலங்கா அரசாங்கம் இறங்கியுள்ளது.

### ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்

எதிர்வரும் ஐப்பசி, கார்த்திகை மாதங்களுக்கிடையில் சிறீலங்காவின் ஜனாதிபதித் தேர்தலை நடாத்துவதற்கு சிறீலங்கா அரசாங்கம் ஆயத்தங்களைச் செய்து வருகின்றது.

ஜனாதிபதித் தேர்தலை சிறீலங்கா நடத்துவதானால், சிறீலங்காவின் பௌத்த சிங்கள குடியரசின் அரசியல் அமைப்பின்படி இத்தேர்தல், சிறீலங்கா அரசாங்கம் தனது எனக்கூறிக் கொள்ளும் பிரதேசம் முழுவதிலும் நடைபெற வேண்டும். இல்லையேல் ஜனாதிபதி தெரிவு சட்டப்படி செல்லுபடியற்றதாகி, அரசியலமைப்பு நெருக்கடிக்குள் நாடு சிக்குண்டுவிடும்.

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

## பிரித்தானிய பாராளுமன்றத்தில் தூதுவரின் யாழ் விஜயம் பற்றி கேள்வி

சிறீலங்காவில் உள்ள பிரித்தானியத் தூதுவர், கடைசியாக எப்போது யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தார் என பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் திரு. கப்ஸ் (Mr. Gapes M. P.) பொதுநலவாய நாடுகளுக்கும் வெளிவிவகாரத்திற்கும் பொறுப்பாக உள்ள செயலாளரிடம் பிரித்தானியப் பாராளுமன்றத்தில் வைத்துக் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த திரு. கீத் கோட்அமரி, "கடந்த ஆண்டு (1-993) பெப்ருவரி 18ம் திகதி " எனப் பதிலளித்தார்.

ஆனால், இவ்விஜயத்தின்போது பிரித்தானியத் தூதுவர் பலாலி இராணுவ முகாமுக்கு மட்டுமே விஜயம் செய்து, அங்குள்ள சிறீலங்கா பாதுகாப்பு அதிகாரிகளுடன் மட்டும் பேச்சுவார்த்தை நடத்தினார். அத்துடன் இவர் பலாலியிலிருந்து சில மைல் தூரத்திலுள்ள தமிழ்ப் பிரதேசங்களுக்குள் செல்லவோ, தமிழ்த் தலைவர்களை சந்திக்கவோ இல்லை என்பது பல பிரித்தானியர்களுக்கு தெரியாத உண்மை.

தொடர்ச்சி 15ம் பக்கம் ....



'அன்னை பூபதி'யின் 6வது நினைவு தினத்தையொட்டி ஜேர்மனியில் நடைபெற்ற கலை நிகழ்வு.

## எழுச்சிப் பயணத்தின் 18 ஆண்டுகள் நிறைவு

"மறவர் படைதான் தமிழ்ப்படை - தன்மானம் ஒன்றுதான் அடிப்படை -வெறிகொள் தமிழா புலிப்படை, அது வெல்லும் என்பது வெளிப்படை" எனும் மக்கள் ஆர்ப்பரிப்புடன் தமிழீழ விடுதலைப் புலிகள் எனும் விடுதலை வேள்வித் தீ மூட்டப்பட்டு, 18 ஆண்டுகள் கடந்த மே மாதம் ஐந்தாம் திகதியுடன் நிறைவு பெறுகிறது.

அன்று, "போர் என்றால் போர். சமாதானம் என்றால் சமாதானம்" என அப்பாவித் தமிழர்களைப் பார்த்து எள்ளி நகையாடிய சிங்கள பௌத்த பேரினவாதிகளுக்கு, இன்று "போர் என்றாலும் போர். சமாதானம் என்றாலும் சமாதானம்" எனச் சரிநிகர் சமானமாக தமிழர்கள் துணிந்து பதில் சொல்லவைத்த தமிழீழ மக்களின் தேசிய பாதுகாப்பு அமைப்புக்கு 18 ஆண்டுகள் நிறைவு என்பதே சாலப்பொருத்தம்.

இதையொட்டி தமிழீழமெங்கும் விடுதலைப் புலிகளின் முகாம்களிலும் அலுவலகங்களிலும் தமிழீழத் தேசியக் கொடி ஏற்றப்பட்டு, கொண்டாட்டங்கள் நடைபெற்றுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

எழுச்சிப் பயணத்தின் 19 வது ஆண்டில் அடிவைக்கும் தமிழீழ மக்கள் மாவீரர்களை வணங்கி, தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின், "உயிர் மேலானதுதான் -ஆனால் அதைவிட மேலானது சுதந்திரம்" எனும் வார்த்தையின் ஆழத்தை நன்குணர்ந்து, அவருடன் சேர்ந்து எம் தேசத்தின் விடுதலையை வென்றெடுக்க வீறுநடைபோடத் தொடங்கியுள்ளனர். ■

## "ஜயமகா" இராணுவ காவலரண்மேல் முதல் அதிரடி தாக்குதல் !

■ ஐந்து இராணுவத்தினர் பலி

'ஜய மகா' இராணுவ நடவடிக்கை என்ற பெயரில் வவுனியா -மன்னார் போக்குவரத்துப் பாதையை இணைக்க முற்பட்ட சிறீலங்கா இராணுவம், வவுனியா -மன்னார் பாதையில் சில மைல்கள் முன்னேறியது. இத்தரை நகர்வுக்கு விடுதலைப் புலிகளின் எதிர்ப்பு எதுவும் ஏற்படாததைக் கண்ட சிறீலங்கா இராணுவத்தினர், உள்புகவிட்டு சுற்றிவளைக்கும் தந்திரத்தில் புலிகள் ஈடுபடக் கூடுமென சந்தேகப்பட்டனர். இதனால் தரைநகர்வை சில மைல்களு

தொடர்ச்சி 15ம் பக்கம் ....

## பலவந்தமாக கையெழுத்துப் பெற்று காலவரையற்ற தடுப்புக்காவல் கொடுமை

### மட்டக்களப்பில் தொடரும் மனித அநாகரீகங்கள்

சிறீலங்கா அரசாங்கத்தின் பாதுகாப்புப் படைகளால் மட்டக்களப்பு பிரதேசத்தில் காலவரையற்ற தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பவர்களில் 82 ஆண்களும் 9 பெண்களும் தங்களை விடுவிக்கும்படி சிறீலங்கா கொழும்பு உயர்நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனுத்தாக்குதல் செய்தனர். இவர்களைச் சந்தித்து இவர்களின் வாக்குமூலங்களைப் பதியும்படி நீதிமன்றச் சட்டத்தரணிகள் அஜித் ரத்நாயக்கா, நிமால் கப்புஆராய்ச்சி ஆகியோரை அனுப்பிவைத்தது. இவர்கள் முப்பத்தாறு பேர்களைச் சந்தித்து வாக்குமூலங்களைப் பதிந்தனர்.

### பொத்துவில் தபால் நிலைய அதிபர்

இவர்களிடம், பொத்துவில் தபால்நிலைய அதிபராகத் தான் கடமையாற்றிக் கொண்டிருந்தபோது இடம்பெற்ற சுற்றிவளைப்பில் சிறீலங்கா பாதுகாப்புப் படைகளால் தானும் கைதாக்கப்பட்டதாகக் கூறிய முன்னாள் பொத்துவில் தபால் நிலைய அதிபர் திடுக்கிடும் தகவல் ஒன்றையும் வெளியிட்டார். சிறீலங்காப் பாதுகாப்புப் படைகளின் சுற்றிவளைப்பின்போது கைது செய்யப்படுபவர்களிடம் சிங்களப் படிவங்களைக் கொடுத்து கையொப்பம் இடும்படி பலவந்தப்படுத்தப்படுகின்றனராம் - கையொப்பம் இட்டதன் பின்னர் அவற்றை குற்ற ஒப்புதல் வாக்குமூலம் எனக்கூறி காலவரையற்ற தடுப்புக் காவல் உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றனவாம் என்பதே அது.

### கற்பழிப்புக் கொடுமை

இதற்கிடையில் இவ்விதம் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்

தொடர்ச்சி 15ம் பக்கம் ....

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எது உண்மை? எது கடமை?

இலங்கைத் தீவில் என்ன பிரச்சினை உள்ளது? இது வெளியுலகிற்கு எப்படி எடுத்து விளக்கப்படுகிறது? இதற்கு வெளியுலகில் வாழும் தமிழர்கள் என்ன பங்களிப்பைச் செய்கின்றோம்? நாம் அனைவரும் எண்ணிப் பார்க்க வேண்டிய முக்கியமான கேள்விகள் இவை.

தமிழர்களின் தாயக உரிமைகளை மறுத்து - அவர்களது அரசியல் உரிமைகளைப் பறித்து -நாடற்ற தேசிய இனமாக்கி -அவர்களின் வாழ்வதற்கான முயற்சிகளை ஆயுத ஒடுக்குமுறைகளால் தடுத்து - அவர்களின் உயிரையும் உடல்களையும் பொருட்களையும் அழிப்பதன் மூலம் இனஅழிப்பை சிங்கள பௌத்த பேரினவாத அரசு தனது அரசியல் நோக்காக்கிய வேளையில் -தமிழர்கள் தாமெழுப்பிய ஜனநாயக வழி எதிர்ப்புகள் எல்லாம் தோல்விகண்டும் புறக்கணிக்கப்பட்டும்விட்ட நிலையில் -ஆயுத எதிர்ப்பின் மூலம் தமது தாயகத்தையும் உயிர் வாழும் உரிமையையும் நிலை நாட்டவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். தமிழ்த்தேசியம் என்பதை தனியாக இனங்காணப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தமிழீழ மண்ணை மீட்கும் விடுதலைப் போராட்டம், தலைவர் பிரபாகரன் தலைமையில் விடுதலைப் புலிகள் அமைப்பினால் முன்னெடுக்கப்பட்டது. இன்று தமிழீழ மக்களுக்கு தேசிய பாதுகாப்பு வழங்கும் அமைப்பாக, அரசு நோக்கிய அரசை நிறுவி அதன் தலைமைத்துவத்தை நிர்வகிக்கும் நிர்வாக அலகாக தமிழீழ விடுதலைப் புலிகன் மாறிநிற்கின்றனர். மீட்கப்பட்ட பிரதேசங்களில் காவல் துறை, சட்டத்துறை, நீதித்துறை, கல்வி -பொருளாதார வளர்ச்சிகள், சமூக நிர்மாணம் போன்ற பல்வேறு வகையான துறைகள் விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தில் தமிழீழ மக்களால் நடாத்தப்பட்டு வருகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ அமைப்பை அசைக்க முடியாத சிறீலங்கா, மக்களை இலக்குப் பொருளாக்கி, மக்கள் மீதான முற்றுகை, மக்கள் வாழ்வுக்கான பொருளாதாரத்தடைகள், மக்கள் மீதான தாக்குதல்கள் என அடுக்கடுக்காக -அவற்றை சர்வதேச யுத்தக் குற்றங்கள் என்றுகூட பொருட்படுத்தாது -இனஅழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.

காலனித்துவ பிரித்தானிய அரசால் இலங்கையின் "அரசாங்கம்" என்ற சிங்கள பெரும்பான்மையினைக் கொண்ட பாராளுமன்ற இறைமைக்குள் தமிழர்களின் இறைமையும் இணைக்கப்பட்டதால், வெளியுலகிற்கு 'சிறீலங்கா' அரசாங்கம் என்ற தமிழின எதிர்ப்புச் சக்தி, இலங்கைத் தீவின் அங்கீகரிக்கப்பட்ட சட்டபூர்வ அரசாக காட்சியளிக்கிறது. ஆனால் இலங்கை அரசாங்கத்தைத்தான் பிரித்தானியா தோற்றுவித்தது. அந்த இலங்கை அரசியல் அமைப்பின் 29வது உபபிரிவுக்கு முரணான வகையில் சிங்கள பௌத்த பேரினவாதிகளால் 1972 இல் உருவாக்கப்பட்ட சிறீலங்கா அரசாங்கத்திற்கு, தமிழர்களை ஆளும் உரிமை இல்லை. உண்மையில் இந்த சிறீலங்கா அரசாங்கம் இலங்கைத் தமிழர்களைப் பொறுத்த மட்டில் அவர்களது பிரதிநிதித்துவ அரசாங்கமோ அல்லது அவர்களை ஆளும் சட்டத்தகைமையைக் கொண்ட அரசாங்கமோ அல்ல.

ஒருவகையில் 1948 முதல் 1972 வரையுள்ள ஆக 24 ஆண்டுகள் பிரித்தானியரால் இயற்றப்பட்ட ஐக்கிய இலங்கைப் பாராளுமன்றத்திற்குள் தமிழர்களின் பிரதிநிதிகள் இயங்கினார்கள் என்ற வரலாறு சுட்டிக்காட்டப்பட்டாலும், 1972 இல் சிங்கள பௌத்த பேரினவாதிகள் பாராளுமன்றச் சட்டத்தையும் பாராளுமன்றத் தொடர்புத் தன்மையையும் தாமாகவே நிராகரித்து நவரங்கலா என்ற புதிய கட்டிடத்தில் புதிய அரசியலமைப்பு ஒன்றை சிருட்டித்தபோது தமிழர்களின் இறைமை தானாகவே விடுபட்டு தமிழ் மக்களிடம் மீண்டுவிட்டது. இந்த இறைமையைப் பயன்படுத்தியே இன்று தமிழீழ அரசு நோக்கிய அரசு செயற்படுகிறது. இது சர்வதேச சட்டங்களுக்கு ஏற்புடையது என்பதை சிறீலங்கா நன்கு அறியும். அதனாலேயே தமிழரின் இறைமையை அபகரிக்க பகீரதப் பிரயத்தனம் செய்கிறது.

தமது சுயநலன்களில் அக்கறையுள்ள வெளிநாட்டு அரசாங்கங்களும், சிறீலங்கா வழங்கும் அதன் அமைப்பு ரீதியான கேந்திரச் சலுகைகள், சந்தைச் சலுகைகள், சார்பு ஆதரவுகள் என்பவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து தமிழீழ மக்களின் நியாயமான போராட்டத்தையோ அதன் நீதித்தன்மையினையோ ஏற்றுக்கொள்ளாது, தமிழர்களைத் துன்பப்படுத்தும் சிறீலங்காவிற்கு ஆயுத உதவிகளும் பொருளாதார உதவிகளும் வழங்கி ஊக்குவிக்கின்றன. இந்நேரத்தில் வெளிநாடுகளில் உள்ள தமிழர்களுக்கு, தமது உடன்பிறப்புகளுக்கு சிறீலங்கா அரசாங்கமும் அதன் ஆயுதப்படைகளும் ஏற்படுத்தும் மனித வதைகளை வெளிப்படுத்தும் வரலாற்றுக் கடமை உண்டு.

இதற்கு மாறாக சில தமிழர்கள் சுயநல நோக்கோடு உண்மைக்குப் புறம்பானவற்றை உண்மை எனக்கூறி ஊர்வலம் வரவைக்கின்றனர். இது எம் கண்களை, எங்கள் கரங்களினாலேயே குத்துவதற்கு ஒப்பானது. இவற்றைத் தமது சார்பு நிலைகளுக்கு ஏற்ற காரணங்களாக, சிறீலங்காவுக்கு ஆயுத பொருளாதார உதவிகள் அளிக்கும் நாடுகள் தொகுக்கின்றன. அவற்றிற்கு அவ்வரசாங்கங்களின் சமூகத் தொடர்பு சாதனங்களும் முக்கியத்துவம் கொடுக்கின்றன. இதன் விளைவு முற்றிலும் உண்மைக்குப் புறம்பான -யதார்த்த தன்மையற்ற பல செய்திகள், சம்பவங்கள் சர்வதேச மக்கள் முன் பிரசவிக்கப்படுகின்றன. இதனால் சிறீலங்கா நடாத்தும் பொய்ப் பிரச்சாரங்களுக்கு இவை பக்கப்பாட்டாக அமைகின்றன. இதனால் யாருக்கு அழிவு? உடல் பொருள் ஆவியை அர்ப்பணித்து விடுதலை தேடும் தமிழீழ மக்களின் உண்மை நிலை திரிவுக்குள்ளாக்கப்படுகிறது. எனவே உலகத் தமிழர்களாகிய நாம் அனைவரும் சிறீலங்கா இராணுவ அடக்குமுறையின் பேரழிவுகளையும் தமிழர்களின் நியாயபூர்வமான விடுதலைப் போராட்டத்தின் முக்கியத்துவத்தையும் சர்வதேச சமூகத்தின் முன் வெளிப்படுத்தி, தமிழீழ மக்களின் துயர்துடைக்கும் குரலாக மாறுவோம் என ஒவ்வொருவரும் உறுதிபூணுவோம். ■

# அமைதித் தீர்வுக்கு வழிகாணும் முயற்சியில் சமூக பொருளாதார முன்னேற்ற நிலையம்

தமிழர் பிரச்சினையில் அமைதித் தீர்வுக்கு வழிகாணும் முயற்சியில் யாழ்ப்பாணத்தில் இயங்கும் சமூக, பொருளாதார முன்னேற்ற நிலையமும் ஈடுபாடு காட்டிவருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வமைப்பைச் சார்ந்தவர்கள் சமாதானத்தில் நாட்டமுள்ள அரசாங்க உயரதிகாரிகள், அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள், மதத்தலைவர்கள் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடி வருகின்றனர். கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் முயற்சிகளை மேற்கொள்ளும் இவர்களின் சகோதரத்துவ நிறுவனமொன்று, இவர்களின் உதவியுடன் கனடாவிலும் இம்முயற்சியில் இறங்கியுள்ளதாகத் தெரிகிறது. இக்கனடிய நிறுவனத்தினர் கனடாவில் உள்ள அமைதி விரும்பும் அமைப்புக்களின் உதவியையும் கனடிய அரசாங்கத்தின் உதவியையும் பெறமுயற்சிப்பதாக செய்திகள் கூறுகின்றன.

இந்நிறுவனத்தின் பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள சகோதரத்துவ நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் எட்கார்சியா கொழும்பு வந்து இம்முயற்சியை ஊக்குவிக்கக் கூடும் என இந்நிறுவனத்தினர் எதிர்பார்க்கின்றனர்.

**அரசாங்க அதிகாரி தகவல்**

கொழும்புக்கு யாழ். நகரில் இருந்து வந்த அரசாங்க அதிகாரி ஒருவர், விடுதலைப் புலிகள் பேச்சு வார்த்தையை தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றார்கள் என்றும், ஆனால் தானாகவே தீர்மானம் எடுக்கும் நிலையில் உள்ள அரசாங்க அதிகாரிகளுடன்தான் பேச்சு வார்த்தையில் ஈடுபட முடியும் என்றும் விடுதலைப் புலிகளின் அரசியல் துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் தம்மிடம் கூறியதாகத் தெரிவித்துள்ளார். ■

# பதினோராயிரம் தமிழரை திருப்பியனுப்ப சுவிஸ் முடிவு

சுவிஸ் அரசாங்கம் சுவிற்சலாந்திலிருந்து பதினோராயிரம் தமிழர்களை சிறீலங்காவுக்கு திருப்பியனுப்ப முடிவு செய்துள்ளது. இது குறித்து மனித உரிமை அமைப்புக்கள் ஆட்சேபம் தெரிவித்தபோதிலும், சுவிஸ் நீதி அமைச்சர் இம்முடிவை பகிரங்கப்படுத்தியுள்ளார்.

திரு. ஆர்னோல்ட் கொல்லர் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், 1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர் சுவிஸ் நாட்டுக்கு அகதிப் புகலிடம் தேடிவந்து, அவர்களுடைய தனிப்பட்ட வாழ்விற்கு உயிராபத்தை எதிர்நோக்காத தமிழர்கள் திருப்பியனுப்பப்படுவர் என்றும், 1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் வந்த ஆறாயிரம் தமிழர்கள் தற்போது தொடர்ந்து வாழ அனுமதிக்கப்படுவர் என்றும் கூறினார். ■

# பல குழுக்களை வைத்து கிரிக்கெட் போட்டிகள் நடாத்தும் மனேஜராக விஜேதுங்கா

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் சிறீலங்கா அமைச்சரவை உறுப்பினருமான சிறிசேனகூரே, சிறீலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். ஆயினும் அமைச்சரவையில் இவர் தொடர்ந்து இருப்பார் எனக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐ. தே. கட்சியினுள் வளர்ந்துவரும் உட்பூசல் காரணமாக, ஏழு உட்பிரிவுகள் கட்சியினுள் தோன்றியுள்ளதாக கொழும்பு அவதானி ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

இது ஒருபுறம் இருக்க, பிரேமதாசா குடும்பத்தினர், தங்களை விளம்பரப்படுத்தி சிறீலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா அரசியல் இலாபம் தேடுவதை எதிர்ப்பதாகத் தெரிகிறது. இதன் எதிரொலியாகவே கொழும்பில் மே தினத்தன்று நடந்த பிரேமதாசா நினைவுச் சிலை திறப்பு விழாவில் பிரேமதாசா குடும்பத்தினர் கலந்துகொள்ளவில்லை எனத் தெரிய வருகிறது.

சிறீலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா, ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள காமினி திசநாயக்கா பிரிவுக்கு திடீர் முக்கியத்துவம் அளித்து வருவதாக ஏனைய பிரிவுகள் புகார்கள் தெரிவிக்கத் தொடங்கியுள்ளன. விஜேதுங்கா காமினி திசநாயக்காவை பாராளுமன்ற உறுப்பினராக மாற்றுவதற்கு, தனது தனிப்பட்ட செல்வாக்கைக் கட்சிக்குள் பிரயோகித்து வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்துடன் சீனாவுடன் நெருக்கமான நட்பைப்கொள்வதினால் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள கசப்புணர்வுகளை மாற்றுவதற்கு காமினி திசநாயக்காவை விஜேதுங்கா பயன்படுத்த முனைகிறார் என ஐ. தே. கட்சிக்குள் பேசப்படுவதாகத் தெரிய வருகிறது.

மேலும் றொனி டிமெல் அணியினரும் ஐ. தே. கட்சியினுள் செல்வாக்குப் பெற்று வளர்வதாக வேறொரு செய்தி தெரிவிக்கிறது.
பல குழுக்களை வைத்துக் கிரிக்கெட் போட்டி நடாத்தும் மனேஜராக சிறீலங்கா ஜனாதிபதி டி. - பி. விஜேதுங்கா மாறியுள்ளார். அதேவேளை குழுக்களைத் திறமையாக விளையாட வைக்கும் 'கோச்சராக' முன்னாள் சிறீலங்கா ஜனாதிபதி ஜே. ஆர் . ஜெயவர்த்தனா இயங்கி வருகிறார்.
பிரேமதாசா சிலை திறப்பு விழாவில் பிரேமதாசாவின் உண்மை ஆதரவாளர்கள் பெருமளவில் கலந்துகொள்கையில், தனக்கு அவமானங்கள் எவற்றையாவது ஏற்படுத்திவிடுவார்கள் என்ற அச்சத்தில் ஐ. தே. க. கிரிக்கட் குழுக்களின் மனேஜர் டி. பி. விஜேதுங்கா ஒடிஒளித்துக்கொண்டார். இவருக்கு கைகொடுத்து உதவ 'கோச்சர்' ஜே. ஆர். ஜெயவர்த்தனா முன்வந்து அவரே சென்று சிலையைத் திறந்துவைத்துள்ளார்.

இது ஒருபுறம் இருக்க ஐக்கிய தேசிய கட்சியின் 17 வருட ஆட்சித் தவறுகளும், தேவையற்ற யுத்தத்தால் ஏற்படும் உயிரழிவுகளும், சேதங்களும் ஐக்கிய தேசியக் கட்சியினை, அரசியல் களத்தில் இருந்தே அவுட்டாக்கும் வேலையைச் செய்ய சிங்கள மக்களைத் தூண்டியுள்ளது. ஐ. தே. க. அரசாங்கத்தின் மேல் உள்ள வெறுப்பை தென்னிலங்கை எங்கும் தெளிவாக இனங்காணக்கூடியதாக இருப்பதாக, அங்கு விஜயம் செய்த சர்வதேச பத்திரிகையாளர்கள் தெரிவிக்கின்றனர். ■

# மன்னார் தீவுப் பகுதிகளில் சிறுசிறு பொலிஸ் நிலையங்கள் மூடப்பட்டன

மன்னார், தலைமன்னார் பகுதிகளில் நிலைகொள்ள முடியாது தவிக்கும் சிறீலங்காப் பாதுகாப்புப் படைகள், விடுதலைப் புலிகளால் எங்கிருந்து, எப்போது, எப்படித் தாக்குதல்கள் வருமெனும் அச்சத்தில் இருக்கின்றனர்.

இதனை உறுதிசெய்யும் வகையில் விடுதலைப் புலிகள் அடுத்தடுத்து இப்பிரதேசங்களில் அங்குமிங்குமாக தாக்குதல்களை நிகழ்த்திய சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

விடுதலைப் புலிகளின் இவ்வெற்றிகரமான தாக்குதல்கள் ஏற்படுத்திய மனக்கிலேசத்தால் மன்னார், தலைமன்னார் பகுதிகளிலிருந்த பல சிறு சிறு பொலிஸ் நிலையங்களை அவசரம் அவசரமாக சிறீலங்கா மூடிவிட்டது.

இவ்விதம் நடமாடுவதற்குக்கூட அஞ்சுகின்ற சிறீலங்காப் படைகள் மனித நடமாட்டமற்ற காட்டுப் பகுதிகளுக்குள் அங்குமிங்குமாக அசைந்துகொண்டு, மன்னார் வவுனியாப் பிரதேசப் போக்குவரத்துப் பாதைகளை தாம் இணைக்கப்போவதாக வீம்பு பேசிவருகின்றன. ■

# விமானப்படையினர் மேல் தாக்குதல்

திருகோணமலை பாலமடத்தடியில் வீதித் தடைகளை அகற்றிவிட்டு முகாம் நோக்கித் திரும்பிக் கொண்டிருந்த விமானப்படையினர் மேல், விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இருவிமானப்படையினர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.
இதற்கிடையே மூதூரில் சிறீலங்காவின் விசேட அதிரடிப்படையினர் நடாத்திய துப்பாக்கிச் சூட்டில், முப்பது வயது நிரம்பிய அருளம்பலம் யோகநாதன் என்னும் பாதசாரி ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார்.
திருகோணமலை நகரில் சிறீலங்கா ஆயுதப் படைகளின் அடாவடித்தனம் அதிகரித்து வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. சமீபத்தில் பொதுமக்கள் குடிமனைகளைச் சுற்றிவளைத்த சிறீலங்கா பாதுகாப்புப் படையினர் எட்டுப் பெண்கள் உட்பட இருபது பேரைக் கைது செய்து கொண்டு சென்றதாகத் தெரிகிறது. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# துன்பங்கள் மத்தியிலும் துணிவுடன் செயலாற்றிய கடமை வீரர்: பேராசிரியர் துரைராசாவிற்கு தேசியத் தலைவர் பாராட்டு

## விருது வழங்கிக் கௌரவிப்பு

"எத்தனையோ அவலங்கள், துன்பங்கள் மத்தியிலும் எதற்கும் அஞ்சாத துணிவுடன் இந்த மண்ணைப்பற்றி நிற்கும் எமது மக்களுக்கு, பேராசிரியர் துரைராசா அவர்கள் ஒரு ஊக்க சக்தியாக விளங்கினார். தளர்ந்து போகாத உறுதிப்பாட்டிற்கு ஒரு உன்னத உதாரணமாக விளங்கினார்."

இவ்வாறு தலைவர் வே. பிரபாகரன் பேராசிரியர் துரைராசாவிற்கு வழங்கப்பட்ட பிரிவுபசார வைபவத்தில் பேசும் பொழுது குறிப்பிட்டார். இந்த நிகழ்ச்சியில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மூத்த தளபதிகளும், பொறுப்பாளர்களும் கலந்துகொண்டனர்.

தேசப்பற்றுடன் செயற்பட்டு, கல்வித்துறையின் மேம்பாட்டிற்கு அவர் ஆற்றிய அரும்பணியை பாராட்டிய தலைவர், பேராசிரியர் துரைராசா அவர்களிற்கு விசேட விருது ஒன்றை வழங்கிக் கௌரவித்தார்.

தலைவர் பிரபாகரன் அவர்கள் ஆற்றிய உரையின் விபரம் பின்வருமாறு;

சான்றோரைப் போற்றுவதும், கற்றோரைக் கௌரவிப்பதும் தமிழர்களாகிய எமது மரபு. எமது சீரிய பண்பாடு.

இந்தப் பண்புக்கமைய பேராசிரியர் துரைராசா அவர்களைப் பாராட்டிக் கௌரவிப்பதற்காக நாம் இங்கு கூடியிருக்கின்றோம்.

பேராசிரியர் துரைராசா அவர்கள் ஒரு தலை சிறந்த கல்விமான். உலகப் புகழீட்டிய அறிஞர். ஆறு ஆண்டுகளாக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராகப் பதவியிலிருந்து, அவர் எமது மண்ணுக்கு ஆற்றிய சேவை மகத்தானது. அதற்காக ஈழத்தமிழ் உலகம் அவருக்கு என்றும் கடமைப்பட்டிருக்கும்.

பேராசிரியர் துரைராசா அவர்கள் ஒரு தேசப்பற்றாளர். அவர் இந்த மண்ணையும், மக்களையும் ஆழமாக நேசித்தார். அவரது வாழ்க்கை இந்த மண்ணோடு பிணைந்தது. மக்களோடு இணைந்தது. அவர் இந்த மண்ணினதும், மக்களினதும் போராட்ட வாழ்வுடன் ஒன்றிணைந்து நின்றார். போராட்ட வாழ்வின் பளுக்களை சுமந்து கொண்டார். போராடும் மக்களின் துன்பங்களை பகிர்ந்து கொண்டார்.

எத்தனையோ அவலங்கள், துன்பங்கள் மத்தியிலும் எதற்கும் அஞ்சாத துணிவுடன் இந்த மண்ணைப் பற்றிநிற்கும் எமது மக்களுக்கு, பேராசிரியர் துரைராசா அவர்கள் ஒரு ஊக்க சக்தியாக விளங்கினார். தளர்ந்து போகாத உறுதிப்பாட்டிற்கு ஒரு உன்னத உதாரணமாக விளங்கினார்.

எமது இனத்தின் வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் கல்வி ஆதாரமானது, எமது சமூகத்தின் முன்னேற்றத்திற்கு அடித்தளமானது. நீண்டகாலமாகவே எமது கல்வி வாழ்வை சிதைத்துவிட எதிரியானவன் முனைந்து வருகிறான். இதனால் தமிழரின் கல்வி பாரதூரமான அளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது.

சரிந்துகொண்டிருக்கும் எமது கல்வித்துறையை நிமிர்த்திவிட வேண்டும் என்ற இலக்கில், பேராசிரியர் துரைராசா அவர்கள் அரும்பாடுபட்டார். எத்தனையோ இடையூறுகளுக்கும் மத்தியில் துணிந்து செயலாற்றினார். எதிரியின் போர் அழுத்தங்களாலும், அனர்த்தங்களாலும் யாழ்ப்பாண உயர் கல்விப் பீடம் செயலிழந்து போகாத வண்ணம் அவர் ஆற்றிய அருந்தொண்டு மிகவும் பாராட்டுக்குரியது. இது அவரது தேசப்பற்றிற்கும் மக்கள் நேயத்திற்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.



பேராசிரியர் துரைராசா ஒரு எளிமையான மனிதர். ஒரு இனிமையான மனிதர். எளிமையும் இனிமையும் நிறைந்த ஒரு நல்ல மனிதர்.

அறிவின் அதியுயர்ந்த பண்பாகப் பிறப்பதுகான் எளிமை தன்னலமும், தற்பெருமையும் அகன்ற நற்பண்பாக எளிமை தோன்றுகிறது. இந்த எளிமை ஒருவரை அழகான மனிதராக, பண்பான மனிதராக ஆக்கிவிடுகிறது. இந்த வகையில் பேராசிரியர் துரைராசா ஒரு அழகான மனிதர். அவரிடம் உள்ள இந்த அகத்தின் அழகுதான் மக்களைக் கவரும் மாண்பாக விளங்குகிறது.

அவரது நற்பணி தொடரவேண்டும் என்றும், அவர் நல்வாழ்வு வாழவேண்டும் என்றும் நான் மனமார வாழ்த்துகிறேன். ■

# மேலும் இரு தமிழக மீனவர்கள் சிறீலங்கா கடற்படைக்குப் பலி

☆ கையாலாகாத தமிழக அரசு தமிழ் அகதிகள் மேல் பாய்ச்சல்
☆ 1629 தமிழர்கள் புலி ஆதரவாளர்களெனச் சிறை

இராமேஸ்வரம் அருகே மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த தமிழக மீனவர்களின் படகு ஒன்றின்மேல், சிறீலங்காக் கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இரு தமிழக மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த மாதத்தில் தமிழக மீனவர்கள் கொல்லப்படுவது குறித்து டில்லியில் சிறீலங்கா அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்திய இந்திய அதிகாரிகளிடம், இனிமேல் இப்படியான சம்பவங்கள் நடைபெற மாட்டாது என சிறீலங்கா உறுதியளித்திருந்தது தெரிந்ததே. இதற்கிடையே கடல்வலய மீன்பிடித் தடையை அகற்றினால் மட்டுமே இந்த வீணான மரணங்கள் தவிர்க்கப்படுமென ஆரம்பத்தில் இந்தியா வலியுறுத்தி வந்தது. முதலில் கடல்வலய மீன்பிடித்தடையை அகற்ற சிறீலங்கா ஒப்புக்கொண்டபோதிலும், பின்னர் மறுத்துவிட்டது.

### கையாலாகாத ஜெயலலிதா

சிறீலங்காக் கடற்படையினருக்கு பலியாகிவரும் தமிழக மீனவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்ற போதிலும், தமிழ்நாடு முதலமைச்சரான ஜெயலலிதாவினால் இதனைத் தடுக்க எதையுமே செய்ய முடியவில்லை. இந்தக் கையாலாகாத ஜெயலலிதா, தமிழ் நாட்டில் புலிகள் ஊடுருவல் என்ற மாயையைக் கிளப்பி, தனது ஆட்சித் தவறுகளை திசைதிருப்பி விடலாமென பகற்கனவு கண்டுவருகிறார். இவரின் ஆட்சியில் 1629 தமிழர்கள் தமிழ் நாட்டின் பல்வேறு சிறைச்சாலைகளிலும் புலிகளின் ஆதரவாளர்கள் என்ற பெயரில் சிறை வைக்கப்பட்டுள்ளனர். இவர்

தொடர்ச்சி 15ம் பக்கம் ....

# இனஉரிமைக்காக குரல் கொடுப்பதற்கு யாருக்கும் பயப்பட வேண்டியதில்லை

## - பேராசிரியர் அ.துரைராசா

நிர்வாகி ஒருவர் தமது கடமையை சேவை மனப்பான்மையுடனும் இன மத ; உயர்வு தாழ்வு பேதமின்றி எல்லோரையும் சமமாக மதிப்பவராயும், தமது நிர்வாகத்துக்குட்பட்டவர்கள் தமது பிரச்சனைகளை இலகுவில் அவருடன் தொடர்புகொண்டு தீர்க்கக்கூடியவராகவும் இருப்பவரே-சிறந்த நிர்வாகியாக இருப்பார்- அவருக்கு பொதுமக்களிடமும் அன்பும், மதிப்பும் ஆதரவும் கிடைக்கும். பல்கலைக்கழக துறைத்தலைவர், பீடாதிபதி, உப வேந்தர் ஆகிய பதவிகளை வகித்த பொழுது நான் இவற்றினை கருத்தில் கொண்டு செயல்பட்டதினால் பிரச்சனைகளை இலகுவில் தீர்க்க கூடியதாக இருந்தது என, உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா, யாழ் மாவட்ட நிர்வாக மேம்பாட்டில் பங்கு கொள்ளும் சகல அரச அதிகாரிகளினாலும் செயலகத்தில் தமக்கு அளிக்கப்பட்ட பிரிவு உபசார வைபவத்தில் கூறினார்.

இவ்வைபவத்துக்கு மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ப. திலகநாயகம் தலைமை வகித்தார். அவர் மேலும் பேசுகையில், ஒவ்வொருவரும் தமது இனத்தின் உரிமைகள் பறிபோகும் போது அதற்காக குரல் கொடுக்க வேண்டும்-அவ்வாறு குரல் கொடுப்பதற்கு யாருக்கும் பயப்படத் தேவையில்லை, அதற்காக இனவெறியராக மாறக் கூடாது. இனத்துக்கான உரிமையை கேட்பது இனவெறியாகமாட்டாது, அதனை கேட்பதில் எவ்வித தவறும் இல்லை.

இவ்வைபவத்தில் திட்டப் பணிப்பாளர் செ. பத்மநாதன் பிரதேச உள்ளூராட்சி, உதவி ஆணையாளர் சு. டிவகலாலா, உடுவில் பிரதேசச் செயலாளர் க. மகாலிங்கம், உதவி திட்டமிடல் பணிப்பாளர் நா. சிவபாதசுந்தரம், விவசாய விரிவாக்க அலுவலர் த. சிவலோகநாதன், நிர்வாக அலுவலர் க. பஞ்சாட்சரம், யாழ்ப்பாணப் பிரதேசச்செயலாளர் கலாநிதி க. குணராசா ஆகியோர் பாராட்டுரை வழங்கினார்கள். ■

## வாருங்கள் நிலத்தை வளமாக்க...!

பூகம்பத்திற்குப் புதுப்பெயர் தான் புலிப்படை
போர்க்கலையின் புதிய கலாசாலைதான் தலைவர் பிரபா
ஈழத்தில் இல்லையென்று யார் சொன்னது....... எரிமலைகள்?
இங்கு ஏராளமாய் இருக்கின்றார்கள் கரும்புலிகள்!
ஈகத்திற்கும் வீரத்திற்கும் இப்போ இங்குதான் இருப்பிடம்
தமிழீழ வேங்கைகளின் உள்ளந்தான்
இரண்டினதும் தரிப்பிடம்!
எதிரியின் எந்தத் தடையும் இங்கு தடையல்ல......
தடைக்கற்கள் எல்லாமே தமிழினத்திற்குப்
படிக்கற்கள் தான்
வெடிகுண்டும், எறிகணையும், விமானக்குண்டுகளும்
எங்கள் வீரமக்களின் விளையாட்டுப் பொருட்கள்.
சாவுகள் இங்கே சாதாரண நிகழ்ச்சி!
அவைகளுக்குச் சரித்திர அந்தஸ்தும் இங்குதான் கிடைக்கும்!
புறநானூற்று வீரம் இங்கே புறங்காணப்பட்டுவிட்டது.
புவிபோற்றும் வீரம் நிலைநிறுத்தப்படுகின்றது!
உருவாகப் போகும் உன்னத
உலக இலக்கியங்களுக்கான -
கருப்பொருட்கள், கடலளவு இங்கே காத்துக் கிடக்கின்றன!
அநீதியின் வடிவமே எமது எதிரி
அழிப்புத்தான் அவனது செயற்பாடு
நீதியும் உண்மையும் நெருப்புக்கு நிகரானவை.
அவை இரண்டுமே எமது ஆயுதங்கள்
ஆகவே நாம் நெருப்பு அவன் (எதிரி) சருகு!
நாம் புயல் அவன் புழுதி!
இனி எங்கள் உவர் நிலங்களிலும்
கனி மரங்கள் காய்த்துக் குலுங்கும்
எப்படியெனில் அநியாயங்களின் சின்னமான
எதிரியின் உடல்கள் அந்த நிலங்களில் உரமாகப் போகின்றன
ம்...... வாருங்கள் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு நிலத்தை வளமாக்க........

■ அ. எழில்மாறன்
(ஈழநாதம் நான்காம் ஆண்டு நிறைவுப் போட்டியில் முதற்பரிசு பெற்ற கவிதை)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






**இது ஒரு புதிய போர்ப்பரணி !**
பிரபாகரனின் சகாப்தத்துடன் தொடங்கிய ஈழத்தமிழரின் வீரமரபை அடித்தளமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு போர்க்கால இலக்கியம் இது. ஆழமான புரிந்துணர்வை - அளவிட முடியாத அன்புறவை -வாட்டுகின்ற துன்பங்களிலும், பொங்குகின்ற இன்பங்களிலும் பங்கெடுக்கின்ற உயிருக்குயிரான நேசிப்பை -ஒருவரில் மற்றவர் நம்பிக்கை கொண்டு, ஒருவருக்காக மற்றவர் உயிர்கொடுத்துப் போராடும் புலிவீரர்களின் போராட்ட வாழ்வை, தான் தரிசித்த நிகழ்வுகளையும் பெற்ற அனுபவங்களையும், சிறந்த எழுத்தாற்றலுடன் ஓர் இலக்கியப் படைப்பாக வடித்திருக்கின்றான், தன்னை முழுமையாகவே தாயக விடுதலைக்காக அர்ப்பணித்து நின்ற ஒரு புலிவீரன் கப்டன் மலரவன் (லியோ).

அதேவேளை இப் புலிவீரனின் போராட்ட வரலாற்றையும், பல சாதனைகளையும், மறக்க முடியாத பல சம்பவங்களையும் கொண்டதாகவே இந்நூல் இருக்கின்றது. 'போர் உலா' என்ற இந்தப் பரணி, தமிழீழத்தின் போர்க்கால இலக்கியத்திற்குக் கிடைத்த ஒரு பொக்கிசமாக என்றைக்கும் விளங்கும்! . இதனை நாம் இங்கு தொடராகத் தருகிறோம்.

## அத்தியாயம் 8 இன் தொடர்ச்சி

இன்று ஒரு நாகரீக வாழ்வைப் பெற விழையும் நீங்கள், உங்களைப் பிணித்திருக்கும் பழமை வாதக் கோட்பாடுகளை உடைக்க வேண்டும். இறுக்கமான கொம்யூனிசம் நிலவிய சீனாவை, சோவியத் ரஸ்யாவைப் பாருங்கள். சீனாவில் 10 லட்சம் மாணவர், தியனன் - மென் சதுக்கத்தில் ஜனநாயக உரிமை கேட்கின்றார்களே என்றால் அது பெற்றோரின் அனுமதியுடனானது என்பது முற்றான தவறு.

அங்கு கொம்யூனிசப் படைகள் மத்தியில் அவர்கள் இவ்வாறான மாபெரும் ஒன்றுகூடலை நடாத்துகையில், நீங்கள் ஏன் உங்களுக்குக் காவல் செய்யும் போராளிகள் துணையாக இருக்கையில் முற்போக்கு நடவடிக்கைகளில் ஈடுபடாமல் வெறும் மனித பிண்டங்களாக வாழ்கின்றீர்கள்? ஈழத்தின் அனைத்து தரப்பினரும் ஒன்றுசேர்ந்து ஒரு இலட்சியத்திற்காக ஒரே தலைமையில் என்று வீதியில் இறங்கி அணிதிரள்கின்றனரோ, அன்றைய தினமே மாவீரரைக் கௌரவிக்கும் விடுதலைத் தினமாகும். இந்நிலைக்கு வருமுன் மூட சமுதாய கட்டுக்களை உடைத்து, அனைத்து தேச - மனித வளங்களையும் பொருளாதார சமூக மேம்பாட்டிற்காகப் பயன்படுத்துங்கள் இதுவே உலக பொருளாதார ஓட்டத்தில் எங்களையும் தக்கவைக்கும்.

"ஐயா, உங்கட தோட்டம் துறையளைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்கோவன்".

"அதுகளைப் பற்றி சொல்லுறதெண்டா என்ர வாழ்க்கையைப் பற்றி சொல்லுறதுக்குச் சமன்".

"அப்ப ரண்டையும் ஒன்றா தெரிஞ்சதாப் போகும்" நான், உற்சாகமூட்டினேன்.

"பொறு தம்பி வாறன். உவன் உந்த சுருட்டுக் கட்டை எங்கே 'வைச்சவன்"? தனக்குள் இழுத்தபடி மண் அறைக்குள் நுழைந்தார்.

கடப்புத்தடிகளை அகற்றியபின் இளைஞன் ஒருவன் வந்தான். தலைவாசலுக்குள் நுழைந்ததும் சிநேகிதமான ஒரு சிரிப்பை வீசியபடி, "அப்பா" என்றபடி அறைக்குள் நுழைய, "உந்தச் சுருட்டுக் கட்டு எங்க மோனை"? என்றார் அப்பா.

சிறிது நேரத்திலை சுருட்டு ஒன்றைப் பற்றவைத்து, அதை அணையவிடாது அடிக்கொரு தடவை இழுத்தபடி வெளியே வந்து, எதிர்க்குந்தில் அமர்ந்தார்.

"சுறுட்டு நல்ல விருப்பம் போல"? வாத்தியார் கூற "ஆருக்கு உமக்கோ"? என மாஸ்ரரைப் பார்த்து வாயில் விரலை வைத்து எச்சரித்தார். கிழவரிற்கு, பழைய புராணங்களைப் புரட்டிப் பார்க்க இருவரும் அகப்பட்டோம்.

"எனக்குத் தம்பி இருபது இருபத்தைஞ்சு வயசிருக்கேக்க உந்த குளத்தை வெள்ளையனுகள் வந்து புதுசா பெரிப்பிச்சு கட்டினாங்கள். அப்ப நிறையத் தண்ணி நிற்கும். அவங்கள் சொன்னவங்கள், யாரும் காடு வெட்டி கமஞ்செய்தா ஒரு ஐந்து வருசத்தில் சொந்தமாக காணி தருவோம் என்றவங்கள். எங்கட சனங்கள் எங்க ஒருத்தனும் மாட்டனெண்டுட்டாங்கள்".

ஏனப்பு வசதியான நிலந்தானே"?

"இப்ப இப்படி சொல்லுவியள், அப்ப ஒரே ஆனைக்காடு. மனிச வாடையே காட்டேலாது. வெள்ளைக்காரனும் துவக்கோடதான் வருவான்".

"பிறகு நாங்கள் எப்படி. . . "?

"பொறன்". ஒரு தம் இழுத்துவிட்டார்.

"வீட்டில ஆச்சியும் அப்புவும் அறுதியாச் சொல்லிப் போட்டினம்,

நீ போகாதையென்று. ஆனா எனக்கு மனம் கேக்கேல்ல. நைசா வெள்ளைக்காரங்களைப் பிடிச்சு ஒரு துவக்கு வாங்கிப் போட்டன். அதுக்கு அப்பு குதிச்ச குதி! **ஆற்றா உன்னை துவக்கு வாங்கி வீட்டுக்கை கொண்டரச் சொன்னது. என்று திட்டிச்சு மனுசன்.** நான் விடாமல் வந்து குளத்துக்கு நல்லா நீர் ஏறக் கூடியதாய் காணியை வெட்டிப் போட்டன். ஒவ்வொரு வருசமும் தண்ணி தட்டுப்பாடில்லாமல் பயிரெல்லாம் நல்லா வளர்ந்து வர, பிறகு மிருகமெல்லாம் பூந்து அழிச்சுப் போட்டுப் போடும்"!

"உங்களுக்குச் சலிக்கேல்லையே"?

"நான் விடேல்லை, தொடர்ந்து செய்து செய்து கொஞ்சம் கொஞ்சமா தேடினேன். பிறகு கையோடை ஒரு கலியாணம் செய்து கொண்டேன்" புகையை நன்றாக உள்ளிழுத்துவிட்டபின் காறித் துப்பினார்.

"பிறகுதான் உவன் சிவலை மணியம், செல்லத்துரை, வேலன் ஆட்கள் வந்து குடியேறினவங்கள். எல்லாம் நான் இருக்கிற துணிவுதான்". கிழவர் புழுகத் தொடங்குவதை சுவாரசியமாகக் கேட்டோம். "ஒருநாள் இரவு உந்த மேட்டிலதான் அப்ப என்ர குடிசை. வேலன் ஓடிவந்தான் "ஐயோ வெள்ளையம்மான் நாலைந்து யானை புலவுக்க பூந்து, தின்னுதுகள் வெடிபோட போகுதுகளில்லை. நீங்கதான் ஒருக்கா வரவேணும்" என்று.

என்னடா கரைச்சல் என்று போனா ஆனைகள் நிண்டினம். எனக்குத் தெரியேல்ல. கொஞ்சம் வெறியுந்தான். அவன் வேலன் நின்றது எனக்குத் தெரியாது. இருந்தாப்போல மூசிவிட்டுது ஒரு ஆனை. பங்க போய் விழுந்தன். திரும்பிப் பார்த்தன். அஞ்சாறு கண்ணுகள் தெறித்துக்கொண்டு நின்றதுகள். ஓடவும் பாக்கியில்ல கிடந்தபடி வைச்சன் வெடி, அதுவும் ஒரு கையாலதான். விழுந்ததில மற்றக்கை பிரண்டு போச்சு. எல்லா ஆனையும் பார்த்துப் பார்த்து ஓடிச்சுது. அடுத்த நாள் காட்டுக்குள் ஒரு ஆனை கிடந்தது என்று சொன்னாங்கள், வெள்ளையனும் சிறீலங்கன்களும் எனக்குக் கையெல்லாம் கொடுத்தாங்கள். அதுவல்லோ காலம்"!

"அப்ப நீங்கள் பொல்லாத வேட்டைக்காரன்தான்"?

"ஓ, வைச்சனென்றால் புள்ளி தவறாது, ஞாயமாய் வேட்டையாடுவன். பிறகு பிள்ளை குட்டிகள் பிறந்து வளர்ந்து இப்படியிருக்கிறன்".

இம் என அவர் இழுக்கவும் துப்பாக்கி வேட்டுக்கள் சரமாரியாகக் கேட்கவும் சரியாக இருந்தது. துரிதமாக எங்களது அணிகளை நிரைப்படுத்தி சில போராளிகளைத் தேர்ந்தெடுத்தபின் ஏனைய போராளிகளைக் குழுக்களாக்கி எமது பீரங்கிகளை சூழ்ந்து வியூகமாக காவலில் ஈடுபடுத்த அனுப்பியபின் உழவு இயந்திரமொன்றில் 15 பேராக விளக்கை அணைத்தபின் விரைந்தோம். வோக்கிகளை சரியான அலைவரிசையில் இயக்கியபின் கிட்டத்தட்ட சண்டை நடைபெறும் இடத்திலிருந்து 1 மைல் தூரத்தில் நிறுத்தியபின் விரைந்து வியூகமாக ஓடத் தொடங்கினோம்.

எமது வருகையை சண்டையில் ஈடுபட்டுள்ள எமது அணிகளுக்கு அறிவித்த போது எமது தரப்பில் மாதவன் தலைமையேற்று பொருதுவதாக அறிந்து கொண்டோம். புதுவிளான் குளத்திலிருந்து இருளில் பாதையை மாறி காட்டினூடு நடக்க முற்றபட்ட எங்களைப் பின்னால் விரைந்து வந்த குரல் இடைநிறுத்தியது.

"என்ன நானும் வாறன். இப்ப எவ்விடத்துக்குப் போகவேணும்? சொல்லுங்கோ" அருகில் வந்த பின்னர்தான் அவர் அந்த ஐயாவின் மகன் எனக் கண்டுகொண்டேன். கையில் வேட்டைத் துப்பாக்கியிருந்தது.

"அட நீங்களே, எப்படி? வாத்தியார் வீட்டையெல்லோ நின்றனியள். எனக்குத் தெரியாமல் நீங்கள் போட்டியள்; நான் சேட்டும் போடாமல் துவக்கையும் பத்து காட்ரச்சையும் கொண்டு வந்திட்டன். இப்ப எங்க போக வேணும்?

சண்டை நடக்கும் இலக்கையும் அதில் நாம் எந்தப் புறமாகத் தாக்க வேண்டும் என்பதையும் கூற, வாருங்கோ காட்டிறன் என முன்பாக நடந்தார். நான் அவரைத் தொடர ஏனையோர் வியூகமாக வந்தனர். சறுக் சடார் என காட்டுச் செடிகளை முறித்தபடி வேகமாக அவன் சென்ற வேகம் எம்மைத் திணறவைத்தது. விரைவாக நடக்கையில் நாம் அவருக்குச் சமமாக ஓடியே செல்ல வேண்டியிருந்தது.

சிறிது தரித்து ஒருகையால் காலில் ஏதோ எடுத்து எறிந்த பின் வேகமாய்ச் செல்ல "என்ன அண்ணை செருப்புப் போடாமலே வந்தனியள்"? என, "ஓ எங்களுக்கு இதெல்லாம் பழக்கம்" என்றார். வேட்டைத் துவக்கை செடிகளில் படாமல் லாவகமாக அசைத்தபடி நடந்தார். இலக்கை அண்மித்தவுடன் எம்மவர்களை நிலை எடுக்கும்படி கூறிவிட்டு, வோக்கியில் நிலையை மாதவனிடம் கேட்க பிரச்சினைகளையும் எதிரியின் பலம், பலவீனத்தையும் எடுத்துச் சொன்னவுடன் இதற்குரிய கட்டளைகளை, ஏனையோர்க்குப் பிறப்பித்தபின் இருளை ஊடறுத்து முன்னே சென்றோம்.

அடர்ந்த காடுகளை எமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு ரோந்து நடவடிக்கை மிக அவசியமாகும். இடைநடுவில் சூரியனை கருமேகங்கள் மறைக்க சொற்பத்தில் பலத்த காற்றுடன் மழைபொழிய ஆரம்பித்தது. காற்று மரங்களின் கிறீச் சத்தமும் ஊ எனும் பேரிரைச்சலும் எம்மால் எதனையும் அனுமானிக்க முடியாதிருந்தது. தண்டவாளத்தில் நாம் செல்வது கூட மிகச் சிரமமாக இருந்தது. எந்தவொரு பொருளையும் பார்க்க முடியாதவண்ணம் மழைநீர் கண்களை மறைத்து ஓடியது.

எதிர்பாராத திடீர் மழையினால் மிகத் தளர்வுற்ற போதும் ஓரளவு வேகமாக நடந்து ரோந்தை கனகராஜன்குளச் சந்தியின் ஊடாக தொடர முடிவெடுத்தோம். சந்தியை அடைந்த சமயம் மழை ஓரளவு விட்டிருந்தது. மக்கள் திரளாகக் கூடியிருந்தார்கள். அவர்களிடையே காட்டுக்குள் இறங்கிய இராணுவம் பற்றிய செய்திகளும் வதந்திகளும் ஏராளமாக அடிபட்டன. மக்கள் எம்மை வற்புறுத்தி அழைத்துத் தேனீரும் சிற்றுண்டிகளும் தந்து உபசரித்தனுப்பினர்.

ஏறத்தாழ அவர்களிற் பெரும்பான்மையான ஆண்கள் வேட்டைத் துப்பாக்கிகளையோ, கட்டுத் துப்பாக்கிகளையோ வைத்திருந்தார்கள். திடீரென அவர்களிடையே சலசலப்பு ஏற்பட்டது. சைக்கிளில் வந்து இறங்கிய இருவரைச் சுற்றி கும்பலாகக் கூடி உரத்துக் கதைத்தனர். ஒருவரை ஒருவர் இடித்துக் கொண்டனர். என்ன? என்னவாம் நடந்தது? பல கேள்விகளிற்கு விடை பகர்ந்தான், வந்த குடும்பஸ்தனில் ஒருவன்.

"அந்த கனகராஜன் கட்டைப்புலவு இருக்கல்லே? அதைச் சுற்றி வெளிதானே? வெளியால புலவுக்குப் போன பிள்ளை ஒன்றை சுட்டுப்போட்டான் ஒளிச்சிருந்த ஆமி".

"சுட்டுட்டானோ? பிள்ளை செத்துப்போச்சே"?

"சீ காலில்தான். வெடிச் சத்தம் கேட்ட உடனே கடைசித் தெருவில நின்றவங்கள் துரத்திக்கொண்டு போனம். மூன்று ஆமிக்காரங்கள் விழுந்தடிச்சு ஓட துரத்திக்கொண்டு போனோம் ஒரு பற்றைக்குள் ஒளிச்சிட்டாங்கள். பிறகு சுத்தி வளைச்சு இரண்டு வெடி வைச்சம். எங்கட அப்பு அண்ணை சிங்களத்தாலை கதைக்க சரணடையிறான் என்டானாம். பிறகு எங்கடையாள் மிலாந்திக் கொண்டு நிற்க பத்தைக்கால ஒளிச்சு இரண்டு பேரைத் தள்ளி விழுத்திப் போட்டு ஓடிட்டாங்கள், அதுதான் உதெல்லாம். களுசறையள் அம்பிடேல்ல.

"ச்சா வீணா விட்டிட்டியள்" தொந்தி வயிறு குடும்பஸ்தவர் தனது தலையில் அடித்தார்.

ஆவலாக நின்ற பலரிற்கு ஏமாற்றமாகப் போக, சீ வீண் என அலுத்தபடி கலைந்தார்கள். ஒரு மனிசி இரண்டு பேரைப் பிடிச்சுக் கொடுத்ததாம். சாப்பிடேக்கை பிடிச்சதாம். பாலத்துக்குள் பதுங்கேக்கை பிடிச்சதாம். எங்கும் இதே கதையாக இருந்தது.

சந்தோசமான சிரிப்புடன் பிர 'தான வீதியில் நடக்க ஆரம்பித்தோம்.

"மாஸ்ரர் எப்பிடி எங்கட சனங்கள்" என்று கேட்க" விட்டா ஆமியை அடிச்சு தின்றுடுவான்கள் போலக் கிடக்கு" என்று சிரித்தார்!

"பின்னர் அவன் உதுக்க இருந்து செய்த அட்டகாசம் எங்களுக்கே தெரியும்? வருடக்கணக்கா வாங்கின சனம் இதுகள்" என்றேன். எதிரே வயோதிபர் ஒருவர் வாயில் சுருட்டுடன் கட்டுத் துவக்கை தோளில் மாட்டியவண்ணம் எம்மைக் கடந்து சைக்கிளில் சென்றார்.

"காம்பை விட்டு கலைச்ச பிறகு சனம் ஆவாவென்று திரியுதுகள். அதற்கு முதல் எங்களோட சேர்ந்து ஏன் சண்டைக்கு வருகுதுகளில்லை? கடைசியாக எட்டிக்கூட பார்க்கேல்லை. சனம் இருக்கோ இல்லையோ என்றுகூடத் தெரியாது". மாஸ்ரர் கூற "இதுதான் மாஸ்ரர் கால மாற்றம் இப்பதான் சனத்துக்கு மாங்குளம் காம்ப் இருக்கக் கூடாது என்கிற தீவிரமும் அதுக்க இருந்தவன்தான் இவ்வளவு காலமும் அநியாயம் செய்தவன் என்ற ஒரு மனோதிடமும் வந்திட்டுது. அவனைக் கலைக்கேக்க இருக்கிற ஆர்வம் இனி மேல் அவங்களை வரவிடாமல் பண்ணுற நிலை இருந்தா அவ்வளவும் போதும்" என்றேன்.

"ஓமோம்" என ஆமோதித்தபடி மாஸ்ரரும் நடந்தார்.

இப்போது நேரம் பி. ப. 6. 15 மதிய உணவு மறந்துவிட்டது. வீதியால் வேகமாக வந்த ஒருவர் சைக்கிளை சரேல் என பிறேக் போட அது 15 மீற்றர் தள்ளிப் போய் நின்றது.

"தம்பியவை தம்பியவை" வேகமாக அழைக்க அருகே ஓடினோம்.

"அந்தப் பக்கம் தெரிகிற முடக்கிருக்கல்லே அதிலை ஒரு கடை கிடக்கு. அதுக்குப் பக்கத்து விட்டில ஒரு தடியன் ஓடுறதையும் ஒரு மனிசியின்ர கத்திற சத்தமும் இடக்கிடை சிங்களப் பேச்சுட் கேட்குது, தம்பி ஆமியாயிருக்கோனும். பின்னேரம் உது வழிய திரிஞ்சவன் என்று சொன்னவங்கள்".

அவ்வளவுதான். வேகமாகக் கட்டளைகளைப் பிறப்பித்து ஓட ஆரம்பித்தேன்.
"எப்படியும் ஒருத்தனையாவது மடக்கோனும். வேகமாய்ப் போங்கடா"! மாஸ்ரர் தொண்டை கிழியக் கத்தினார்.

வளவை அண்மித்தவுடன் இரு அணிகளாகப் பிரித்து, ஒரு அணியை அந்த பெரிய வெளியில் தூரப்புறமாகச் சுற்றி வளைக்கும்படியும் எமது வளைப்பைக் கடந்து வெளிப்புறமாகத் தப்பித்தால் மாத்திரம் சுடும்படி கட்டளையிட்டு ஒரு அணியுடன் கடையை வியூகமாக நெருங்கினேன். கடைக்கு இருவரும் ஏனையோரைக் கொண்டு வீட்டைச் சுற்றிவளைத்தேன்.

தொடர்ச்சி 5ம் பக்கம் ....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போர் உலா.....

நிலையெடுத்து நெருங்க நெருங்க வீட்டுக்குள்ளிருந்து பேச்சுக் குரல்கள் எழுவதும் இடையிடையே உண்மையில் சிங்கள வார்த்தையும், கொச்சைத் தமிழும் கதைக்கப்படுவது கேட்டது. வீட்டை மிக மிக நெருங்கிச் சுற்றி வளைத்தபின் நான் முற்றத்தில் நின்ற நந்தியாவட்டைச் செடியில் மறைந்து கொண்டு அவதானித்தேன். பேச்சுக்களை செவிமடுத்தேன்.

"உன்க்கு கொப்பன் தரவேண்டியதெல்லாம் தந்துதான்ரி அனுப்பினவன். இப்ப என்ன மூஞ்சியோட கொப்பற்ற இழவுக்கு வந்து ஆச்சியின்ர கொடியக் கேப்பா. நானொருத்தன் மடையனென்று நினைச்சியோ"? ஆண் குரல் ஆவேசமாய் ஒலித்தது.

இங்க பாருங்கோ மஸ்தான். நங்கி தெரியாம கேட்டுப்புட்டாங்க. நீங்க சமாதானமாகப் போங்க" சிங்களக் குரல் சமாதானம் பண்ணியது.

" நீ ஆரடா என்னைப் புடிக்க? சிங்கள வடுவா! என்ர சொத்த கேட்டவளை கொல்லாமல் விடமாட்டன்; விடுறா விடுறா! ஆவேசமாக வெறியில் திணறுவது கேட்டது.

"என்ர ஐயோ! பாடையில போவான். அள்ளுண்டு போவான் வெள்ளி விழுந்து வேரோட சாய! இவனைச் சுட ஆளில்லையோ"? பெண் குரல் ஒப்பாரிவைக்க, மெதுவாக விலகி சமிக்கை மூலம் உடனடியாக வெளியேறினோம்! கடையருகே மாஸ்ரர் துப்பாக்கியை தயார் நிலையில் வைத்தபடி தயாராக நின்றார். எம்மைக் கடந்து ஒடும் பட்சத்தில் எதிரிக்கு எச்சரிக்கை வேட்டு தீர்ப்பதற்காக இருந்திருக்கலாம்.

"என்னடாப்பா எங்கை ஆள் மாட்டேல்லையோ?

"வாங்கோவன் பெரியகதை சொல்லுறன்".

ஆங்காங்கே பற்றைகளில் மறைந்திருந்த அனைவரையும் ஒன்று திரட்டியபின் நடந்த சங்கதியைக் கூற -விழுந்து விழுந்து சிரித்தோம். நல்ல விசர் வேலை, வீணான நேரம்! பின்னர் அலுத்துக் கொண்டனர்!

மீண்டும் ரோந்தைத் தொடர்ந்தோம். இருள் சூழ்ந்த நேரமாகையால் மிகுந்த எச்சரிக்கையுடன் நகர்ந்தோம். இடையிடையே மந்திகள் பாய்ந்தும் விலங்குகள் ஓடியும் எமது நேரத்தை விரயமாக்கின.

புதுவிளான்குளத்தை அடைந்த போது நேரம் இரவு 9. 45. அதிகாலை உணவின் பின் எவ்வித ஆகாரமும் அருந்தாது பசிக் களைப்பால் துவண்டு இருந்தோம். புதுவிளான்குள மக்களின் இடியப்பமும் இறைச்சிக் கறியும் இழந்த தெம்பை மீட்டுத் தந்தன. காலை 9. 00 மணயளவில் ஒரு அணியினரைக் காவலில் ஈடுபடுத்தியபின் வளமான புதுவிளான் குளத்துள் நீராடச் சென்றோம்.

ஏற்கனவே திட்டமிட்டபடி இரு குழுவாக நீரினுள் இறங்கினோம். எனது கரையில் நானும் மாஸ்ரரும் டாவினும் இன்னும் இருவரும். மறுகரையில் இதயனும், அழகையாவும் மேலும் மூவரும் இரண்டு குழுவாக நின்று குளித்தோம். நெஞ்சளவு நீரில் அலைகள் தலையளவாக மோதுகையில் மூச்சுத் திணறியது. சிறிது நேரத்தின்பின் இரு அணியினரும் தனித்தனியாக ஒவ்வொருவர் தோள்களில் ஒவ்வொருவராக ஏற இறுதியில் சுமைதாங்கி தள்ளாட சுமைதாங்கியில் இருவர் நிறுத்தப்பட்டார்கள். எமது அணயில் வாத்தியாரும் மறு அணியில் அழகையாவும் மேல் நிற்க சூரன் -முருகன் சண்டை போல பின்னாகவும், முன்னாகவும் ஓடியோடி எதிர்த்தோம்.

மாஸ்ரரும் அழகும் நன்றாக உயரத்தில் ஏற்றபட்டதுடன் இன்றைக்கு வெல்லுறது ஆர் பார்ப்பம் என போட்டியையும் கிளப்பி விட்டோம்!

"டாய் கிட்ட வந்தா உதைப்பேன், குத்துவேன். ஆகாகா"! மாஸ்ரர் கர்ச்சிக்க, எங்க விடுறா பார்ப்பம் என அழகுவும் முறுக இருவரை மோத விடுவதாகவும் பின் கட்டிப்பிடித்து அடிக்கையில் பின்னால் இழுப்பதாகவும் இருந்தோம். இம்முறை அழகுவின் கையுக்குள் மாஸ்ரரின் கழுத்து அகப்பட பொறியில் அகப்பட்ட எலியாகத் திணறி அவனை வயிற்றில் ஓங்கித்தள்ள நாம் சமிக்கை செய்ய இரண்டாமவனாக நின்றவன் இருவரையும் நீரில் தூக்கி எறிய கட்டிப்பிடித்தபடி தொபீர் என விழ, முதலாமவன் இரண்டாமவனைத் தள்ள அவன் தொபீர் என விழ, ஏக ரகளையாக இருந்தது.

கரையில் ஈரம் வடிவாகத் துவட்டியபின் தோய்த்த உடுப்பைப் போட்டுக் கொண்டேனோ இல்லையோ தொபீர் என நீரினுள் வீழ்ந்து அடியைத் தொட்டு வந்தேன். மேலே மாஸ்ரரும் அழகுவும் இடுப்பில் கை வைத்தபடி என்னைப் பார்த்துச் சிரித்தனர்.

"அடேய் எங்களை ஏமாத்த எமனாலும் முடியாதடா" என சினிமா வசனம் பேச, நொண்டியபடி மேல் வந்தேன்.

மதியம் உணவருந்தியபின் விளாக்காடு சென்று விளாங்காய் பறித்துவந்து துருவுபலகை வாங்கித் தேங்காயாகத் துருவி சம்பல் போட்டு உறைக்க உறைக்க ஆளிடம் ஆள் பறித்து உண்டோம். இன்றைக்கு இரவுக்கு எப்படியும் மாஸ்ரருக்கும் அழகுவுக்கும் நான் ஆரெனக் காட்ட வேண்டும் எனத் தீர்மானித்து அங்கு இருந்தவர்களுடன் சகஜமாகப் பழகினேன்.

"ஐயா, பிறகு எப்படி? வேறென்ன புதினம்"?

"என்ன புதினத்தைச் சொல்லுறது. கனகராஜன் குளத்தார் ஆமியளை மடக்கிறான்களாம் இங்கால வரமாட்டேன் என்கிறான்களாம்".

"வந்தா பிடிப்பியளோ"?

"பிடிக்கிறதோ? நான் ஆர் தம்பி? எருமைப்பிடி ஏரம்புவின்ர பொடியன் என்றா எல்லாரும் பீச்சல் பயம்! இப்பவெல்லோ இப்பிடி; எங்கட காலத்தில் எத்தனை குழுவன் எருமையளை பிடிச்சிருப்பம்? உவனை பிடிக்கிறது பெரிய வேலையே"? முந்திய தமிழ்ப் பரம்பரையில் காளைமாட்டை அடக்கிப் பெருமை சேர்ப்பது போல் இந்த மனிதர்கள் துப்பாக்கியுடன் எதிரியைக் கண்டு அடக்கிய மக்கள் இன்று அவர்களை மடக்குதலை வீர விளையாட்டாகக் கைக் கொள்வதும் ஒரு சமுதாயமாற்றமே!

"மாஸ்ரர், நீங்கள் பிடிச்ச காம்பில நாளைக்குப் பால்ராஜ் அண்ணை கொடி ஏத்தப் போறார். சந்தோசமாகப் படுங்கோ"!

யாவரும் படுத்துறங்கினர். நானும் தான்.

காலை வேகமாக எழுந்து புறப்பட்டோம்; மாங்குள முகாமை நோக்கி. இரு உழவுஇயந்திரங்களும் ஊரத் தொடங்கின. முன்பு ஒரு காலத்தில் கொடுமைகள் அனைத்தையும் புரிந்து தனது ஆக்கிரமிப்புக் கொடியை பறக்கவிட்டுக் கொண்டிருந்த அந்த மாங்குள முகாம் இன்று எம்மவர்களால் தகர்க்கப்பட்டு சிதைந்த கோலத்தில் காட்சியளித்துக் கொண்டிருந்தது.

**ஓ, மாவீரர்கள்! எம்மோடு தோளோடு தோள் நின்று போராட்டச் சுமையைப் பகிர்ந்துகொண்ட பராக்கிரமசாலிகள். எதிரியின் உடலிலும் உள்ளத்திலும் ஏன் ஒவ்வொரு அணுவிலும் நுழைந்து அவனைப் பீதியுறச் செய்த மறவர்கள். அரணுக்குள் கிடக்கும் எதிரியை அழிப்பதற்காக குண்டு வில்லையை ஊடறுத்து வெட்டைவெளிகளில் பாய்ந்த அஞ்சா நெஞ்சினர். சில வினாடிகளில் தமது உயிர் தமக்கில்லை எனத் தெரிந்தும் உடல் சிதற கரும்புலியாகி எதிரி முகாமையே இடித்துக் கொட்டிய இலட்சியவாதிகள். இவர்கள்தான் இந்த மாங்குள மண்ணின் தென்றலின் தழுவலில் பவனி வருபவர்கள். குளிர் நீரோடையின் சலசலப்பில் சந்திப்போர்கள். காட்டு மரங்களின் அமைதியில் உறைந்து போய் மெல்லிய கிரீச்சிடலில் புன்னகை புரிவார்கள். இங்கே பொழியும் மழை முத்துக்களில் தோற்றம் பெற்று புனித மண்ணில் முத்தமிடுவார்கள். மெல்லிய நிலவின் நுழைவுகளின் ஊடாய் தவழ்ந்து வந்து தழுவுவர். காட்டு மயலின் வனப்பான ஆடலிலும் வசந்த காலக் குயில்களின் இனிமையிலும் கலந்து எமது உள்ளங்களில் மெல்லப் புகுந்துகொள்வர். தூங்காத தோழர்களை தமது இதமான வருடலினால் தூங்குவிப்பர்.**

**அவர்களின் குருதி தோய்ந்த மண் நாளை வளம் கொழிக்கும்.**

**இந்த எல்லைகளில் அவர்களே காவலாளிகள்.** மீண்டும் மீண்டும் தமிழ்த் தாயினூடாய் வருவர். சூரியன் இங்கே இனிச் சுடாது! ஒவ்வொரு போராளியின் உதட்டசைவிலும் நாவொலியிலும் விழிச்சுடரிலும் மாவீரரே பெற்று நிற்பர். பதிக்க வேண்டிய பாதச் சுவடுகளைப் பக்குவமாய்ப் பதிப்பதென பாலகரைப் பழக்குவர் நாளைய விடியலுக்காக!

இவர்கள் மறையாத சூரியர்கள்!

இவர்கள் ஓடித்திரிந்த பாடித்திரிந்த ஊர்களும் வயல்களும் மதகுகளும் இவர்களை என்றுமே மறக்காது. இயற்கையின் ஒவ்வொரு அசைவிற்கும் உயிர் என நிற்பர்.

இறுதியாக மீண்டும் ஒருமுறை அந்தச் சிதைந்த முகாமை பார்த்தவண்ணம் இருக்க, அது சிறிது சிறிதாகி மறைய ஆரம்பித்தது.

எமது உழவுஇயந்திரங்கள், பீரங்கிகள் சகிதம் மீண்டும் யாழ். நகரை நோக்கிப் பயணிக்க இறுதியாக ஒரே ஒருதரம் கைகளை உயர்த்தி அசைத்துவிட்டுத் திரும்புகிறோம். விழிகளில் நீர் படபடக்கின்றன. மேலே தெளிவான நீலவானத்தில் வெண்மேகக் கூட்டங்கள் சாரிசாரியாக எதிர்த்திசையாய் விரைகின்றன.

தூரத்தே கொக்காவில் கட்டடங்கள் சிறிதாகத் தெரிய ஆரம்பிக்கின்றன.

"விண்வரு மேகங்கள் பாடும், மாவீரரின் நாமங்கள் கூறும், கண்வழி கங்கைகள் பாயும்" எனும் மெதுவான குரல் என் காதுகளில் இசைக்கின்றது.

மாங்குள இராணுவ முகாம் தகர்ப்பு நினைவுகள் இத்தோடு முடிவுறுகின்ற போதும் அடுத்து சிலாவத்துறை நிகழ்வுகள் என் நெஞ்சில் பாயத் தொடங்குகின்றன...

**- மலரவன் (லியோ)**

**■ முற்றும்**

***இவர் சிலாவத்துறைச் சண்டையின் அனுபவத்தைப் பற்றி எழுதத் தொடங்கு முன், 23. 11. - 1992 அன்று நடந்த பலாலி தளத்தின் கிழக்குப் பகுதி மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய மாவீரர்களில் ஒருவரானார்.***


**தமிழர் கலை பண்பாட்டுக் கழக யேர்மன் கிளை நடாத்தும்**

**கரும்புலிகள் நினைவுப் பரிசுப் போட்டி 1994**

தமிழர் கலை பண்பாட்டுக் கழக யேர்மன் கிளை, கரும்புலிகளை நினைவுகூரும் முகமாக 'கரும்புலிகள் நினைவுப் பரிசுப் போட்டி 1994' ஐ நடாத்தத் திட்டமிட்டுள்ளது.

கவிதை, கட்டுரை, பேச்சு ஆகிய துறைகளில் போட்டிகள் நடாத்தப்பட உள்ளன. கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு என வயது அடிப்படையில் போட்டியாளர்கள் பிரிக்கப்படுவர்.

**விண்ணப்ப படிவங்களுக்கும் மேலதிக விபரங்களுக்கும்:-**

K. SIVANATHAN
STEIN STR - 18
37441 BADSACHSA

என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளும்படி தமிழர் கலைபண்பாட்டுக் கழக யேர்மன் கிளை கேட்டுக் கொள்கிறது.







**மாவீரர் வெற்றிக்கிண்ண விளையாட்டுப் போட்டி 1994**

அன்பார்ந்த யேர்மன் வாழ் தமிழீழ மக்களே! தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் உயிர் நீத்த மாவீரரை நினைவுகூருமுகமாக தமிழ் மக்களிடையே விளையாட்டுத்துறையை ஊக்குவிப்பதற்காக தமிழ் மாணவர் அமைப்பின் யேர்மன் கிளையினரால் கீழ்வரும் திகதிகளில் விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்படுகின்றன.

| காலம் | நேரம் | இடம் | போட்டிகள் |
|---|---|---|---|
| 28.05.1994 | 8.00 மணி | GESAMTSCHULE<br>HALLE 2<br>MARK STR<br>44866 BOCHUM | கரப்பந்தாட்டம் |
| 02.07.1994 | 8.00 மணி | MENDESSPORT PLATZ<br>FREDEN BAUM<br>44147 DORTMUND | உதைபந்தாட்டம் |
| 06.08.1994 | 8.00 மணி | GRENZLAND STADION<br>JAHN PLATZ - 20<br>41236 MONCHENGLADBACH | மெய்வல்லுனர் |

**விளையாட்டுப் போட்டியின் இறுதிநாளான 06-08-1994 அன்று அணிவகுப்பு, வினோத உடைப்போட்டி, பரிசில்கள் வழங்கல் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும். இப்போட்டிகள் சிறப்புடன் நடைபெற அனைத்து தமிழீழ மக்களும் திரண்டு வந்து விளையாட்டு வீரர்களையும், வீராங்கனைகளையும் ஊக்கப்படுத்துமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

**-நன்றி-**

**தமிழ் மாணவர் அமைப்பு - யேர்மனி** T.S.O.e.V Postfach 101133, 41411 Neuss, Tel:02131/103821, 05251/6694


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிறு கதை

# விழித்துணை

ப.கேதீஸ்வரநாதன்

கடற்கரைக் காற்றின் குளிர் மயிர்க் கால்களினூடு நுழைந்து உடலைச் சில்லிட வைத்துக் கொண்டிருந்தது. இருளின் பிடியில் நிலம் சிக்கியிருந்தது. தோள்களில் கிடந்த பைகளைக் கீழே வைத்த கோகுலன் நெஞ்சின் குறுக்கே கைகளை வைத்து இறுக்கிக் கொண்டான்: "மழை வந்தால் குளிரிலை விறைச்சே செத்துப்போடுவன்" என்று வானத்தை தனது விழிகளால் தடவிக் கொண்டான். "இப்ப மழை மேகம் இல்லாட்டிலும் மார்கழி மாதத்திலை எந்த நேரமும் மழை வரும்; வந்தா அவ்வளவுதான்" என்று நினைத்த கோகுலனுக்குச் சிரிப்பு வந்தது. "போனமுறை கிளாலியைக் கடக்கேக்கை உயிருக்குப் பயந்த நான் இண்டைக்கு குளிருக்குப் பயப்பிடுறன். பூநகரி அடிச்சு பாதையில பிரச்சினை இல்லை எண்ட உடனே குளிர் தெரியுது" என்று சிந்தித்தான். கையில் இருந்த மணிக்கூட்டைப் பார்த்த கோகுலன் "இன்னும் அரை மணித்தியாலம் எண்டாலும் செல்லும்" என்றபடி கிடைத்த ஒரு இடத்தில் அமர்ந்து கொண்டான்.

போன வருடம் பேராதனைக்குப் போன கோகுலன் இன்று தான் யாழ்ப்பாணம் திரும்புகிறான். கிளாலிப் பயணம் பாதுகாப்பானதாகி விட்டது என்று அறிந்தவுடன் கிடைத்த விடுமுறைக்கு ஊருக்கு என புறப்பட்டு விட்டான். இந்தக் கொஞ்ச நாளிலை எவ்வளவு மாற்றங்கள். நேவியின்ரை அட்டகாசம் எல்லாம் நிண்டு இப்ப கிளாலியாலை பயணம் எண்டறது சாதாரண ஒன்றாப் போச்சு. போனமுறை கிளாலியைக் கடக்கேக்கை... என எண்ணியபடி கோகுலன் பழைய நினைவுகளுள் மூழ்கிப் போகிறான்.

***கடற்புலிகளின் படகு ஒன்று கரையை ஒட்டி கடலில் அலைகளின் தாலாட்டில் ஆடிக்கொண்டிருந்தது. படகின் விளிம்பில் இருந்த பிருந்தன் சுற்றிப் பார்க்கிறான். பயணிகளின் படகுகள் புறப்படுவதும் பயணிகளின் ஆரவாரமும் அவன் கண்ணில் தெரிந்தன. 'ரெண்டு மாதத்துக்கு முதல் போர்க்களம் போல இருந்த கடல் இண்டைக்கு சனம் பயமில்லாமல் போகக்கூடியதா மாறியிட்டுது. இரவிரவாய் காவலுக்கு ஓடித் திரிந்த எங்களுக்கும் ஓய்வு. எத்தனை உயிரிழப்புகளுக்குப் பிறகு. எத்தனை போராளிகளின்ரை தியாகத்துக்குப் பிறகு இதைச் சாதிச்சிருக்கிறம்?' என்ற சிந்தனை பிருந்தனுக்கு சீலனின் நினைவுகளை மீண்டும் இழுத்து வருகிறது.***

● ● ●

பொன்னுத்துரை வாத்தியாரின் வீடு களைகட்டியிருந்தது. இன்று அவரின் ஒரே மகன் கோகுலன் பேராதனைக்குப் போகப் போகிறான். கோகுலனுக்கு பொறியியல் துறைக்கு அனுமதி கிடைத்திருந்தது. இன்றே எப்படியும் புறப்பட்டாக வேண்டுமென்று கோகுலனுடன் பேராதனைக்குப் போகவுள்ள நண்பர்கள் முடிவெடுத்திருந்தார்கள். வாத்தியாருக்கு இரண்டு நாட்களாக மனதில் ஒரே கலக்கமாக இருந்தது. இத்தனை நாளும் மகனின் சாதனையை எண்ணிப் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தவருக்கு இப்போது மகிழ்ச்சி மறைந்து கலக்கம் தோன்றிவிட்டது.

பேராதனைக்குப் போவதென்றால் முதலில் கிளாலியைக் கடக்க வேண்டுமென்ற உண்மை வாத்தியாரை மட்டுமல்லாது கோகுலனின் தாய் பார்வதம், தமக்கை மாலினி, கோகுலன் என எல்லோரையும் கலக்கியிருந்தது. நாலு நாளைக்கு முன்னாலும் ஒரு பயணிகள் படகு சிறீலங்காக் கடற்படையிடம் சிக்கியதாக நாளிதழ்களில் செய்தி வெளிவந்திருந்தது.

மகனை எப்படியாவது கப்பலில் அனுப்பி விடலாம் என்று வாத்தியார் கச்சேரிக்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்குமாக நாயாய் அலைந்தார். ஒன்றும் சரிவரவில்லை. "பேசாமல் கோகுலனை அப்பவே ஆர்ட்சையோ கொமேர்சையோ படிக்கச் சொல்லி சொல்லியிருக்கலாம். இப்ப யாழ்ப்பாணக் கம்பசிலையே படிக்கக் கூடியதா இருந்திருக்கும்" என்று வாத்தியார் அங்கலாய்த்துக் கொண்டார். "எங்கடை ஊருக்குள்ளை வந்து பாதையை மூடிக்கொண்டு இருக்கிறான்கள். கிடைக்கிற பாதையாலை போற சனத்தையும் வந்து வெட்டுறாங்கள். இந்த அநியாயப்படுவான்களைக் கடவுள் கேட்கிறாரில்லையே" என்று கடவுளுடன் பேசிக் கொண்டிருந்தார்.

பார்வதத்திற்கு மகனையும் கணவனையும் நினைக்க கவலையாக இருந்தது. கிளாலியை மகன் கடக்கப் போகின்றான் என்றதுமே அவர் கோயில்களுக்கு நேர்த்திகள் வைக்கத் தொடங்கிவிட்டார். "கடவுளே, என்ரை பிள்ளையாரே கோகுலனை நீதான் பத்திரமாய் காப்பாற்ற வேணும். இந்த மனுசனும் ரெண்டு நாளா ஒருமாதிரி இருக்குது. நெஞ்சு வருத்தம் இருக்கு. யோசிக்கக் கூடாது எண்டு டாக்குத்தரும் சொன்னவர். இந்தாளின்ரை கவலையைக் நீதான் குறைச்சு இந்தாளின்ரை நெஞ்சுக்குப் பலம் கொடப்பா" என்று அடிக்கடி வேண்டிக் கொண்டார். கடவுளை வேண்டியபடி மாலினியின் துணையுடன் பயணத்திற்குத் தேவையானவற்றை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தார் பார்வதம்.

*பிருந்தனுக்கு ஒரு நாளும் நோய் நொடியென்று படுத்துப் பழக்கமில்லை. என்றும் இல்லாத விடயமாய் இன்று கடுங் காய்ச்சலும் தலையிடியும் பிருந்தனை வாட்டி எடுத்துக் கொண்டிருந்தன. நேரம் ஆக ஆக நடுக்கமும் சேர்ந்து கொண்டது. போர்வையை இழுத்து இறுக்கமாகப் போர்த்துக் கொண்டான். ஆனாலும் குளிரைத் தாங்க முடியவில்லை. காய்ச்சலின் தீவிரத்தினால் பிருந்தன் முனகத் தொடங்கினான்.*

இராத்திரி கடற் காவலுக்குப் போய் விட்டு வந்து படுத்திருந்த சீலனுக்கு பிருந்தனின் முனகலால் விழிப்புத் தட்டியது. பிருந்தனின் நெற்றியில் தனது கையை எட்டி வைத்தான் சீலன். நெருப்புச் சுடுவது போல இருந்தது. "டே பிருந்தன் என்ன செய்யுது? சரியான காய்ச்சலாக் கிடக்கு. வாவன் கொண்டு போய்க் காட்டுவம்" என்றவாறு சீலன் பாயைவிட்டு எழுந்தான்.

"இல்லை மச்சான் இப்ப வேண்டாம். பனடோல் போட்டாச் சரியாப் போயிடும். ரெண்டு பனடோல் எடுத்துத் தா. இண்டைக்கு இரவு கடல் காவலுக்கும் போக வேணும். நாளைக்கு வந்து காட்டுவம்" என்று மறுத்தான் பிருந்தன்.

"விசர்க்கதை கதைக்கிறாய். இந்தக் காய்ச்சலோடை இரவு முழுக்கக் கடல்லை நிக்கப் போறியோ? இண்டைக்கு நான் போவன். நீ வா போய் மருந்தெடுத்துக் கொண்டு வருவம்" என்றவாறு மோட்டார் சைக்கிளை சீலன் எடுக்கப் போனான்.

தேச விடுதலைக்காகப் போராட என வீட்டிலிருந்து புறப்பட்டு வந்த பிருந்தனுக்கு சீலன் பயிற்சி முகாமில் அறிமுகமானான். சீலனின் கலகலப்பான சுபாவமும் திறமைகளும் பிருந்தனை சீலனுடன் நெருக்கமாக்கின. பயிற்சி முடிந்ததும் இருவரும் ஒரே குழுவில் இணைக்கப்பட்டார்கள். பல சண்டைகளுக்கும் ஒன்றாகவே போனார்கள். ஒரு சண்டையில் எதிரியின் சுடும் பரப்புக்குள் காயம்பட்டு வீழ்ந்து கிடந்த பிருந்தனை தனது உயிரையும் பாராமல் சீலன் சாமர்த்தியமாக மீட்டு மருத்துவக் குழுவிடம் அனுப்பி வைத்தான். வைத்தியசாலைக்கு பிருந்தன் வந்ததன் பின்னாலேயே சீலனும் காயம்பட்டு வந்து சேர்ந்தான். இருவரும் வைத்தியசாலையிலும் காயம்பட்டோருக்கான முகாமிலும் ஒன்றாக இருந்தார்கள்.

காலம் இருவருக்கிடையிலான நட்பை மேலும் மேலும் இறுக்கமாக்கியது. தென் தமிழீழத்தைச் சேர்ந்த சீலனுக்கு பிருந்தனின் பெற்றோர் அம்மா, அப்பாவாகிவிட்டனர். சீலன் நல்ல அரசியல் தெளிவு உடையவன். எதையும் இலகுவாக விளக்கக்கூடியவன். விடுதலை என்றால் சிங்கள ஆட்சியை தமிழீழத்திலிருந்து அகற்றுவது தான் என்று எண்ணியிருந்த பிருந்தனுக்கு, சமூகப் புரட்சி பற்றியும் அதன் தேவை பற்றியும் விளக்குவான் சீலன்.

கடற்புலிகளின் வளர்ச்சியோடு சீலனும் பிருந்தனும் கடற்புலிகள் அணியில் இணைக்கப்பட்டனர். பயிற்சிகளை முடித்துக்கொண்ட சீலனுக்கும் பிருந்தனுக்கும் ஒவ்வொரு குழுவை நடாத்தும் பொறுப்பு வழங்கப்பட்டது. இருவரது குழுக்களும் கிளாலியில் மக்களின் பயணத்திற்கு காவல் புரியும் கடமைக்கு என அனுப்பப்பட்டன.

"தம்பி ஒருக்கா வெளிக்கிட முதல் பிள்ளையாரிட்டை போயிட்டுவா. அவரிலைதான் முழுப்பாரத்தையும் போட்டிருக்கிறன். மேசையிலை கிடக்கிற தேங்காயையும் கொண்டு போய் அடிச்சிட்டு அருச்சனையும் செய் -ஐயரிட்டை நூலுக்கும் சொன்னனான் கட்டுவிச்சுக் கொண்டுவா" என்று பார்வதம் சொன்னார் -வெளிக்கு வீரமாகக் காட்டிக் கொண்டிருந்த கோகுலன் உண்மையில் உள்ளுக்குள் நடுங்கிக் கொண்டுதான் இருந்தான் -தாய் சொன்னதுதான் தாமதம் உடனே கோயிலுக்குப் புறப்பட்டு விட்டான். இன்று போல் ஒரு நாளும் கோகுலன் கோயிலில் ஈடுபாட்டுடன் வழிபட்டது கிடையாது. கோயிலால் வந்த கோகுலன் உடனே பேருந்து நிலையத்திற்கு புறப்பட ஆயத்தமானான்.

"தம்பி கவனமாய் போயிட்டுவா. நாங்கள் மூண்டு பேரும் உன்னையே நினைச்சுக் கொண்டிருப்பம். அக்கரைக்குப் போன உடனை ஒரு துண்டுக் காயிதம் எண்டாலும் குடுத்துவிடு. விலாசம் எழுதின உறை டயறிக்குள்ளை வைச்சிருக்கு. உன்ரை கடிதம் காணாம அம்மா தண்ணி கூடிக் குடிக்கமாட்டன் தம்பி" என்று மகனை உச்சி மோர்ந்து பார்வதம் வழியனுப்பினாள்

-தந்தையும் தமக்கையும் கோகுலனுடன் பேருந்து நிலையத்திற்கு வந்தனர் -

*பிருந்தனுக்கு மலேரியாவாக இருக்கலாம் என வைத்தியர் சொல்லி மருந்துகள் கொடுத்திருந்தார். யாழ்ப்பாணம் போய் இரத்தம் சோதித்தால் நல்லது என்றும் கூறினார் வைத்தியர். முகாமிற்கு திரும்பி வந்தபின் பிருந்தன் மீண்டும் தான் இன்றிரவு கடலுக்குப் போவதாகக் கூறினான்.*

*'பிருந்தன் நீ இண்டைக்கு ஓய்வெடு -நான் இண்டைக்குப் போவன்' என்று சீலன் கூறினான். 'சீலன் நீ ராத்திரியும் போனனீ. இண்டைக்குப் பகலும் என்னோடை திரிஞ்சு நித்திரை கொள்ளேல்லை' என்ற பிருந்தனை அதட்டி சீலன் படுக்கவைத்துவிட்டு இரவுக் காவலுக்குப் புறப்பட ஆயத்தங்களைச் செய்தான் -*

பேருந்து நிலையத்தில் கோகுலனின் நண்பர்கள் வந்திருந்தனர். வாத்தியார் மகனுக்கு ஆலோசனைகளும் அறிவுரைகளும் வழங்கிக் கொண்டிருந்தார் -பேருந்து புறப்படும் நேரத்தில் வாத்தியாருக்கும் மாலினிக்கும் கண் கலங்கிவிட்டது. கோகுலனது கண்களிலும் கண்ணீர் திரையிட்டது. நண்பர்கள் கண்டால் பகிடி பண்ணுவார்கள் என்ற எண்ணத்தில் கண்களைத் துடைத்துக்கொண்டு நண்பர்களைப் பார்த்தான். அவர்கள் தமது பெற்றோரைப் பார்த்து கண் கலங்கிக் கொண்டிருந்தார்கள்.

கோகுலனின் நெற்றியில் தகப்பன் திருநீறைப் பூசிவிட்டார். அயலில் உள்ள கோயில்களில் எல்லாம் அருச்சனை செய்து திருநீற்றுச் சரைகளை கோகுலனுக்குக் காவலாகக் கொடுத்திருந்தார்கள். அவை சட்டைப் பையிலும் பயணப் பொதியிலும் இருந்தன. பேருந்து அசையத் தொடங்க தந்தைக்கும் தமக்கைக்கும் கைகளை ஆட்டினான் கோகுலன்:

*கடற்புலிகளின் படகுகள் கடலில் இறங்கிவிட்டன. ஒரு படகில் சீலன் நின்றான். அவனது கையிலிருந்த வோக்கி இரைச்சலிட்டுக் கொண்டிருந்தது. ஏனைய கடற்புலிகளின் படகுகளுக்கு உத்தரவுகளை அறிவித்துவிட்டு தான் நின்ற படகை செலுத்துமாறு உத்தரவிட்டான் சீலன். படகு நீரைக் கிழித்துக் கொண்டு வான் நோக்கிப் பாய்வது போல் பயணித்தது.*

வீசியடித்த கடற்காற்றின் குளிர் தெரியாத அளவிற்கு கோகுலனின் மனதில் பயம் நிறைந்திருந்தது. கடலில் நின்ற படகுகள் அலைகளில் ஆடிக்கொண்டிருந்தன. இருளைத் துடைக்க முயல்வது போல் ஒளிக்கற்றை ஒன்று அடிக்கடி வானைத் தடவிச் சென்றது. தென் மேற்கிலும் கிழக்கிலும் தெரிந்த வெளிச்சக் கோளங்கள் நெஞ்சின் படபடப்பை அதிகரிக்கச் செய்தன.

பல்கலைக்கழக மாணவர்கள் என்ற சலுகையால் கோகுலனின் நண்பர்கள் குழாமுக்கு மூன்றாவது படகிலேயே இடம் கிடைத்து விட்டது.

தொடர்ச்சி 7ம் பக்கம் ....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இனவாத உணர்வுமிக்க அதிகாரிகள் வடக்கு திணைக்களங்கள் மீது சந்தேகம்

வடபகுதி அரச திணைக்களத் தலைவர்கள் மீதும், இத்திணைக்களங்களின் செயற்பாடுகள் குறித்தும் இத்திணைக்களங்களின் கொழும்புத் தலைமை அலுவலகங்கள் ஏற்கனவே கொண்டிருக்கும் சந்தேகம் வலுவடைந்து வருகிறது.

வடபகுதியில் இயங்கிவரும் மேற்படி அரச திணைக்களங்கள் மீதும், அத்திணைக்களங்களில் கடமையாற்றிவரும் வடபகுதியைச் சேர்ந்த திணைக்களத் தலைவர்கள் மற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்கள் மீதும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் தலைமை அலுவலக அதிகாரிகள் பல்வேறு சந்தேகங்களைக் கொண்டுள்ளனர்.

குறிப்பாக, மேற்படி சந்தேகத்தை ஏற்படுத்தும் காரணியாக இருப்பது இத்திணைக்களங்களின் தலைமை அலுவலகங்களில் கடமையாற்றும் உயர் அதிகாரகளினது இனவாத உணர்வே என்று கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன. இவற்றைவிட அரச திணைக்களங்களினூடாக வட பகுதி மீது மேற்கொள்ளப்படும் ஒரு சில நடவடிக்கைகளைக் கூட சம்பந்தப்பட்ட திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் நேரடியாக அவதானிக்க முடியாத நிலை இருப்பதாக அவ் அதிகாரிகள் கருதுகின்றனர்.

அரச திணைக்களங்களின் மூலமாக வடபகுதியில் மேற்கொள்ளப்படும் தமது நடவடிக்கைகள் மீதும், தம்மீதும்; தமது தலைமை அலுவலக அதிகாரிகள் சந்தேகம் கொண்டிருப்பது குறித்து வடபகுதியில் கடமையாற்றும் அரச உயர் அதிகாரிகள் கவலையடைந்துள்ளனர்.

தமது திணைக்களத்தின் பணிப்புரைகளுக்கமைய வடபகுதியில் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்கள் குறித்த பூரண விபரங்கள் அடங்கிய அறிக்கைகளை அவ்வப்போது தாம் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தாலும்கூட அவர்கள் தம்மீது கொண்டிருக்கும் சந்தேகத்தைக் கைவிடுவதற்குத் தயாராக இல்லையென்று கூறப்படுகிறது.

அரச திணைக்களங்களின் மூலமாகப் பெறப்படும் சிறுசிறுசெயற்திட்டங்கள் கூட வடபகுதியில் செயற்படுத்தப்பட்டது என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் கொழும்புத் தலைமை அலுவலகம் மேலதிக ஆதாரங்களை அறிந்து கொள்வதில் அதிக அக்கறை காட்டிவருகின்றன.

குடாநாட்டில் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலமாக மேற்கொள்ளப்படும் வீதிகளின் சிறு சிறு திருத்த வேலைகள் நடைபெற்றன என்பதை உறுதிப்படுத்துவதற்கு வீதி திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படும் போது திகதி வாரியாக எடுக்கப்பட்ட புகைப்படப் பிரதிகளை சமர்ப்பிக்கும்படி மேற்படி திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் கேட்டுள்ளனர். இதேபோன்றே ஏனைய திணைக்களங்களுக்கும் தமது செயற்திட்டங்கள் நடைபெற்றதை உறுதிப்படுத்துவதற்கு மேலதிக ஆதாரங்களைக் கோரியுள்ளன. ■

## வழித்துணை..

பயணப் பொதிகளைத் தூக்கி படகினுள் போட்டுவிட்டு படகின் விளிம்புகளைப் பற்றி உள்ளே ஏறினார்கள். கோகுலனின் நண்பர்கள் பத்துப் பேருடன் சேர்த்து இருபத்தைந்து பேர் படகில் இருந்தனர்.

சிறிது தூரம் சென்ற பின்னர் படகின் வெளியிணைப்பு இயந்திரங்கள் இயங்கத் தொடங்கின. அலைகளில் ஆடி ஆடி படகு பயணம் செய்தது. கடல் நீர் படகினுள் தெறித்து ஆட்களை நனைத்தது. முகத்தில் பட்ட உப்பு நீரைத் துடைத்தபடி கோகுலன் இருளை ஊடுருவிப் பார்த்தான். தூரத்தில் பூநகரியின் வெளிச்சமும் இடையில் கடலில் கடற்புலிகளின் படகுகளும் தெரிந்தன.

படகில் இருந்தவர்கள் தங்கள் தங்கள் கடவுள்களை வேண்டிப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தார்கள். படகு ஒரு கோயில் போல பக்தி மயமாக இருந்தது. முருகன், சிவன், யேசு, பிள்ளையார், ஆண்டவர், மாதா, அம்மன், அந்தோணியார் என அனைத்துக் கடவுள்களையும் கடற்காவலுக்கு வரவேண்டும் என அவர்கள் அழைத்துக் கொண்டிருந்தனர். கோகுலனும் தனக்குத் தெரிந்த நான்கு, ஐந்து தேவாரங்களை முணுமுணுத்துக் கொண்டிருந்தான். நண்பர்களுக்குத் தெரியாமல் இருப்பதற்காகத் தலையைக் குனிந்து கொண்டான்.

கோகுலனின் நண்பர்களில் ஒரு சிலர் ஓட்டிகளுடன் கதைத்துக் கொண்டிருந்தார்கள். ஓட்டி ஒருவர் சில நாட்களுக்கு முன் சிறீலங்காக் கடற்படைகள் கிளாலிக் கடலில் நடாத்திய ஒரு பலி எடுப்பை விளக்கமாகக் கூறிக்கொண்டிருந்தார். தான் அப்படகிலிருந்து தப்பிய விதத்தைக் கூறிய அவர் அதுதான் தப்பச் சிறந்தவழி எனக் கூறினார். இவற்றைக் கேட்ட பயணிகளுக்கு வயிற்றைக் கலக்கியது. ஓட்டியின் வாயைக் கிளறிய கோகுலனின் நண்பர்களை ஏனைய பயணிகள் கோபமாகவும் எரிச்சலாகவும் பார்த்தனர்.

பூநகரியிலிருந்து இடையிடையே தேடுதல் வெளிச்சம் இருளைத் துளைத்துக் கொண்டு சென்றது. சிறீலங்கா கடற்படை தங்களைக் கண்டு விட்டதோ என பயணிகள் பயந்தனர்.

பயந்து கொண்டிருந்த பயணிகளுக்கு தெம்பூட்டுவது போல் கடற்புலிகளின் படகுகள் பயணிகளின் படகுகளைக் கடந்து போயின. பயணிகள் நெஞ்சம் நிறைந்த பயத்துடன் கடற்புலிகளின் படகுகளை பெருமையுடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

*வோக்கி சீலனை அழைத்தது. எதிரியின் படகுகள் நாகதேவன் துறையிலிருந்து புறப்பட்டு வருவதாக செய்தி வந்தது. "போட்டை மேற்கிலை திருப்பு" என சீலன் தனது படகை ஓட்டிய தோழனுக்குக் கூறினான். ஏனைய கடற்புலிகளின் படகுகளை தான் போகும் திசையில் வரச் சொல்லி வோக்கி மூலம் உத்தரவிட்டான். 'இண்டைக்கு சிங்களவனுக்கு பாடம் படிப்பிக்க வேணும். எங்கட உயிர் இருக்கிற வரைக்கும் எங்கட சனத்திலை சிங்களவன் கை வைக்க விடக்கூடாது. இண்டைக்கு நல்லா அடிக்கோணும். கவனமா அடிபடவேணும்" என்று தனது படகிலிருந்த போராளிகளுக்கு சீலன் கூறினான்.*

*பயணிகளின் படகுகள் போகும் பாதைக்கு ஒன்று ஒன்றரை மைல் மேற்கில் கடற்புலிகளின் படகுகள் சிங்களக் கடற்படையின் படகுகளை வழிமறித்தன. தமிழ் மக்களின் குருதியை சுவைக்க எண்ணிப் புறப்பட்ட சிங்களக் கடற்படைக்கும் கடற்புலிகளுக்கும் இடையில் நடுக்கடலில் ஒரு மோதல் தொடங்கியது.*

வெடிச்சத்தங்களும் ஒளிப்பொறிகளும் கடலில் நடக்கும் சண்டையின் பரிமாணத்தை பயணிகளுக்கு உணர்த்தின. ஓட்டிகள் சண்டை தொடங்கிவிட்டது என்றும் ஒரு மைல் தூரத்தில் சண்டை நடக்கிறது போல் உள்ளது எனவும் கூறினார்கள்.

கோகுலன் இருந்த படகின் பயணிகள் அனைவரும் படகைத் திருப்புமாறு ஓட்டிகளிடம் மன்றாடினார்கள். "பயப்பிடாதையுங்கோ இன்னும் கொஞ்சத் தூரம் போனா பிறகு நேவி வரமாட்டான். திரும்பிப் போறதெண்டாகூட நேரம் பிடிக்கும்" என்று ஓட்டிகள் விளக்கினார்கள். "பெடியள் நேவியை மறிச்சிட்டாங்கள். இனி விடமாட்டாங்கள். இண்டைக்கு நேவிக்காரர் நல்லா மாட்டியிட்டினம். நீங்கள் பயப்பிடாதையுங்கோ" என்று பயணிகளுக்கு துணிவூட்ட முயன்றார்கள். படகு தொடர்ந்து போய்க் கொண்டிருந்தது.

நேரம் ஆக ஆக சண்டையின் உக்கிரம் அதிகரித்துக் கொண்டே வந்தது. வீசுகின்ற காற்றிலும் உடலை நனைக்கின்ற கடல் நீரிலும் மரணத்தின் சேதி கலந்திருப்பதாக கோகுலன் உணர்ந்தான். இருளினூடு தெரிந்த சன்னங்களின் நெருப்பு திகிலை ஊட்டியது.

பயணிகள் தேவாரம், திருவாசகம், செபம் எல்லாவற்றையும் உரத்த குரலில் கூறத் தொடங்கினார்கள். வரவரப் பிராத்தனைகள் அழுகையாக மாறத் தொடங்கின. கோகுலனுக்கு தேவாரங்கள் மறந்து போய்விட்டன. "பிள்ளையாரே... பிள்ளையாரே" என்று வாய்விட்டுப் புலம்பிக் கொண்டிருந்தான்.

*கடற்புலிகளின் சகல படகுகளிலும் இருந்த வோக்கிகளில் சீலனின் குரல் ஆணைகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்தது. படகுகள் நீரைக் கிழித்துக்கொண்டு பாய்ந்தன. துப்பாக்கி ரவைகளின் பரிமாற்றம் கனமாக இருந்தது. 'மக்களைக் காப்பாற்ற வேணும். எப்படியெண்டாலும் இண்டைக்கு இவங்களுக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேணும்' என்ற சிந்தனை சீலனின் மனதில் நிறைத்திருந்தது. "மச்சான் இண்டையோட இந்தச் சிங்களவன் எங்கடை கடலிலை இறங்கக் கூடாது. பார்த்து அடியுங்கோடா. ஒருத்தனைக்கூட சனத்துக்குக் கிட்ட போகவிடக் கூடாது" என்று கூறிக்கொண்டிருந்த சீலனின் கண்களில், தொலைவில் ஒரு சிங்களக் கடற்படைப் படகுகளத்திலிருந்து நழுவி பயணிகள் படகுகளை நோக்கிப் போவது தெரிந்தது. "போட்டை இடப்பக்கம் திருப்பு ஒருத்தன் நழுவிக் கொண்டு சனத் திட்டப் போறான். விடக்கூடாது துரத்து' என்று ஆணையிட்டான். சீலனின் படகு அந்த சிங்களக் கடற்படையின் படகை நெருங்கியது.*

'கிளாலியில் புலிகள் கடற்படை மோதல்; நான்கு பயணிகள் படகுகளைக் காணவில்லை: ஏனைய படகுகள் திரும்பின' என்ற செய்தி நாளிதழ்களில் தலைப்புச் செய்தியாக வெளிவந்திருந்தது. நாளிதழ்ச் செய்திகள் கோகுலனின் வீட்டில் மரணச் செய்தியாக வந்து சேர்ந்தது.

செய்தியைக் கேட்டதும் பர்வதம் மகனை நினைத்துக் குழறத் தொடங்கிவிட்டார். வாத்தியார் வீட்டில் கேட்ட அழுகை ஒலியால் அயலவர் வாத்தியார் வீட்டில் கூடிவிட்டார்கள். பக்கத்து வீட்டு இராசாத்தி "பர்வதம் மாமி? கோகுலன் திரும்பி வர இல்லையே, கடைக்காரச் சின்னையாவும் ஆலடியில் நல்லதம்பியும் ராத்திரி ஒரு மணிக்கே திரும்பி வந்திட்டினம்" என்று கூறி எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றினர்.

நல்லதம்பி வீட்டிற்கும் சின்னையா வீட்டுக்கும் வாத்தியார் உடனே போனார். அவர்கள் நாலு படகுகளைக் காணவில்லைத்தான் என்று கூறினார்கள். வீட்டிற்குத் திரும்பி வந்த வாத்தியாருக்கு நெஞ்சடைப்பதுபோல் இருந்தது. மகனை நினைத்து கண்ணீர் வடிக்கலானார் வாத்தியார்.

மாலினி தகப்பனுக்கு நெஞ்சு நோ மருந்தைக் கொடுத்தாள். சைக்கிளை எடுத்துக்கொண்டு கோகுலனுடன் பயணம் சென்ற நண்பர்களின் வீட்டிற்கு மாலினி போன போது, அவ்வீடுகளில் ஒலித்த அழுகை மாலினியை வரவேற்றது.

வாத்தியாரின் வீட்டில் சோகம் தனது கால்களை பதித்துக் கொண்டது. தாயும் தகப்பனும் மகளுமாக அழுவதும் தேறுதல் சொல்வதுமாக அன்றைய பொழுது கழிந்தது. பர்வதம் எல்லாக் கடவுள்களையும் திட்டினார். "எல்லாரும் என்னைக் கைவிட்டிட்டியளே என்ரை குஞ்சை என்ன செய்தியள் என்ரை கோகுலனை என்னட்டை இருந்து பிரிச்சுப் போடாதையுங்கோ" என்று அழுதாள். வாத்தியார் சாமியறைக்குள் போய் "பிள்ளையாரே என்ரை பிள்ளை சுகமா இருக்கோணும் அவன்ரை சுகத்துக்கு பதில் வந்தால் உனக்குப் பலகாரப் பூசை செய்யிறன்" என்று நேர்த்தி வைத்தார். மாலினி தாய்க்கு அருகில் இருந்து கண்ணீர் சிந்திக் கொண்டிருந்தாள். சண்டை பிடித்து, அன்பு பாராட்டி, பகிர்ந்துண்டு தன்னுடன் வாழ்ந்த தனது தம்பிக்கு ஒன்றும் நடக்காது என்று அவளுக்கு ஒரு நம்பிக்கை இருந்தது.

● ● ●

வாத்தியாரும், பர்வதமும் மாலினியும் கோயிலுக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். கைகளில் பெரிய தட்டங்களில் பிள்ளையாருக்குப் படைக்க பலகாரங்கள் இருந்தன. மகிழ்வுடன் கதைத்துக்கொண்டு மூவரும் கோயிலுக்குப் போய்க் கொண்டிருந்தார்கள்.

கோகுலன் பயணம் புறப்பட்டு ஐந்தாம் நாள் அவனிடமிருந்து கடிதம் வந்தது. கடலில் சண்டை நடந்தாலும் தானும் தனது நண்பர்களும் பிரச்சினை இல்லாமல் கரை சேர்ந்ததாகவும் ஒரு படகுகூட ஆபத்தில் சிக்கவில்லையென்றும் கோகுலன் எழுதியிருந்தான். கடிதம் கண்ட பிறகு தான் வாத்தியாரின் வீட்டில் மீண்டும் உயிர்க்களை தோன்றியது. கவலையின் முடிச்சுக்கள் அவிழ மகிழ்ச்சி மீண்டும் குடியேறியது. பர்வதம் உடனேயே தான் திட்டிய கோயில்களுக்கெல்லாம் போய் மன்னிப்புக் கேட்டு மகனின் பேரில் அருச்சனை செய்துவிட்டு வந்தார்.

இன்று வாத்தியாரின் நேர்த்திப்படி பிள்ளையாருக்குப் பலகாரப் பூசை. தட்டங்களை மூடியிருந்த நாளிதழ்களை எடுத்துக்கொண்டு தட்டங்களை ஐயரிடம் கொடுத்தார்கள். மனமுருகி ஆனந்தக் கண்ணீருடன் பூசையை மூவரும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். கோகுலனைக் காப்பாற்றிய பிள்ளையாரின் அருள் மூவரினதும் நெஞ்சையும் நிறைத்தது.

ஐயர் கொடுத்த திருநீறை பொதி செய்ய கையிலிருந்த நாளிதழில் ஒரு துண்டை வாத்தியார் கிழித்தார். திருநீறை அத்துண்டில் கொட்டிய வாத்தியாரின் கண்களில் ஒரு படத்துடன் வெளியாகியிருந்த அந்தச் செய்திபட்டது.

'கிளாலிக் கடலில் மக்களைக் காக்கும் பணியில் மேஜர் சீலன் வீரச்சாவு' என்று அந்தச் செய்தி தொடங்கியிருந்தது. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின்

## அவர்களுடனா

**"நீண்ட காலமாகப் பல்வேறு விதமான ஒடுக்கு முறைக்கும் ஆளாக்கப்பட்ட பெண்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தோடு தம்மை இணைப்பதற்கான காரணமாக எது அமைந்தது"?**

"எமது மண் என்கின்ற போது அது பெண், ஆண் என்ற இரு பாலரையும் உள்ளடக்கியதுதான்.



கப்டன் துளசிராம்

எமது மண்ணுக்கு எதிரிகளால் செய்யப்பட்ட, செய்யப்படுகின்ற ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் பெண்கள், ஆண்கள் எல்லோரையுமே பாதித்தது. எமது சமூக அமைப்பில் பெரும்பாலான பெண்கள், ஆண்களைச் சார்ந்து வாழும் நிலையிலே இருப்பதால், எதிரியால் ஆண்கள் மீது மட்டும் நடாத்தப்படும் கொலை, சிறைப்பிடித்தல் என்பனகூடப் பெண்களையே பாதிக்கின்றன.

இவற்றைவிட நேரடியாகப் பெண்கள் மீது பிரயோகிக்கப்பட்ட பாலியல் துன்புறுத்தல், பாலியல் வன்முறை என்பன கூடப் பெண்களைக் கடுமையாகப் பாதித்தன. இப்படி ஒருநிலை தமிழீழத்திலுள்ள முழுப் பெண்களுக்குமே ஏற்படக்கூடிய நிலைமையைத் தடுப்பதற்காகவும், எதிரியை முற்றாக இம்மண்ணிலிருந்து விரட்ட வேண்டும் என்பதற்காகவுமே பெண்கள் விடுதலைப் போராட்டத்தோடு தம்மை இணைத்துக் கொண்டனர்".

**"பெண்கள் விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொண்ட காலப்பகுதிக்கு முன்னர் தமிழ்ச் சமூகத்தில் பெண்கள் நடத்தப்படுகின்ற முறை உங்களைச் சிந்திக்கத் தூண்டியதுண்டா?**

**எல்லோரையும்விட பெண்கள் வித்தியாசமாக நடாத்தப்படுகின்றார்கள் என்பதை உங்களால் உணர்ந்துகொள்ள முடிந்ததா"?**

"ஓரளவு முடிந்தது. எமது வீட்டுக்கு அருகே வசிக்கும் மாமாவும் மாமியும் அரசாங்க உத்தியோகத்தர்கள். இருவரும் ஒன்றாகத்தான் வேலைக்குப் புறப்பட வேண்டும். ஆனால் மாமி அதிகாலை நான்கு மணிக்கே எழுந்து சமையல், வீட்டு வேலைகள் எல்லாம் முடித்து பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பி, மாமாவை எழுப்பி மாமாவுக்கு வேண்டியவற்றைச் செய்து பின்னரே வேலைக்குப் போக வேண்டும். அப்போதெல்லாம் 'மாமா எழு மணிக்கு நித்திரைவிட்டு எழும்பாமல் சிறிது முன்னர் எழுந்து தானும் சேர்ந்து தனது வேலைகளைச் செய்யக் கூடாதா' என நான் எண்ணுவதுண்டு. இந்நிலை பல பெண்களுக்கு உண்டு என்பதும், அவர்களுக்கு சம சம்பளம் இல்லாமல் குறைந்தளவே கிடைக்கின்றது என்பதும், சமூகத்தின் பார்வையில் பெண்கள் ஆணிலிருந்து வெகுதூரம் வேறுபட்டே பார்க்கப்படுகின்றார்கள் என்பதையும் நான் மட்டும் அல்ல பல போராளிகள் போராட்டத்தில் ஈடுபட முன்னரே ஓரளவு புரிந்து கொண்டுள்ளனர்".

**"விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து பயிற்சி பெற்ற பெண்களின் ஆரம்ப கட்டப் போராட்ட வாழ்க்கையைப் பற்றிச் சொல்வீர்களா"?**

"முதன்முதலாகப் பயிற்சி எடுத்தபோது சிறிது கடுமையாக இருந்தாலும், எங்களின் இப்பயிற்சியால் பல பிரச்சினைகள் தீரப்போகின்றன, பலருக்கு விடிவு தேடிக்கொடுக்கப் போகின்றோம் என்ற உணர்வு எங்களுக்கு உந்து சக்தியாக அமைந்தது. முதன் முதலில் ஆயுதத்தைக் கைகளில் வாங்கிய போது குப்பியை அணிந்து கொண்டபோது 'எமது உயிரினும் மேலாக சுதந்திரத்தை நேசிக்கின்றோம். எமது உயிர் எமது உடலில் உள்ளவரை ஆயுதத்தை மேலாகப் பாதுகாப்போம்' என உறுதி எடுத்துக் கொண்டோம். குப்பியை ஒருவித புனித உணர்வுடன் எத்தனையோ இயக்க இரகசியங்களைப் பாதுகாக்க உதவியது என்ற உணர்வுடன் அணிந்துகொண்டோம். முதலாவது களத்தினிலே சிறிது பதற்றம் ஏற்பட்டாலும் எம்மை வழிநடத்தியவர்களால் அப்பதற்றம் போக்கப்பட்டதுடன் குறிபார்த்து தேவையானபோது மட்டும் சுட்டு ரவைகளை அளவுடன் பயன்படுத்தவும் கற்றுக்கொண்டோம். எதிரியை அடித்து விரட்ட வேண்டும் என்ற உணர்வுடன் தான் நாமெல்லாரும் இயக்கத்தில் இணைந்து கொண்டோம் என்பதால், எதிரியை எதிர்கொள்ளும் மனோவலிமை ஏற்கனவே எம்மிடம் இருந்தது. எதிர்கொள்ளும் ஆற்றலையும், தந்திரோபாயங்களையும் காலப் போக்கிலே பெற்றுக்கொண்டோம்.

'முதன்முதலாகப் பயிற்சி எடுத்தபோது சிறிது கடுமையாக இருந்தாலும், எங்களின் இப் பயிற்சியால் பல பிரச்சினைகள் தீரப் போகின்றன. பலருக்கு விடிவுதேடிக் கொடுக்கப் போகிறோம்' என்ற உணர்வு எங்களுக்கு உந்து சக்தியாக அமைந்தது. முதன் முதலில் ஆயுதத்தைக் கையில் வாங்கியபோது, குப்பியை அணிந்துகொண்ட போது, 'எமது உயிரிலும் மேலாக சுதந்திரத்தை நேசிக்கின்றோம், எமது உயிர் எமதுடலில் உள்ளவரை ஆயுதத்தை மேலாகப் பாதுகாப்போம்' என உறுதி எடுத்துக்கொண்டோம். குப்பியை ஒருவித புனித உணர்வுடன், 'எத்தனையோ இயக்க இரகசியங்களைப் பாதுகாக்க உதவியது' என்ற உணர்வுடன் அணிந்துகொண்டோம்".



கப்டன் வானதி

**"இந்திய இராணுவம் இங்கிருந்த காலத்தில் விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் எண்ணிக்கை மிகக்குறைவு. ஒவ்வொருவர் ஒவ்வொரு பக்கமாகச் சிதறி, பின்னர் கானகத்தில் ஒன்று சேர்ந்தீர்கள். கானக வாழ்க்கையிலே பெண் போராளிகளுக்கு ஏற்பட்ட அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்து கொள்வீர்களா"?**

"கானக வாழ்க்கையிலே எங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களை எழுத்தில் வடிப்பது என்பது சிரமம். அவ்வாழ்வை நேரில் காணாதவர்களுக்கு அதைபுரிந்துகொள்வது, நம்புவது சிறிது சிரமம். இருப்பினும் சிலவற்றைக் கூறுகிறேன். காடு என்பது மனிதர்கள் வாழக்கூடிய ஒரு இடம் அல்ல. ஆனால் அங்கு நாமே மரம்வெட்டி, வாளினால் மரம் அரிந்து, அழகாகக் கூடாரம் அமைத்து, எமக்கு வேண்டிய உணவுப் பொருட்களை மூட்டை மூட்டைகளாக நீண்ட தூரம் சென்று சுமந்துவந்து, சமைத்து உண்டிருக்கிறோம். திசைகாட்டியின் உதவியுடன் மட்டும் காடுகளில் உலாவியிருக்கிறோம். இந்திய இராணுவத்தினரை எதிர்கொண்டு மோதி விரட்டியிருக்கின்றோம். நீர் வசதி கிடைக்காத இடத்து நாமாகவே தனித்து நின்று கிணறு வெட்டி தண்ணீரைப் பெற்றுக்கொண்டோம். இன்னும் சொல்லப்போனால் பெண் போராளிகளால் முடியாதது எதுவுமே இல்லை என்ற உணர்வை கானகத்தில் தான் முழுமையாகப் பெற்றுக் கொண்டோம்".

**"பெண் போராளிகள் மக்கள் மத்தியில் உலாவ ஆரம்பித்த காலத்தில் மக்கள் அவர்களை எந்த அளவுக்கு ஏற்றுக்கொண்டார்கள்? பெண் போராளிகள் எவ்வாறு அவர்களை அணுகினார்கள்"?**

"பெண் போராளிகள் மக்கள் மத்தியில் உலாவ ஆரம்பித்த காலத்தில் பல மக்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. 'இவர்களால் எதிரியுடன் போரிட முடியுமா? அவனின் பலத்துக்கு முன் இவர்கள் காற்தூசு' எனக் கதைத்தவர்களும், "வேட்டுக்களுக்கும் செல்களுக்கும் மத்தியில் இவர்கள் நிற்கமாட்டார்கள். ஓடிவிடுவார்கள்" எனக் கதைத்தவர்களும் இருக்கத்தான் செய்தார்கள். ஆனால் பெண் போராளிகள் அவர்களை வெறுக்கவும் இல்லை. ஒறுக்கவும் இல்லை. "நாங்கள் மக்களுக்காகப் போராடுகிறோம். அவர்களை நாம் ஒதுக்கி வைக்க முடியாது. எப்படியாவது அவர்களை இப் போராட்டத்தின்பால் கொண்டு வரவேண்டும்" என்ற தலைவரின் வாசகத்துக்கு இணங்க அவர்களின் வெறுப்புக்களை புறக்கணித்து, அவர்களை எமது வீரமான, நல்ல செயற்பாடுகள் மூலம் கவர்ந்து கொண்டிருக்கிறோம். நிச்சயமாக ஆரம்பத்தில் பெண் போராளிகளை

"ஆண் வேவுப் போராளிகள் வழிகாட்ட, போருக்குப் போன காலம் போய், பெண் வேவுப்போராளிகள் வழிகாட்ட போருக்குப் போகும் இக்கால கட்டத்தில், வரலாற்றுப் புகழ்மிக்க பூநகரிச் சமரில் பெண் வேவுப்போராளி முகுந்தாவின் குழு, ஆண் போராளிகளுக்கு வழிகாட்டும் குழுவாகச் சென்றது. இந்நிகழ்வு பெண்களின் போர் வீரத்துக்கும் உறுதிக்கும் மேலும் சான்று கூறுகிறது".



சிறப்புத் தளப

"சிலாவத்துறை இரா
வானதியின் குழுவை
துவிட்டனர். சிலர்
"நான் பிங்னவாங்கம
அசாத்தியத் துணிவுட
வலிமையும், சொல்
பின்வாங்காமல் போரி



கப்டன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிறப்புத் தளபதி ஜனா

# ன நேர்காணல்



ஜனா அவர்கள்


வெறுத்த, சந்தேகமாக நோக்கிய மக்களின் பார்வை இப்போது பெரிதும் மாறுபட்டுவிட்டது".

***"சராசரிப் பெண்களைவிட பெண் போராளிகள் வேறுபட்ட வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதையிட்டு பெண் போராளிகளின் பெற்றோர்களின் நிலைப்பாடுகள் பொதுவாக எவ்வாறுள்ளன? இந்த வாழ்க்கையை பெண் போராளிகள் ஆரம்பித்த போது அவர்கள் எவ்வாறு ஏற்றுக்கொண்டார்கள்?***

"ஆரம்பத்தில் இப் பெற்றோர்களின் நிலைப்பாடு -தனது குடும்பம் தனது மகள், பாசம் என்ற வரையறைக்குள் கட்டுப்பட்டு நின்றதாலும், சமூகத்தில் பெண்கள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற வரையறைக்குள் அவர்கள் வளர்க்கப்பட்டதாலும், தனது பிள்ளைகளை சமூகம் ஏசும் தூற்றும் என எண்ணியதாலும் சிறிதளவும் அவர்கள் இந்த வாழ்க்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் காலப்போக்கில் தேவைகள்மாற, இராணுவ அழுத்தங்கள் அதிகரிக்க, தாமாகவே இவ் வாழ்வை ஏற்றுக்கொள்ளப் பழகிவிட்டனர். ஆனாலும் தமது மக்களுக்கு ஏதும் நடந்துவிடுமோ என்ற ஏக்கமும் சிறுவயதிலிருந்து ஊட்டி ஊட்டி அவர்களை வளர்த்த விதத்தால் உண்டாகக்கூடிய பய உணர்வுகளும் இவர்களிடம் முற்றுமுழுதாக இல்லாமல் போய் விட்டது என நான் கூறமாட்டேன்".

> "பலாலி இராணுவ முகாமிலிருந்து வெளியேற முயன்ற சிறீலங்கா இராணுவத்தை வெளியேறவிடாமல் சுமார் நான்கு மணிநேரமாக பெண் போராளிகள் தனித்து நின்று போரிட்டு, எதிரிகள் பலரை வீழ்த்தி எம் 203 பிஸ்ரல் உட்பட வேறு சில ஆயுதங்களையும், ஒரு இராணுவத்தின் சடலத்தையும் கைப்பற்றி, பெண்கள் முதன் முதலாக தனித்துப் போரிட்டு ஆயுதம் எடுத்த சாதனையைத் தலைமையேற்று நிகழ்த்தி முடித்த பெருமை கப்டன் அஜித்தாவையே சாரும்".

> வ முகாம் தகர்ப்பு முயற்சியின் போது கப்டன் ன்வாங்கும்படி கூறப்பட்டது. "பலர் காயமடைந் ச்சாவடைந்துவிட்டனர். இத்தனைக்கும் பின்னர் டேன். மேலும் முன்னேறப் போகிறேன்" என முன்னேற முயன்ற கப்டன் வானதியின் மனோ ங்கா வீரமும், பின்னாட்களில் போராளிகளுக்கு உந்து சக்தியாக விளங்கியது".



தனுஜா

***"மகளிர் படையணியின் வளர்ச்சியிலே திருப்பு முனையை ஏற்படுத்திய பெண் போராளிகளையும் சம்பவங்களையும் குறிப்பிட முடியுமா"?***

"மகளிர் படையணியின் வளர்ச்சிக்குப் பல போராளிகள் திருப்பு முனைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இருப்பினும் இதுவரை பெரிய அளவில் குறிப்பிடப்படாத சிலரையும், சம்பவங்களையும் இங்கு நான் குறிப்பிடுகிறேன்.

பலாலி இராணுவ முகாமிலிருந்து வெளியேற முயன்ற சிறீலங்கா இராணுவத்தை வெளியேறவிடாமல் சுமார் நான்கு மணிநேரமாக பெண் போராளிகள் தனித்து நின்று போரிட்டு எதிரிகள் பலரை வீழ்த்தி, எம் 203 பிஸ்ரல் உட்பட வேறு சில ஆயுதங்களையும், ஒரு இராணுவத்தின் சடலத்தையும் கைப்பற்றி, பெண்கள் முதன் முதலாகத் தனித்துப் போரிட்டு ஆயுதம் எடுத்த சாதனையைத் தலைமையேற்று நிகழ்த்தி முடித்த பெருமை கப்டன் அஜித்தாவையே சாரும்.

சிலாவத்துறை இராணுவ முகாம் தகர்ப்பு முயற்சியின் போது கப்டன் வானதியின் குழுவை பின்வாங்கும்படி கூறப்பட்டது. "பலர் காயமடைந்துவிட்டனர். சிலர் வீரச்சாவடைந்துவிட்டனர். இத்தனைக்கும் பின்னர் நான் பின்வாங்கமாட்டேன். மேலும் முன்னேறப் போகிறேன்" என அசாத்



மேஜர் யாழிசை

திய துணிவுடன் முன்னேற முயன்ற கப்டன் வானதியின் மனோவலிமையும், சொல்லிலடங்கா வீரமும், பின்னாட்களில் போராளிகளுக்கு பின்வாங்காமல் போரிட உந்துசக்தியாக விளங்கியது.

ஆனையிறவுப் பெரும் சமரின் போது 'காவலரணைக் கைப்பற்றுவேன். இல்லாவிட்டால் திரும்பிவரமாட்டேன்' என்ற உறுதியுடன், காயமடைந்த பின்னும் மீண்டும் சென்று போரிட்டு வீர மரணத்தைத் தழுவிக்கொண்ட கப்டன் லீமா... அதே சமரில் மிக அருகில் இராணுவம் வந்துவிட்டதால் நிலையெடுத்து அடிபட அவகாசம் இல்லாமல், நின்ற நிலையிலேயே கனரக ஆயுதத்தால் அடித்து பல எதிரிகளை வீழ்த்திவிட்டு தானும் இம்மண்ணை முத்தமிட்ட 2 ஆம் லெப். கோகிலா...

மணலாறிலே இடம்பெற்ற மின்னல் சமரில் பலர் காயமடைந்து, வீரச்சாவடைந்த பின்னரும் தளராமல், பின்வாங்காமல் வீராவேசத்துடன் தனித்து முன்னேறிப் போரிட்டு வீரச்சாவைத் தழுவிக்கொண்ட லெப். சீமா, 2 ஆம் லெப். மாலினி...

கனரக ஆயுதங்களை இலகுவில் கையாண்டு பலரையும் அதில் கைதேர்ந்தவர்களாக்கி மகளிர் படையின் கனரக ஆயுதப் பிரிவை நீண்ட காலம் பொறுப்பேற்று சிறந்த முறையில் வளர்த்த கப்டன் சந்தியா...

யாழ். குடாநாட்டை துண்டாடும் நோக்குடன் ஆனையிறவுப் பகுதியிலிருந்து முன்னேறி வந்த இராணுவத்துடன் மிகமிக தீரத்துடனும் இலாவகத்துடனும் போரிட்டு குழுக்களை வழிநடத்தி இராணுவத்தை பின்வாங்கச் செய்து கவச வாகனங்களைக்கூட கைப்பற்றுவதற்கு உறுதுணை புரிந்த மேஜர் யாழிசை, மேஜர் சுகன்யா...

தனித்து தாக்குதல்களில் மட்டுமே பங்குபற்றிக் கொண்டிருந்த மகளிர் படையணி வேவுபார்த்தலிலும் முன்னேற வேண்டுமென முனைப்புடன் நின்ற கப்டன் தேனுஜாவின் வழியில் சென்று, தனித்து வேவு வேலையில் உற்சாகத்துடனும் ஊக்கத்துடனும் ஈடுபட்ட கப்டன் துளசிராம் கலா...

மேலும் ஆண் வேவுப் போராளிகள் வழிகாட்ட போருக்குப் போன காலம்போய், பெண் வேவுப் போராளிகள் வழிகாட்டப் போருக்குப் போகும் இக்காலகட்டத்தில் வரலாற்றுப் புகழ்மிக்க பூநகச் சமரில் பெண் வேவுப் போராளி முகுந்தாவின் குழு, ஆண் போராளிகளுக்கு வழிகாட்டும் குழுவாகச் சென்றது. இந் நிகழ்வு பெண்களின் போர் வீரத்துக்கும் உறுதிக்கும் மேலும் சான்று கூறுகிறது.

விடுதலைப் புலிகளாகிய எமக்கும் எமது போராட்டத்துக்கும்



மேஜர் சுகன்யா

பெரும் வெற்றியைத் தேடித் தந்த பூநகரிச் சமரில் எம்மை நோக்கி எல்லாப் பகுதிகளிலிருந்தும் துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டுக் கொண்டிருந்த போதும் தளராமல் உறுதியுடன் போரிட்டு போராளிகளின் குழுக்களையும் வழிநடத்தி, தாமும் நேரடியாக சுற்றி வளைப்புகளை முறியடித்துப் போராடி வெற்றிக்குப் பெரும் பங்கு வகித்த கப்டன் சுதர்சனா, மேஜர் வித்தியா...

இவர்கள் எல்லோரினதும் மாறுபட்ட, மிக வித்தியாசமான சாதனைகள் மகளிர் படையணியின் வளர்ச்சிப் போக்குக்கு ஒவ்வொரு படிப்பினைகளாகவும் உந்து சக்திகளாகவும் விளங்குகின்றன. இவர்களின் இந்த வழிகாட்டல்தான் விடுதலைப் புலிகள் மகளிர் படையணியை இன்றும் முன்னோக்கி வளர்த்துச் செல்வதில் பெரும்பங்கு வகிக்கின்றது". ■

நன்றி:' சுதந்திரப்பறவைகள்'



> "முதலாவது களத்தினிலே சிறிது பதட்டம் ஏற்பட்டாலும், எம்மை வழிநடத்தியவர்களால் அப்பதட்டம் போக்கப்பட்டதுடன், குறிபார்த்து தேவையான போது மட்டும் சுட்டு, ரவைகளை அளவுடன் பயன்படுத்தவும் கற்றுக்கொண்டோம். எதிரியை அடித்துவிரட்ட வேண்டும் என்ற உணர்வுடன்தான் நாமெல்லாம் இயக்கத்தில் இணைந்து கொண்டோம் என்பதால், எதிரியை எதிர்கொள்ளும் மனோவலிமை ஏற்கனவே எம்மிடம் இருந்தது. எதிர்கொள்ளும் ஆற்றலையும், தந்திரோபாயங்களையும் காலப்போக்கிலே பெற்றுக் கொண்டோம்".

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழர் தாயகக் கோட்பாட்டிற்கு தமிழ்க் குழுக்கள் இழைத்த பெரும் துரோகம்

பாலகுமாரன்

அண்மையில் 'ஏதோ ஒரு வழியாக' சிங்கள இராணுவத்தால் தமிழீழத்தின் சில பகுதிகளில் ஒப்பேற்றி முடிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எனப்படும் இன்னொரு **'பேரினவாதத்தின் வெளிப்பாடு' பற்றி** தமிழீழ மக்கள் என்ன கருத்தினைக் கொள்ள முடியும்? தமிழீழ மக்களின் விருப்புக்கு மாறாக அவர்களது அடிப்படை சனநாயக உரிமைகளையே கேலிக்கூத்தாக்கிய இத்தேர்தலை, நடத்தியோரும் பங்குபற்றியோரும் வரலாற்றின் பக்கமொன்றை கறைப்படுத்தியதைத் தவிர வேறு எதனை அடையப் போகிறார்கள்? **பதவியில் இருக்கும்போது தாம் நடாத்திய எத்தனை தேர்தல்களில் சர்வதேசத்தின் பல நாடுகளில் சர்வாதிக்க மோசமான அடக்குமுறையாலும் மோசடிகள் மூலம் தம் பதவிகளை உறுதிப்படுத்தியதும்,** பின் அவர்கள் மக்களால் வரலாற்றின் குப்பைக் கூடைக்குள் தூக்கி வீசப்பட்ட தொன்றும் நாம் அறியாத சங்கதியல்லவே.

இத்தகைய நிலையிலேயே இந் நடவடிக்கையில் பங்குபற்றியோரும், பங்குபற்ற முடியாதோரும் இப்போது கூறும் கருத்துக்கள் எவ்வளவு குழப்பகரமானதாகவுள்ளது என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். கழிவு வாய்க்காலை சுத்தப்படுத்தவும், கட்டாக்காலி நாய்களைத் துரத்திப் பிடிக்கவுமே அதிகாரமுள்ள இம்மன்றுகளுக்கு தேர்தலும் ஒரு கேடா? என தொடக்கத்திலேயே ஒரு தமிழ்க் குழு கூறிவிட்டது. இவர்கட்கு ஏனைய குழுக்களைவிட சற்று அறிவு கூட என நாம் அடித்துச் சொல்ல முடியும். ஏனென்றால் இத்தேர்தலில் பங்குபற்ற எந்த தர்க்கரீதியான நியாயத்தையும் முன்வைக்க முடியாது என்பதோடு இத்தேர்தல் நாடகம் அரங்கேறினால் அடுத்த நாடகம் வட -கிழக்கு பிரிப்புக்கான தேர்தல் நாடகமாக அமையும் என்பதும் அது தமது இந்திய சார்பு நிலைக்கு பெரும் குந்தகத்தை மட்டுமன்றி 1987 ஆம் ஆண்டு உடன்பாட்டை முற்றாக முடிவுக்குக் கொண்டு வந்துவிடும் என்பதாவது, இவர்கட்கு புரிந்திருந்தது. இந்தளவு 'அரசியல் ஞானம்' இல்லாத ஏனையோர் பற்றி நாம் என்ன கூறுவதற்கு இருக்கின்றது. **பெரும் ஆபத்தை விளைவிக்கக் கூடிய பனிக்கட்டி மலைகள் கடலில் மிதக்கும்போது அவற்றின் சிறிய மேற்பகுதியே வெளியில் தெரியுமாம். அது போலவே இக்குழுக்களின் அரசியல் நிலைப்பாடு** உண்மையான அபாயத்தை அறியாத குருட்டு அரசியல் வாய்ப்பாடாகிவிட்டது.

இப்போது இவர்கள் என்ன கூறுகிறார்கள்? 'முஸ்லீம் மக்களின் தொண்டமான்' என இப்பொழுது வர்ணிக்கப்படும் 'பதவி விலகல் புகழ்' அஸ்ரப் கூறுகிறார், "சனநாயகத்தை காப்பாற்ற ஐ. தே. கட்சியினதும் அதன் கூட்டாளிகளான தமிழ்க் கட்சிகளினதும் பெரும் ஆபத்துகட்கு மத்தியிலும், ஒரு பெரும் பயங்கரக் கனவாகத் தோன்றிய இத் தேர்தலில் பெரும் மோசடிகளுக்கு மத்தியிலும் பங்குபற்றினோம்" என்கிறார். என்ன கூறவருகிறார் இவர்? இவர் இதே கூற்றினை இந்திய இராணுவம் மாகாண சபை தேர்தலை நடாத்தியபோதும் கூறினார் என்பது இங்கே தொடர்புபடுத்தவேண்டிய செய்தி. (அவரது இப்போதைய பதவி விலகல் நாடகம் என்பது வரப்போகும் தேர்தல்களில் தமக்குச் சார்பான அனுதாப அலையை வீசச் செய்து மீண்டும் பதவிக்கு வருவதே என்பது, பிறருக்குப் புரியாது என்று அவர் நினைக்கின்றார் போலும். )

எதிர்பார்த்தது போலவே ஐ. தே. கட்சி பெருத்த ஆரவாரம் செய்தது. 1950 -60 களில் அரசியல் நிலைப்பாட்டிலேயே தேங்கிப் போய் வளர்ச்சி காணாத டி. - பி. விஜேதுங்கா, ஜனநாயகத்திற்கு கிடைத்த வெற்றி, இணைப்பிற்குக் கிடைத்த தோல்வி, இருப்பது இனப்பிரச்சினையல்ல என்பதற்கான அத்தாட்சி என ஆர்ப்பரித்தார். ஆனால் ஏனைய தமிழ்க் குழுக்களோ தேர்தல் முடிவுகள் குறிப்பது ஜனாதிபதிக்குக் கிடைத்த பெரிய தோல்வி என்றும் இருப்பது இனப்பிரச்சினையே என்பதற்கான சான்று என்றும் அடிக்குரலில் கூறி வருகின்றனர். இவற்றில் எது உண்மை என்கிற ஆய்வில் நாம் ஈடுபடத் தேவையில்லை. **ஏனென்றால் பேரினவாத சிங்கள அரசையும் அதன் ஏவல் நாயான சிங்கள இராணுவத்தையும் சார்ந்து நிற்கும் இவர்கள் தமிழீழ மக்கட்கு முன் அரசு வேறு, இராணுவம் வேறு, புலிகள் வேறு, இனப் பிரச்சினை வேறு, அரசியல் தீர்வு வேறு, இராணுவத் தீர்வு வேறு என செப்பிடுவித்தை காட்டுகின்றனர்.** முன்னர் கொழும்பிலே கொஞ்சிக் குலாவிவிட்டு தேர்தல் வரும்போது தமிழீழ மண்ணிலே வந்து 'உயிர் தமிழுக்கு உடல் மண்ணுக்கு' என முழக்கமிட்டு எம் மக்களை அரசியல் படுகுழிக்குள் தள்ளி விட்டவர்களின் **அடுத்த வாரிசாக இவர்கள் தோற்றம் பெறுவது ஒரு அபத்தமான முரண்பாட்டினையும் குறிக்கும் பெருத்த அவலமாகும்.**

இத் தேர்தலில் பங்குபற்றியதன் மூலம் பெரும் 'வரலாற்றுக் குருடராக', தமிழினத்தின் அடிப்படை உரிமைகட்கே பெரும் துரோகம் செய்தவராக தாம் மாறிவிட்டதைக்கூட இவர்கள் அறிவார்களா என்பதே கேள்வி தான். ஏனென்றால் கடந்த கால தமிழ் அரசியல்வாதிகளால் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்ட உத்தியாகி, பின் அவ்வுத்தியை கடைப்பிடிப்போரின் அரசியல் வாழ்வையே அத்தமிக்கச் செய்து இப்போது தமிழீழ தேசியப் போராட்டத்தின் பட்டறிவாக - ஒரு பரிமாணமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையொன்றை இவர்கள் இப்போது வசதிக்காக மறந்துவிட்டார்கள். இரு பிரதான சிங்கள கட்சிகளினதும் பதவியாசை என்னும் முரண்பாட்டை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தும் இவ்வுத்தியானது இன்று செல்லாக்காசாய் போய் விட்டது. இந்நிலைமையை சாதகமாகப் பயன்படுத்தி சிங்களக் கட்சிகளைப் பதவிக்கு வரச்செய்து அதன் நிழலில் குளிர்காய்ந்தவர்கள், பின் அக் கட்சிகளால் தூக்கிவீசப்பட்ட வரலாறு மறக்கக்கூடியதா என்ன?

இப்போது தனிப் பெரும் தலைவராக தனது அப்போதைய உத்திகள் பற்றி தானே பெருமைப்பட்டவரான தொண்டாவும் இப்பாதையின் முடிவில் அல்லவா நிற்கிறார். அவரது அண்மைக்கால சறுக்கல், சமகால வரலாறு அல்லவா? அவரது முன்னாள் நண்பரும் இப்போது 'இந்து' பத்திரிகையில் 'மனந்திறந்து எழுத' (Plain Speaking) தொடங்கியிருப்பவருமான டிக்சிற் என்ன சொல்லுகிறார்? **மத்திய, தென் பகுதிகளில் வதியும் இந்திய வம்சாவளி தமிழர்களின் குறிப்பிடக்கூடிய தலைவராக சொல்லக்கூடிய தொண்டமானின் பிடி இப்போது தளர்வடைந்து செல்கின்றது. இ. தொ. காவிற்குள் ஏற்பட்டுள்ள நிலைமைகள் அதற்குள் பதற்ற நிலைமைகளை உருவாக்குகையில் பழைய தலைவர்களின் மயக்கத்திலிருந்து இப்போது இளைஞர்கள் விடுபட்டுவிட்டனர்.**

ஆனால் இப்போது எந்த மயக்கத்திலிருந்து விடுபட வேண்டும் என்றும், எத்தவறுகளை தாம் செய்யக்கூடாது என்பதற்காக போராட்ட அமைப்புக்களை உருவாக்கியவர்கள் இப்போது வாக்குக் கணக்குப் போடுகிறார்கள். ஒட்டுமொத்தமாக ஐ. தே. - கட்சிக்கு எதிராக மூன்று இலட்சம் வாக்குகள் விழுந்ததால் சனாதிபதித் தேர்தலில் டி. பியின் நிலைபற்றிய கேள்வியோடு சிலர் ஒருபுறம். மறுபுறத்தில் பல்வேறு குழுக்களாக போட்டியிட்ட முன்னைய தமிழ்க் குழுக்கள் பெற்ற ஒன்றரை (1 1/2) இலட்சம் வாக்குகளும் அஸ்ரப்பின் கட்சி பெற்ற 87 ஆயிரம் வாக்குகளும் ஐ. தே. கட்சிக்கு எதிராக விழுந்திருப்பதால் சனாதிபதித் தேர்தலில் டி. பி. வெல்வதானால் தமது ஆதரவை நாடி வரவேண்டும் என்கிற நப்பாசை சிலருக்கு. சிங்களவரோ தமிழரோ தமது வாக்குகள் இன்றி கிழக்கில் எத்தகைய வெற்றிகளையும் ஈட்ட முடியாது என்று அபாயகரமான அரசியல் விளையாட்டில் அஸ்ரப்பின் முசுலீம் காங்கிரசு மறுபுறம். தமிழர் பகைத்தால் இணைப்பிற்கு ஆபத்து என மிரட்டும் இவர், சனாதிபதி பகைத்தால் முசுலீம் வாக்குகள் அவருக்கு சேராமல் தடுப்பதற்கு தானே சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவேன் என்று வேறு பயம் காட்டுகிறார். விடுதலை என்னும் வேள்வித்தீயிலே உயிரையே தானம் செய்யும் தமிழீழ மக்களுக்கு இத்தகைய மூன்றாம்தர அரசியல் புளித்துப் போனது ஒன்றல்லவா? இத்தகைய அரசியல், தொடக்கத்தில் பதவிகளையும் பணத்தையும் ஒருசிலர் பெற வழிவகுத்து இறுதியில் முதலுக்கே மோசம் என்றாகிவிடுவது என்ன புதிய செய்தியா?

இத்தகைய மூன்றாம்தர அரசியல் குறித்து எம் மக்கள் அதிகம் அலட்டிக்கொள்ளாத போதும், அவர்கள் இதயத்திலே பெரும் வேதனையை, தமது முதுகிலே முன்னாள் தமிழ்க் குழுக்கள் குத்தியமை இன்று ஏற்படுத்திவிட்டது. தேர்தலில் பங்குபற்றியதன் மூலம் தமிழீழ மக்களுக்கு பெரும் துரோகமல்லவா அவர்கள் இழைத்துள்ளனர். தாயகக் கோட்பாட்டிற்கு பெரும் கறையை அல்லவா இவர்கள் ஏற்படுத்திவிட்டார்கள். தென் தமிழீழத்தின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றமே தமிழ்த் தேசியத்தின் உருவாக்கத்திற்கு ஆணிவேரல்லவா? இத் தேர்தலில் பங்குபற்றியதன் மூலம் சிங்கள பேரினவாதிகளின் மாபெரும் இப்பாதகச் செயலையல்லவா இவர்கள் சட்டரீதியாக ஏற்றுக்கொண்டு விட்டார்கள். பட்டிப்பளை கல்லோயாவாக மாறியது. பார்வதிபுரம் பதவியா ஆனது. குமரேசன்கடவை கோமரங்கடவை ஆகியது. கந்தளாய் பறிபோனது. மணலாறு வெலிஓயா ஆகியது. சேருவாவெல, அம்பாறை தொகுதிகள் எவ்வாறு தோற்றம் பெற்றன? எல்லாவற்றையும்விட 1900 ஆம் ஆண்டு ஒரு சிலராக இருந்த சிங்களவர், இன்று திருமலையில் ஒரு இலட்சம் தொகையை எவ்வாறு எட்டிப் பிடிக்க முடிந்தது? இவ்வரலாறு தமிழராக பிறந்த ஒருவனும் மறக்க முடியாத மனனம் செய்யப்படவேண்டிய வரலாறு அல்லவா? இவர்கள் வாழ்ந்த வாழும் மண்ணும் இதுவல்லவா? இப்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தலைத் தொடர்ந்து, நடாத்தப்படவிருப்பதாகக் கூறப்படும் சர்வசன வாக்கெடுப்பில் தமிழர் தாயகத்தில் அத்துமீறிக் குடியேற்றப்பட்ட சிங்களவர் வாக்காளராக மாறி வாக்குப் போடும்போது அம்மண்ணின் மைந்தர்கள் பல்லாயிரக்கணக்கில் ஏதிலிகளாக அலையும் நிலையை இவர்கள் எவ்வாறு மறந்தார்கள்? **எது நடக்கக்கூடாது என்பதற்காக விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதோ அது நடப்பதற்கு இவர்களே காரணமாக இருப்பது பெரும் வரலாற்று அவலமல்லவா?**

ஆனால் இத்தகைய அவல நிலை தோன்றுவதற்கான வித்து இன்று நேற்று இடப்பட்டதல்ல. **1987 ஆம் ஆண்டு யூலைமாத கடைசிவாரம் ஈழத்தமிழர் வாழ்விலே மறக்க முடியாத கறைபடிந்த கறுப்பு வாரமாகும்.** இம்முறை தனது அழுத்தங்கட்கு சிங்கள அரசைப் பணிய வைப்பதில் வெற்றி கண்ட இந்திய அரசு, தமிழீழக் குழுக்களின் மிகக்கூடிய அழுத்தமொன்றை அரைகுறைத் தீர்வொன்றை ஏற்க பிரயோகிக்கப் போகின்றது என்பது அப்போதைய செய்தியாக இருந்தது. 1987 யூலை 25 ஆம் திகதி தமிழ்க் குழுக்களின் பிரதிநிதிகள் சென்னையிலிருந்து டெல்லிக்கு ஏற்றிச் செல்லப்பட்டபோது எத்தகைய விலை கொடுத்தேனும் அழுத்தங்களைச் சமாளிக்க வேண்டும். இயக்கப் பிளவுகள் இங்கே முதலிடம் பெறக்கூடாது என்று எல்லாத் தரப்பாலும் வலியுறுத்தப்பட்டது. ஆனால் புதுதில்லியில் இறங்கி உளவு அதிகாரிகளை சந்தித்த ஒரு இரவின் பின்னே எல்லாமே தலைகீழாகியது. புலிகள் உடன்பாட்டிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றார்கள் என்பது தெரிந்தவுடன் **இந்திய அரசின் ஏக ஆதரவு பெற்ற தமிழ்க் குழுக்களாக தாம் வர வாய்ப்பு இருப்பதை அவதானித்து புலிகளை தனிமைப்படுத்தி அழிக்க இதுவே நல்தருணம் என அவர்கள் நினைத்துக் கொண்டனர். இதற்காக தமிழீழ மக்களின் அரசியல் அபிலாசைகளையே மிதித்து அதை அடகு வைக்க இவர்கள் சற்றேனும் தயங்கவில்லை.** அது மட்டுமன்றி இவ்வுடன்பாடு பற்றிய தமது நிலைப்பாடு தமது இராசதந்திரத்திற்கு கிடைத்த வெற்றி என்று ஒரு சிலரும், அதை மறுத்து த. வி. கூட்டணியினர் எத்தகைய சிரமத்தின் மத்தியில் இந்த உடன்பாடு உருவாக காரணமாக தாம் இருந்தோம் என்பதை நூலாக வெளியிட்டது மட்டுமன்றி "செல்வா ஈட்டித்தந்த செல்வம்" என இல -இந்திய உடன்பாட்டினை வருணிக்கவும் தொடங்கினர். இது எவ்வளவு பரிதாபகரமானது: ஏனென்றால் **தமிழ் மாநிலத்தில் சுயாட்சி** பெற்று தமிழ் மக்கள் ஓர் இணைப்பாட்சி (சமஸ்டி)யில் வாழவேண்டும் என்பதற்காக 1956 முதல் 1977 வரை இருபது ஆண்டுகள் அதற்காகப் போராடிய தந்தை செல்வாவை இல -இந்திய உடன்பாட்டோடு தொடர்புபடுத்தியமை எவ்வளவு வரலாற்று மூடத்தனம் என்பது இப்போது விளங்கிவிட்டது.

எனவே இப்போதாவது இறுதி நேரத்திலாவது, சிங்கள பேரினவாதிகளின் உருட்டுக் காய்களாக அல்லாமல் டி. பியின் அழிவுப் பாதையினின்றும் தம்மை விடுவிக்க முயல்வது நல்லதல்லவா? ஏனென்றால் புற அழுத்தங்களை சரிவரக் கையாள முடியாத நிலையில் அவ் அழுத்தங்களுக்கு தம்மை உட்படுத்தி இசைவுபெற்று இலக்குகளைக் கைவிடுவோர் ஒன்றில், தமது இயல்பை இயலாமையை உணர்ந்து தம்மைத் தாமே அப்புறப்படுத்த வேண்டும். அல்லது இவ் அழுத்தங்களுக்கு தாக்குப் பிடிப்பவரோடு இணைந்து தம்மையும் புதுப்பிக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் தாம் சார்ந்த இனத்திற்கு பெரும் அவலத்தையும் ஆபத்தையும் இவர்கள் உருவாக்கிவிடுவார்கள் என்பது முன்னாள் தமிழ்க் குழுக்கள் மூலம் எமது வரலாறு எமக்கு கற்பிக்கும் பாடமல்லவா? ஆனால் இதனை இவர்கள் உணர்வார்களா? வணிக நிறுவனங்கள் போல். இனம்சார்ந்த அடையாளத்தைக் கொண்ட அடையாளச் சிட்டைகளை வைத்துக்கொண்டு அரசியல் வியாபாரம் செய்யும் இழிநிலையே இவர்கட்கு வாய்ந்த அரசியலாகிவிடும். எனவே இவர்களின் போக்கானது வரலாற்றின் ஒரு கட்டத்தில் வளர முடியாது தேங்கிக் குட்டையாகிப் போகும். இவர்களுக்காக வருந்துவதைத் தவிர நாம் என்ன செய்ய முடியும்?

ஏனென்றால் அன்றிலிருந்து இன்று வரை தமக்கு மேல் போடப்பட்ட அழுத்தங்களை பக்குவமாகக் கையாண்டு தமிழீழ மக்கள் மனதிலே கனன்று எரியும் விடுதலைத் தீயை அணைந்துவிடாமல் காத்து நிற்கும் விடுதலைப் புலிகளின் போராட்டத்தோடு இணைந்துவிட்ட மக்கள், இவர்களின் சலசலப்புக்களை ஒரு பொருட்டாகவே கருதார். இந்திய வல்லாண்மையின் சருவ அதிகாரங்களையும் குவித்து தனது விரல் நுனியில் வைத்து புலிகள் மேல் அழுத்தம் போட்டு அடக்க முயன்ற டிட்சித், காலம் கடந்த ஞானமாக இப்போது உதிர்க்கும் பொன்மொழிகள், **புலிகளை வரலாறு விடுவிக்கின்றது** என்பதையே பொருளாகக் கொள்கின்றதல்லவா? ■

**நன்றி:'ஈழநாதம்'**

www.tamilarangam.net



# கோடைகாலப் போருக்கு இராணுவம் தயாராகிறது; மாரிகால சமாதான முயற்சிகள் மறைகின்றன!

சமாதானத்தின் குரல்கள் படிப்படியாக அடங்கிப் போக, கோடைகால யுத்தத்திற்கான அறிவிப்புக்கள் படிப்படியாக உரத்து ஒலிக்கத் தொடங்குகின்றன. இது தொடர்பாக வெளிவரும் தகவல்களும் வலுவாகவே உள்ளன. இதில் சிறீலங்கா ஆயுதப் படையினருக்குத் தேவையான பெருந்தொகை ஆயுதக் கொள்வனவில் சிறீலங்கா அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. இக்கொள்வனவு 1000 கோடி ரூபாவுக்கு மேல் செல்லும் என இராணுவ வட்டாரங்களில் இருந்து அறியவருகின்றது. இதில் முப்படைகளுக்கும் தேவையான தளபாடங்களும் அடங்குகின்றன.

இதில் ஒரு தொகுதி 500 கோடி ரூபா ஏற்கனவே சீனாவில் இருந்து பெறப்பட்டுள்ளது. இதில் பெரும்பாலானவை வெடிப்பொருட்கள் -குண்டுகள், ரவைகள், பீரங்கிச் செல்கள் என அறிய முடிகிறது. சில கனரக வாகனங்களும் இதில் அடங்கியுள்ளன. இதேவேளை ஏனைய இராணுவத் தளபாடங்கள் கொள்வனவுக்கென ரஸ்யா, தென்னாபிரிக்கா, இஸ்ரேல், ஆஜென்ரீனா பக்கம் சிறீலங்காவின் கவனம் திரும்பியுள்ளது.

ரஸ்யாவின் தயாரிப்பான எம். ஐ. 8 உலங்கு வானூர்திகள் சிறீலங்கா விமானப்படையின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளன. ஏற்கனவே சிறீலங்கா விமானப் படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள இவ்வுலங்கு வானூர்தி கொள்வனவுக்கென உயர் அதிகாரிகள் குழுவொன்று ரஸ்யா சென்றிருந்தது. அத்தோடு ஆர்ஜென்ரீனாவில் இருந்து மேலும் புக்காரா விமானங்கள் கொள்வனவு செய்ய முயற்சிக்கப்பட்டும் வருகின்றது.

கடற்படையைப் பொறுத்து அதன் கவனம் பெரும்பாலும் இஸ்ரேல், பிரான்ஸ், வடகொரியா என்பனவற்றின் பக்கமே உள்ளது. இறுதியாக புதிய அதிவேகத் தாக்குதல் படகுகளை இஸ்ரேலிடமிருந்து கொள்வனவு செய்யும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. கடற்புலிகளின் சவால்கள் கரையோரக் கடற்பரப்பில் அதிகரித்திருப்பதைத் தொடர்ந்து, அதிவேகத் தாக்குதல் படகுகளை சிறீலங்கா கடற்படை பெற்றுக் கொள்வதில் தீவிர கவனம் செலுத்துவதாக இராணுவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, சிறீலங்காவின் இராணுவக் கட்டமைப்பும் கடந்த மாரி காலப் பெரும் தோல்வியின் பின்னர் மாற்றியமைக்கப்பட்டுள்ளது: இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்னா நிர்ப்பந்தத்தின் பேரில் பதவி விலகிச் செல்ல, புதிய தளபதியாக லெப். ஜெனரல் ஜெரி டி சில்வா பதவி ஏற்றுள்ளார். விமானப்படைத் தளபதியான ரொகான் குணவர்த்தனா காலநீடிப்பு கோராமலேயே ஓய்வு பெற்றுச் செல்ல, புதிய தளபதியாக வைஸ் எயார் மாசல் ஒலிவர் ரணசிங்க விமானப்படையின் தளபதியாகப் பதவி ஏற்றுள்ளார்.

இவ் அதிகாரபீட மாற்றமானது தனியாக உயர் நிலையில் மட்டுமல்ல, இரண்டாம் மூன்றாம் நிலைகள் வரையும் இடம்பெற்றுள்ளது. இதன் நிமித்தம் பதவி உயர்வுகள், புதிய பதவிகள், புதிய அதிகாரங்கள் என இராணுவக் கட்டமைப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளதோடு, யுத்தத்திற்கு ஏற்றதாக தயார்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்களில் பேசப்படுகிறது.

இதேசமயம், வடபகுதியில் குறுகிய கால, நீண்டகால யுத்தத்திற்கான திட்டங்கள் தீட்டப்பட்டுவிட்டதாகவும், கிழக்கில் கடமையில் உள்ள 10,000 துருப்புக்கள் வடக்கே அனுப்பப்படுவார்கள் என்றும், அவர்கள் வடக்கில் உள்ள 35,000 துருப்புக்களுடன் சேர்ந்து தாக்குதலில் ஈடுபடவுள்ளதாகவும் இராணுவ வட்டாரங்களில் பரவலாகப் பேசப்பட்டது.

சுருக்கமாகக் கூறுவதானால், 1994 ஆம் ஆண்டு கோடைகாலச் சமருக்கு இராணுவம் தயாராகிவிட்டதென்றே கூறலாம். இந்நிலையில், கடந்த மாரி காலத்தில் முன்னெடுக்கப்பட்ட - பேசப்பட்ட சமாதான முயற்சிகள் படிப்படியாகப் பின்னடையத் தொடங்கியுள்ளன.

ஆனால், சிறீலங்காவின் அரசியல் அணுகுமுறையில் கோடையில் போரும், மாரியில் சாதானப் பேச்சுக்களும் என்பது புதியதல்ல. கடந்த கால வரலாற்றில் பொதுவானதொன்றாகவே அவதானிக்க முடிகிறது. 1990 ஆம் ஆண்டின் கோடை காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இரண்டாம் ஈழப்போரில் இதனைத் தெளிவாகவே காணக்கூடியதாக உள்ளது. இதில் டி. பி. விஜேதுங்க புதியதொரு போக்கைக் காட்டவில்லை. ஆனால் விரைவான போக்கையும், வேகத்தையுமே காட்ட முற்படுகிறார்.

**ஜெயராஜ்**

1990 ஆம் ஆண்டு ஆரம்பித்த போரானது 1991 ஆம் ஆண்டு கோடை முழுவதும் உக்கிரமாகவே இடம்பெற்றது. 1991 கோடை சமரின் பின்னர், இராணுவத்தினருக்கு போரில் பெரும் ஆயுதக் கொள்வனவின் தேவை உணரப்பட்டது. அதாவது 1991 கோடையில் இடம்பெற்ற ஒப்பரேசன் பலவேகய -1 இன் பின்னர் சிறீலங்கா ஆயுதப்படை நவீனப்படுத்தப்பட வேண்டும் என்ற நிலை, பொதுவாகவே இராணுவத் தரப்பினால் வற்புறுத்தப்பட்டது. அத்தோடு இராணுவத்தினருக்கு ஓய்வும் தேவைப்பட்டது.

இந்நிலையில் 1991 மாரி ஆரம்பித்தபோது அமைச்சர் தொண்டமானால் முன்வைக்கப்பட்ட சமாதானத் தீர்வுத் திட்டம் குறித்து, அரச தரப்பில் ஒரு பகுதியினர் அக்கறை காட்டுவது போல் காட்டிக்கொண்டனர். அப்போதைய ஜனாதிபதியான ஆர். - பிரேமதாசா அமைச்சர் தொண்டமானின் திட்டம் குறித்து பெரும்பாலும் மௌனம் சாதித்தமை, அரசாங்கமும் தொண்டாவின் முயற்சிக்கு பின்னணியில் இருப்பதாக சந்தேகிக்க வைத்தது.

ஆனால் மாரி முடிந்தபோது அமைச்சர் தொண்டமானின் திட்டத்தை அரசாங்கம் வெளிப்படையாகவே விமர்ச்சித்ததோடு அதனை நிராகரிக்கவும் செய்தது. ஆனால் இக்காலப்பகுதியில் இராணுவம் தனது நிலையை வெகுவாகவே பலப்படுத்தியிருந்தது.

சீனாவில் இருந்து சுப்பர் சொனிக் குண்டுவீச்சு விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. செக்கோசிலவாக்கிய, சீனா ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட டாங்கிகளைக் கொண்ட படைப்பிரிவு உருவாக்கப்பட்டிருந்தது. அதேவேளை கடற்படைக்கெனப் பீரங்கிப் படகுகளும், கரையோர ரோந்து நடவடிக்கைகளுக்கென நீருந்து விசைப்படகுகளும் - வோட்டர் ஜெட் -கொள்வனவு செய்யப்பட்டன.

இவ்வாறாக 1991 ஆம் ஆண்டு மாரி முடிந்தபோது சிறீலங்கா, புதியரக நவீன ஆயுத தளபாடங்களுடன் போருக்குத் தயாராக இருந்தது. வடபகுதிப் போர் முனையை விரிவுபடுத்த வடபிராந்திய தளபதியான மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேக்கடுவ புதிய திட்டங்களை வகுத்திருந்தார்.

இவரின் முக்கிய குறியாக மணலாற்றுப் பிரதேசம் இருந்தது. 1991 கோடையின் இறுதியில் ஒப்பரேசன் மின்னல் எனப் பெயரிட்டு செம்டெம்பரில் மணலாற்றில் மேற்கொண்ட பெரும்படையெடுப்பில் ஏற்பட்ட பின்னடைவை நிவர்த்திக்கும் வகையில் அவரது முதல் திட்டம் இருந்தது. இரண்டாவது திட்டம் அவ்வருட கோடைக்குள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி விடுவதென்வும் விரிவான திட்டம் இருந்தது.

இதன் முதற்கட்டமாக 1992 கோடை ஆரம்பத்தில் மார்ச் மாதத்தில் மணலாற்றுப் பிரதேசத்தில் ஒப்பரேசன் சிக்சர் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் புலிகளின் எதிர்பாராத அதிரடியால் இராணுவம் தனது வாசலிலேயே பெரிய இழப்பைச் சந்தித்தது.

கோடையின் ஆரம்பத்தில் ஏற்பட்ட தோல்வியைத் தொடர்ந்து உடனடியாகவே இராணுவக் கட்டமைப்பு மாற்றப்பட்டது. கூட்டுப்படைத் தலைமைத் தளகர்த்தா ஜெளரல் கமில்டனிடம் இருந்த அதிகாரங்கள் முப்படைத் தளபதிகளின் கைக்கு மாறியது. அதாவது 1992 கோடை யுத்தம் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்னா உட்பட முப்படைத் தளபதிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. இக்கோடையிலேயே யாழ். குடாநாட்டை இறுதிக்கட்ட முற்றுகைக்கு இலக்காக இராணுவம் எண்ணியது. ஒப்பரேசன் பலவேகய -II மூலம் வெற்றிலைக்கேணி -ஆனையிறவு இராணுவ வேலி அமைக்கப்பட்டது.

ஆனால் 1991 மாரியில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அறிமுகப்படுத்திய போர் யுக்தியானது 1992 ஆம் ஆண்டின் இறுதியில் சிறீலங்கா இராணுவத்திற்கு பெரும் தோல்வியையும் சலிப்பையும் ஊட்டுவதாக இருந்தது. 1991 கிறிஸ்மஸ்ஸிற்கு முந்திய நள்ளிரவு மணலாற்றில் கொக்குத்தொடுவாயில் புலிகள் தொடங்கிய வெற்றிகரமான அதிரடித் தாக்குதல் 1992 ஆம் ஆண்டு அதே கிறிஸ்மஸ்ஸிற்கு முந்திய இரவு கொக்குத்தொடுவாயில் நடந்த தாக்குதல் வரை நீடித்தது.




இதேவேளை இக்காலப்பகுதியில் சிறீலங்கா இராணுவம் தனது தளபதிகள் பலரையும் இழந்திருந்தது. 1992 ஆகஸ்ட்டில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் சிறீலங்கா இராணுவம் தனது வடபிராந்தியத் தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேக்கடுவ உட்பட ஒன்பது உயர் அதிகாரிகளை இழந்திருந்தது. கட்டைக்காட்டில் பெரும்தொகுதி ஆயுதத்தையும் பறிகொடுத்திருந்தது.

இந்நிலையில் 1992 கோடையின் இறுதியில் இராணுவம் பெரும் நெருக்கடியில் சிக்கியிருந்தது. பல்லாயிரக்கணக்கானோர் இராணுவத்தை விட்டு ஓடியிருந்தனர்.. தளபதிகள் கொல்லப்பட்டிருந்தனர். இந்நிலையில் இராணுவக் கட்டமைப்பை மாற்றி அமைக்கப்பட வேண்டிய நிலையும், தப்பி ஓடிய இராணுவத்தினரை மீண்டும் சேர்க்கவும், புதியவர்களை மேலும் இணைத்துக் கொள்ள வேண்டிய அவசியமும் ஏற்பட்டது.

அதாவது 1991 மாரி போலவே 1992 மாரியும் இராணுவத்திற்கு சீரமைப்புக்கென பெரும் கால அவகாசம் தேவையாக இருந்தது. அரசாங்கத்தரப்பு இம்மாரி காலத்தைப் பயன்படுத்த எண்ணியது. இதனால் யுத்தத்தில் தளர்ச்சி ஏற்பட்ட போது சமாதான பேச்சுவார்த்தைகள் பற்றி குரல்கள் ஒலிக்கத் தொடங்கின. இவற்றில் அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னாண்டோவின் முயற்சி முக்கியமாகப் பேசப்பட்டது. அரசாங்க்மும் இவ்விடயத்தில் கடந்த வருடம் போலவே மௌனமான போக்கைக் கடைப்பிடிக்கத் தொடங்கியது.

ஆனால் இக்காலகட்டத்தில் இராணுவக் கட்டமைப்பில் பெரும்மாற்றம் கொண்டு வரப்பட்டது. முப்படைத் தளபதிகளிடம் இருந்த அதிகாரங்கள் மீண்டும் கூட்டுப்படைத் தளபதிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. பெரும் ஆட்சேர்ப்பு முயற்சிகள் இடம்பெற்றதோடு, நவீன ஆயுதங்களும், கொள்வனவு செய்யப்பட்டன. இக்காலப்பகுதியிலேயே 'புக்காரா' விமானங்கள் வந்து சேர்ந்ன.

அதாவது 1993 ஆம் ஆண்டு கோடையில் புதிய சமர்களுக்கு என பெரியளவில் இராணுவம் தயார்படுத்தப்பட்டது. ஆனால் 1992 மாரி வரை புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களின் பாதிப்புக்களிலிருந்து இராணுவத்தினரால் விடுபடமுடியவில்லை. எனவே 1992 கோடையும் இராணுவம் தன்னைச் சீரமைத்துக் கொள்வதிலும் பெருமளவு ஆயுதக் கொள்வனவில் ஈடுபடுவதிலுமே பெரும் கவனம் செலுத்தியது.

1993 கோடையில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களின் தொகையும் குறைவாக இருப்பினும், யூலை மாதத்தில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இதயபூமி -1 இராணுவ நடவடிக்கையான மண்கிண்டி மலை இராணுவ முகாம் மீதான தாக்குதல் காரணமாக, இராணுவக் கட்டமைப்பில் மீண்டும் ஒரு மாற்றம் செய்ய புதிய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா முற்பட்டார். அவர் மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை முப்படைத் தளபதிகளுக்கும் வழங்கினார்.

இதைத் தொடர்ந்து 1993 கோடை இறுதியில் சிறீலங்கா இராணுவம் 'ஒப்பரேசன் யாழ் தேவி' என்னும் நடவடிக்கையை பெரிய எடுப்பில் தொடங்கியது. ஆயினும் அது தோல்வியடைந்தது. இத்தோல்வியானது சிறீலங்கா இராணுவத்தின் போரிடும் ஆற்றல் பற்றி கேள்வி எழுப்

தொடர்ச்சி 13ம் பக்கம்.....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழத்திலிருந்து வெளியே செல்ல பயண அனுமதி கோரும் விண்ணப்பதாரரின் கவனத்திற்கு

**தமிழீழம் ஒரு தனியரசாக வளர்ச்சி பெற்று வருவதனால், அதன் நீதி பரிபாலனத்துறை சகல துறைகளுக்கும் புதிய சட்டதிட்டங்களை வகுத்துள்ளது. அதன் பிரகாரம் தமிழீழத்திலிருந்து வெளியே செல்வோர் அதற்கென உருவாக்கப்பட்ட சட்டதிட்டங்களுகேற்ப பயண அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும். பயண அனுமதி சம்பந்தமான நடவடிக்கைகளை தமிழீழத்தின் 'போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு' பரிபாலனம் செய்து வருகின்றது. இப் பயண அனுமதியைச் சரியான முறையில் விளங்கிக் கொள்ளாத, இடம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் சிலர், அதனைக் கொச்சைப்படுத்தும் வகையில் விளக்கமளித்து மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்திவருவதை நாமறிவோம். அதனாலேயே பயண அனுமதி பற்றி சகலரும் அறிந்துகொள்ளும் நோக்குடன் அதற்கான ஒழுங்கு விதிகளை இங்கு பிரசுரித்துள்ளோம்.**

**விண்ணப்பதாரரின் கவனத்திற்கு:-**

* பூரணமாக நிரப்பப்படாத, வெட்டி எழுதப்பட்ட படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

* பயணம் செய்பவர்கள் தமது முதல் எழுத்துக்களுடனான முழுப்பெயரையும் விணப்பப் படிவத்தில் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

* சகல விண்ணப்பதாரிகளும் பயண அனுமதி பெற வரும் போது தமது குடும்ப அட்டையைக் கண்டிப்பாக எடுத்து வரல் வேண்டும்.

**குறிப்பு:** ***வெளிநாட்டில் இருந்து வந்தவர்கள் மூன்று மாதங்கள் மட்டும் இங்கே தங்கிச் செல்வார்களாயின், பயண அனுமதி பெற வரும்போது குடும்ப அட்டை கேட்கப்பட மாட்டாது. ஆனால் இவ்விடயம் பற்றிச் சம்பந்தப்பட்ட பிரிவுக் கிராம சேவகரால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூன்று மாதங்களிற்கு மேல் இங்கே தங்கிச் செல்பவர்களாயின் குடும்ப அட்டையைப் பெற்று பயண அனுமதிபெற வரும்போது தம்முடன் எடுத்து வரல் வேண்டும்.***

* மண்மீட்பு நிதி கடன்பத்திரம் / மண்மீட்பு நிதி விலக்கு முத்திரை என்பன பயண அனுமதி பெற வரும்போது கேட்கப்பட மாட்டாது.

* தேசிய அடையாள அட்டையில் உள்ள விபரங்கள் தெளிவில்லாதவர்களும், பத்து (10) வயதிற்கு மேற்பட்டவர்களும், கடவுட்சீட்டிற்கு விண்ணப்பிக்கும் அளவிலான தமது இரு புகைப்படங்களின் பின்புறத்தில் தமது பெயர், முகவரி, பிறந்த திகதி, மாதம், ஆண்டு, வயது என்பனவற்றையும் குறிப்பிட்டு தமது கையொப்பத்தினையும் இட்டு, கிராம சேவகரினால் உறுதிப்படுத்தப்பட்ட பின் சமர்ப்பித்தல் வேண்டும். இவ்விரண்டு புகைப்படங்களில் ஒன்றில் அனுமதி வழங்கும் அலுவலரால் இலக்கமிடப்பட்டுப் பயணியிடம் பயண அனுமதி அட்டையுடன் மீளத்தரப்படும். பயணி இப்புகைப்படத்தினைப் பயணத்தின்போது தவறாது தன்னுடன் எடுத்துச் செல்லல் வேண்டும்.

### 1. வடபகுதிக்கு வெளியே செல்வதற்கான அனுமதி விண்ணப்பப் படிவங்களும், அவற்றினைப் பெற்றுக்கொள்ளும் இடங்கள் பற்றியதும்.

1. வடபகுதிக்கு வெளியே செல்வதற்கான நூறு (100) ரூபா விண்ணப்பப்படிவங்கள்:-

* மேற்படி விண்ணப்பப்படிவத்தினை அந்தந்தப் பகுதி விற்பனை நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

* இப்படிவத்தில் மாவீரர், போராளி குடும்பம் அல்லாதவர்களும், தென் தமிழீழத்தில் இருந்து 1990 ஆம் ஆண்டிற்கு முன்னர் இடம்பெயர்ந்து வந்தவர்களும் வடபகுதிக்கு வெளியே செல்லும் அனுமதிக்காக விண்ணப்பிக்கலாம்.

**குறிப்பு:** *மாவீரர், போராளிக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் தென் தமிழீழத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர்களும் வர்த்தக அனுமதி பெறுவதாயின் மட்டுமே, வடபகுதிக்கு வெளியே செல்வதற்கான நூறு (100) ரூபா விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பித்தல் வேண்டும்.*

2. வடபகுதிக்கு வெளியே சென்று கடமையாற்றுவோரிற்கான 25 ரூபா விண்ணப்பப்படிவம்.

* மேற்படி படிவத்தினை வடபகுதிக்கு வெளியே கடமையாற்றும் அலுவலர்கள் தாம் கடமையின் நிமித்தம் வடபகுதிக்கு வெளியே செல்வதாக உறுதிப்படுத்திய கடிதத்தினைச் சமர்ப்பித்து யாழ். பிரதான பஸ் நிலையத்திற்கு அருகாமையிலும் (அருச்சுனா வீதியில்) மாலிச்சந்தியிலும் அமைந்திருக்கும் அலுவலர்கள் செயலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

3. வடபகுதிக்கு வெளியே கல்வியினைத் தொடரச் செல்வோரிற்கான இலவச விண்ணப்பப் படிவம்.

* மேற்படி படிவத்தினை வடபகுதிக்கு வெளியே கல்வி கற்கும் பல்கலைக்கழக மாணவர்களும் யாழ். மாவட்டத்தில் பல்கலைக்கழகக் கல்வியினை மேற்கொள்ளும் மாணவர்களும், யாழ். பல்கலைக்கழகத்தில் அந்தந்தப் பகுதிப் பீடமாணவர்கள் ஒன்றியத்தால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்தினைப் பெற்று, யாழ். பல்கலைக்கழகத்தில் இலவச படிவ வழங்கலுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளவரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

4. மாவீரர், போராளி குடும்பங்களுக்கான வடபகுதிக்கு வெளியே செல்வதற்கான அனுமதி விண்ணப்பப்படிவம் பெறுதல்.

* யாழ். மாவட்டத்தினைச் சேர்ந்த மாவீரர் / போராளி குடும்பத்தினர் தமக்கான வர்த்தக அனுமதி, கப்பல் அனுமதி தவிர்ந்த ஏனைய அனுமதியினைப் பெறுவதற்கு அந்தந்தப் பகுதி மாவீரர் / போராளி குடும்பநலன் காப்பகத்தில் விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

5. தென் தமிழீழத்தில் இருந்து இடம் பெயர்ந்து வந்தவர்கள் வடபகுதிக்கு வெளியே செல்வதற்கு அனுமதி விண்ணப்பப்படிவத்தினைப் பெறுதல்.

* தென் தமிழீழத்தில் இருந்து இடம்பெயர்ந்த மாவீரர் / போராளி குடும்பம் அல்லாதவர்கள் மேற்படி விண்ணப்பப்படிவத்தினை, மட்டு. / அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மட்டு/அம்பாறை மாவட்டத் தொடர்பகத்திலும், திருமலை மாவட்டத்தினைச் சேர்ந்தவர்கள் திருமலை மாவட்டத் தொடர்பகத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

6. தென் தமிழீழத்தில் இருந்து இடம்பெயர்ந்த மாவீரர் / போராளி குடும்பத்தினர் வடபகுதிக்கு வெளியே செல்வதற்கான அனுமதி விண்ணப்பப் படிவத்தினைப் பெறுதல்.

* தென் தமிழீழத்தில் இருந்து இடம்பெயர்ந்து வந்த மாவீரர் / போராளி குடும்பத்தினர், இவர்கள் மட்டு. / அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாயின் மட்டு. / அம்பாறைத் தொடர்பகத்திலும், திருமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாயின் திருமலை மாவட்டத் தொடர்பகத்திலும், மாவீரர் / போராளி குடும்பங்களிற்கான விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

### 2. மாவீரர் / போராளி குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு

* மாவீரர் / போராளி குடும்பத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் வடபகுதிக்குள் நுழைவோருக்கான அட்டைகளைப் புதுப்பித்தல் அனுமதியினைத் தவிர, தற்காலிக அனுமதிகளைத் தத்தமது பகுதி மாவீரர் / போராளிகள் குடும்பநலன் காப்பகத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று முறையாகப் பூர்த்தி செய்து அனுமதியினைப் பெற்றுக் கொள்ளலாம்.

1. மாவீரர் / போராளி குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வர்த்தக அனுமதியினைப் பெறவேண்டுமாயின், விற்பனை நிலையத்தில் விற்பனையாகும் வடபகுதிக்கு வெளியே செல்வோரிற்கான விண்ணப்பப்படிவத்தினை வாங்கி முறையாக நிரப்பி, தத்தமது பகுதிகளுக்குரிய மாவீரர் / போராளிகள் குடும்பநலன் காப்பகத்தில் கையளித்தால் விண்ணப்பப்படிவம் கையளிக்கப்பட்ட தினத்தில் இருந்து ஏழு நாட்களுக்குப் பின் தமது படிவம் கையளிக்கப்பட்ட மாவீரர் / போராளிகள் குடும்பநலன் காப்பகத்தில் வர்த்தக அனுமதி பற்றிய முடிவைப் பெற்றுக்கொள்ளலாம்.

2. தென் தமிழீழத்தைச் சேர்ந்த மாவீரர் / போராளி குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அனுமதி பெறுதல் சம்பந்தமானது.

* தென் தமிழீழத்தின் மட்டு. / அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த மாவீரர் / போராளிகள் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மட்டு. / அம்பாறை மாவட்டத் தொடர்பகத்திலும் திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த மாவீரர் / போராளி குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் திருமலை மாவட்டத் தொடர்பகத்திலும் தமக்குரிய விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுப் பூரணப்படுத்தி விண்ணப்பித்துத் தற்காலிக அனுமதியைப் பெற்றுக்கொள்ளலாம்.

* மேற்குறிப்பிடப்பட்டவர்கள் வர்த்தக அனுமதியினைப் பெற வேண்டுமாயின், வடபகுதிக்கு வெளியே செல்வோரிற்கான விண்ணப்பப்படிவத்தினைப் விற்பனை செய்யும் இடத்திற்பெற்றுப் பூரணப்படுத்தித் தத்தமது தொடர்பகங்களில் கையளித்தால், படிவம் கையளிக்கப்பட்ட திகதியில் இருந்து ஏழு (07) நாட்களின் பின் அனுமதி பற்றிய முடிவைத் தத்தமது தொடர்பகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

### 3. தற்காலிக வர்த்தக அனுமதிகள் பெறுதல் சம்பந்தமானது

1. தற்காலிக, வர்த்தக அனுமதிகோரி விண்ணப்பிப்பவர்கள் வயதுக் கட்டுப்பாட்டினுள் அடங்காதவர்களாயின் தத்தமது கிராம சேவகர்கள் ஊடாகவே விண்ணப்பித்தல் வேண்டும்.

2. விண்ணப்பப்படிவத்துடன் தனது அனுமதி பெறுவது தொடர்பான சகல ஆவணங்களினதும் பிரதிகள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். (குடும்ப அட்டை உட்பட) இவ்வாறு இணைக்கப்பட்ட முழுமையான விண்ணப்பப் படிவம் எமக்குக் கையளிக்கப்பட்ட தினத்தில் இருந்து ஏழு (07) தினங்களின் பின்னர், விண்ணப்பதாரிக்கு அனுமதி வகை பற்றிய முடிவு வழங்கப்படும்.

3. வர்த்தக அனுமதிக்கு விண்ணப்பம் செய்பவர்கள் தமது தேசிய அடையாள அட்டை வைத்திருப்பின் தமது புகைப்படம் ஒன்றை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் வேண்டும். தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள் இரண்டு புகைப்படங்களை இணைத்தல் வேண்டும். (கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கும் அளவில்.)

4. வழங்கப்பட்ட தற்காலிக அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட திகதியில் இருந்து ஒரு மாதத்திற்கு மட்டுமே செல்லுபடியாகும்.

5. வர்த்தக அனுமதி அட்டையினை வரையறுக்கப்படும் காலப்பகுதியினுள் பத்து (10) தடவைகள் மட்டும் வடபகுதிக்கு வெளியே சென்று வருவதற்குப் பயன்படுத்தலாம்.

### 4. அவசர அனுமதி பெறுதல் சம்பந்தமானது

1. அவசர அனுமதிக்கு விண்ணப்பிப்பவர்கள் சகல ஆவணங்களினதும் (குடும்ப அட்டை உட்பட) மூலம் பிரதிகளுடன் சமூகமளிக்க வேண்டும்.

2. ஒரு பிணையாளியையும் அழைத்துவரல் வேண்டும். பிரிவுகளிற்கு என ஒதுக்கப்பட்ட அலுவலகங்களில் இவ் அனுமதி உடன் வழங்கப்படும்.

**குறிப்பு:** *50 வயதிற்கு மேற்பட்டவர்களிற்குப் பிணைவைக்கத் தேவையில்லை. அத்துடன் இந்த வயது நிர்ணயம் பிறந்த ஆண்டினை அடிப்படையாக வைத்தே வரையறுக்கப்படும். (மாதத்தை அடிப்படையாக வைத்துக் கணிப்பிடப்படமாட்டாது.)*

3. வழங்கப்பட்ட அவசர அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட திகதியில் இருந்து ஒரு மாதத்திற்கு மட்டுமே செல்லுபடியாகும்.

4. வடபகுதிக்குள் நுழைவோருக்கு வழங்கப்படும் உள்நுழைவோர் அட்டைகளை (யாழ். மத்திய பஸ் நிலையத்திற்கு அண்மையில்) அருச்சுனா வீதி, அலுவலர்க்கான செயலகத்திலும், வடமராட்சியில் மாலிச்சந்தி அலுவலர்க்கான செயலகத்திலும் புதுப்பித்துக்கொள்ளலாம். இப்புதுப்பித்தல் அனுமதி அட்டை வடபகுதிக்குள் நுழைந்த திகதியில் இருந்தது பதினைந்து (15) நாட்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

### 5. பிணைநிற்போர் கவனத்திற்கு (பிணைநிற்பதற்குரிய தகைமைகள்)

1. இருபத்திஜந்து (25) வயதிற்கும், ஐம்பது (50) வயதிற்கும் இடைப்பட்டவர்களே பிணை நிற்க முடியும்.

2. ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அதே குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்குப் பிணை நிற்க முடியாது.

3. பிணை நிற்பவர் அவசர அனுமதிபெற விண்ணப்பித்த விண்ணப்பதாரியின் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் குறைந்தது மூன்று வருடங்கள் வசித்திருத்தல் வேண்டும்.

4. எமது இயக்க அலுவலகங்களில் பணிபுரிவோரும், மாவீரர் / போராளி குடும்பங்களும் கிராம சேவகர்களும் மதகுருமார்களும் பிணை நிற்க முடியாது.

5. வடபகுதிக்கு வெளியே சென்றவர் குறித்த தினத்தில் வடபகுதிக்குள் வராவிடின், பிணையாளி அக்குறித்த தினத்தில் அனுமதிபெற்ற அலுவலகத்திற்குப் பயணி வராதற்கான காரணத்தை

**(எதிர்ப்பக்கத்தில்)**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆதாரங்களுடன் நேரிற் சென்று அறியத்தரல் வேண்டும்.

6. பிணையாளி, குறிப்பிட்ட பிணைக்குரிய நபர்கள் அனைவரும் மீண்டும் வடபகுதிக்குள் வந்தவுடன் அவர்களின் அடையாள அட்டை அல்லது முன்பு பயண அனுமதிபெற்ற போது கொடுத்த புகைப்படத்துடனும் குடும்பப் பதிவு அட்டையுடனும் அந்த நபர்களுடன் அவர்களது வடபகுதிக்குள் நுழைவோருக்கான அனுமதி அட்டையினையும் எடுத்துச்சென்று தான் பிணைநின்ற அனுமதி வழங்கும் செயலகத்தில் நேரிற்சென்று சமர்ப்பித்துப் பிணையை நீக்கிக்கொள்ளல் வேண்டும்.

**6. கப்பலில் செல்வதற்கான அனுமதி**

1. கப்பலில் செல்வதற்கான அனுமதியினைப் பெறவிரும்பும் விண்ணப்பதாரிகள் வயதுக்கட்டுப்பாடு அற்றவர்களாயின் கப்பலில் செல்வதற்கான தமது விண்ணப்பப்படிவத்தினை அலுவலர் அனுமதி வழங்கும் செயலகத்தில் பெற்றுப் பூர்த்தி செய்தபின் யாழ். பிரதான பஸ் நிலையத்திற்கு அருகாமையிலும் (அருச்சுனா வீதியில்), வடமராட்சியில் மாலிச்சந்தியிலும் அமைந்துள்ள அலுவலர் அனுமதி வழங்கும் செயலகங்களில் கையளித்து பிணையாளி ஒருவரை நியமித்து உடன் அனுமதியினைப் பெறமுடியும். தாமதித்து அனுமதி பெறவேண்டுமாயின் மேற்படி செயலகங்களில் விண்ணப்பத்தைக் கையளித்து ஐந்து (05) நாட்களின்பின் அனுமதியைப் பெறமுடியும்.

2. வயதுக் கட்டுப்பாடு உடையவர்களாயின் கோண்டாவில், மாலிச்சந்தி, தென்மராட்சி அனுமதிக்கான விசாரணைச் செயலகங்களில் கப்பலில் செல்வதற்கான விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுப் பூர்த்திசெய்து கையளித்துத் தமது அனுமதி பற்றிய முடிவைப்பெற்று அதன் பின்னர் தமக்குரிய அனுமதி அட்டையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

3. அந்தந்தப் பகுதி விற்பனை நிலையங்களில் ரூபா நூறு (100) செலுத்திக் கப்பல் அனுமதி விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**7. வயதுக் கட்டுப்பாடுடையவர்கள் கவனத்திற்கு**

1. பத்துத் தொடக்கம் இருபத்திஐந்து (10 -25) வயதுக்கு உட்பட்ட ஆண்களும், பத்துத் தொடக்கம் இருபத்திமூன்று (10 -23) வயதுக்கு உட்பட்ட பெண்களும் வயதுக் கட்டுப்பாடு உடையவர்களாகக் கருதப்படுவர்.

* இவ்வயது எல்லை நிர்ணயம் ஆண்டினை அடிப்படையாக வைத்தே வரையறுக்கப்படும்.

**குறிப்பு:**
01. 01. 1985 இற்கு முன்னர் பிறந்தவர்களும்

01. 01. 1969 இற்கு பின்னர் பிறந்த ஆண்களும்

01. 01. 1971 இற்குப் பின்னர் பிறந்த பெண்களும்

மேற்குறிப்பிட்ட வயது எல்லைக்குள் அடங்குவர்.

2. வயதுக் கட்டுப்பாட்டினுள் உள்ளடங்கும் விண்ணப்பதாரி விண்ணப்பப்படிவத்தினைப் பூர்த்திசெய்து குடும்ப அட்டை உட்படத் தமது பயண அனுமதி கோரும் காரணம் பற்றி எழுதப்பட்ட கடிதத்துடனும், சகல ஆவணங்களுடனும் மாலிச்சந்தி, கோண்டாவில், சாவகச்சேரி ஆகிய அனுமதிக்கான விசாரணைச் செயலகங்களில் நேரில் சமூகம் தந்து தனது விண்ணப்பப்படிவத்தினைக் கையளித்து அனுமதி பற்றிய முடிவைப்பெற்று வடபகுதிக்கு வெளியே செல்வதற்கான அனுமதியைப் பெறமுடியும்.

3. திருமணமான வயதுக் கட்டுப்பாடு உடையவர்கள் அனுமதிபெறுதல் சம்பந்தமானது

* இவ்வயதெல்லைக்குள் அடங்கும் ஆண், பெண் திருமணம் செய்திருப்பின் அவர்கள் வயதுக் கட்டுப்பாடுள்ளவர்களாகக் கருதப்படமாட்டார்கள். இருப்பினும் இவ்வயதெல்லைக்கு உட்பட்ட திருமணமான ஆண்களுக்கு (வயதுக் கட்டுப்பாடு உடையவர்களுக்கு) கோண்டாவில், மாலிச்சந்தி, சாவகச்சேரி அனுமதிக்கான விசாரணைச் செயலகங்களிலேயே அனுமதி வழங்கப்படும். ஆனால் இவ்வயதெல்லைக்கு உட்பட்ட திருமணமான பெண்கள் தத்தமது பிரிவுப் பயண அனுமதி வழங்கும் செயலகங்களிலேயே அனுமதியினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

4. வயதுக் கட்டுப்பாடுடைய பெண்களின் திருமணத்திற்கான அனுமதி சம்பந்தமானது

* வயதுக் கட்டுப்பாடுடைய பெண் ஒருவர் திருமணம் செய்வதற்காக வடபகுதிக்கு வெளியே செல்வதற்கு அனுமதிபெற வேண்டுமாயின் அவர் பதினெட்டு (18) வயதைத் தாண்டியவராக இருத்தல் வேண்டும். (ஆண்டை அடிப்படையாக வைத்தே வயதெல்லை தீர்மானிக்கப்படும்.) அத்துடன் தான் குறிப்பிட்டவரைத்தான் திருமணம் செய்யப் போவதாக உறுதிப்படுத்தி எழுதிய கடிதமும், தனது முழு அளவிலான புகைப்படமும் அனுமதிக்கான விசாரணைச் செயலகத்தில் ஒப்படைக்கப்படல் வேண்டும். அத்துடன் பெண்ணின் பெற்றோர்களும் குறிப்பிட்ட ஆணின் பெற்றோர்களும் தமது பிள்ளைகளுக்குத் திருமணம் முடித்து வைக்கப்போவதாக உறுதிப்படுத்தி எழுதிய கடிதத்தினை அனுமதிக்காக விசாரணைச் செயலகத்தில் ஒப்படைத்தல் வேண்டும். அத்துடன் குறிப்பிட்ட ஆணின் முழு அளவிலான புகைப்படமும் ஒப்படைக்கப்பட வேண்டும். இதன் பின்பே குறிப்பிட்ட பெண்ணிற்குப் பிணையாளி ஒருவரை நியமித்து அனுமதி வழங்கப்படும். குறிப்பிட்ட இருவருக்கும் திருமணம் முடிந்தபின் அதை அத்தாட்சிப்படுத்துமுகமாக மணமக்கள் இருவரும் தம்பதிகளாக நின்று எடுத்த முழு அளவிலான புகைப்படத்துடன் விவாகப் பதிவுப் பிரதியையும் அனுமதி பெற்ற தினத்திலிருந்து மூன்று (03) மாத காலப்பகுதிக்குள் பிணையாளி மூலம் அனுமதி வழங்கிய செயலகத்தில் ஒப்படைத்துப் பிணையை நீக்கிக்கொள்ளல் வேண்டும். மேற்குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பிணையாளி தனது பிணையை நீக்கிக்கொள்ளத் தவறும்பட்சத்தில் அதனால் பிணையாளிக்கு ஏற்படும் அசெளகரியங்களிற்கு அவரே பொறுப்பாளியாக இருப்பார்.

**8. குடும்பமாக வடபகுதிக்கு வெளியே செல்லல் சம்பந்தமானது**

1. குடும்பமாக நிரந்தரமாக வடபகுதிக்கு வெளியே செல்வோருக்கு

* இவர்கள் வயதுக் கட்டுப்பாடு அற்றவர்களாயின் தமது சொத்துக்களை இயக்கநலன் பகுதியில் ஒப்படைத்து அவர்கள் தரும் சொத்துக் கையேற்புக் கடிதத்துடன் தமது பிரிவிலுள்ள அனுமதி வழங்கும் செயலகத்திற்குச் சென்று அனுமதியினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

* இவர்கள் வயதுக் கட்டுப்பாடு உடையவர்களாயின் கோண்டாவில், மாலிச்சந்தி, சாவகச்சேரி அனுமதிக்கான விசாரணைச் செயலகங்களில் அவர்களுக்குரிய விண்ணப்பப்படிவங்களைக் கையளித்து அனுமதி பற்றிய முடிவினைப் பெற்று அதன் பின்னர் அந்தச் செயலகத்தினால் சொத்துப் பொறுப்பேற்பது சம்பந்தமான கடிதம் இயக்கநலன் பிரிவிற்கு மேற்பட்ட விண்ணப்பதாரியிடம் தரப்படும். விண்ணப்பதாரி அக்கடிதத்துடன் இயக்கநலன் பிரிவுக்குச் சென்று தனது சொத்துக் கையேற்கப்பட்டமைக்கான கடிதத்தினைப் பெற்று முன்பு தான் எச்செயலகத்தில் தனது அனுமதி பற்றிய முடிவைப் பெற்றாரோ, அச்செயலகத்தில் இயக்கநலன் பிரிவினால் தரப்பட்ட சொத்துக் கையேற்புக் கடிதத்தினைச் சமர்ப்பித்து அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

2. குடும்பமாகத் தற்காலிகமாக வடபகுதிக்கு வெளியே செல்வோருக்கு

* இவர்கள் வயதுக் கட்டுப்பாடு அற்றவர்களாயின் இயக்கநலன் பிரிவின் மூலம் தமது சொத்துக்களை உறுதிப்படுத்திய கடிதத்துடன் தமது பிரிவிலுள்ள அவசர அனுமதி வழங்கும் செயலகத்திற்குச் சென்று அனுமதியினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

* இவர்கள் வயதுக் கட்டுப்பாடு உடையவர்களாயின் கோண்டாவில், மாலிச்சந்தி, சாவகச்சேரி அனுமதிக்கான விசாரணைச் செயலகத்திற்குச் சென்று விண்ணப்பத்தினைக் கையளித்து அனுமதி பற்றிய முடிவைப்பெற்று அதன்பின் அச்செயலகத்தால் சொத்துப் பொறுப்பேற்பது சம்பந்தமான கடிதம் இயக்கநலன் பிரிவிற்கு, விண்ணப்பதாரியிடம் தரப்படும். விண்ணப்பதாரி இக்கடிதத்துடன் இயக்கநலன் பிரிவிற்குச் சென்று இயக்கநலன் பிரிவால் வழங்கப்படும் சொத்துக் கையேற்புக் கடிதத்தினைப் பெற்று, முன்பு எச்செயலகத்தில் தனது அனுமதி பற்றிய முடிவினைப் பெற்றாரோ அச்செயலகத்தில் சொத்துக் கையளிப்புக் கடிதத்தினை ஒப்படைத்து அனுமதியைப்பெற முடியும்.

**குறிப்பு:** 31. 12. 1990 இற்கு முன்னர் வெளிநாட்டிற்கோ அல்லது வடபகுதிக்கு வெளியோ சென்றவர்கள் வடபகுதிக்குள் வந்து மீண்டும் வடபகுதிக்கு வெளியே செல்வதற்கு பயண அனுமதிபெற விண்ணப்பிக்கும் போது சொத்துக்களை உறுதிப்படுத்திய கடிதம் சமர்ப்பிக்கத் தேவையில்லை.

**9. மன்னார் தீவிற்குச் செல்வோர் சம்பந்தமானது.**

* மன்னார்த் தீவிற்குச் செல்லும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அலுவலர்கள் யாழ். பிரதான பஸ் நியைத்திற்கு அருகாமையில் (அருச்சுனா வீதி) அமைந்துள்ள அலுவலர்க்கான அனுமதி வழங்கும் செயலகத்திலும் வடமராட்சி மாலிச்சந்தியில் அமைந்துள்ள அலுவலர்களுக்கான அனுமதி வழங்கும் செயலகத்திலும் கடிதம் பெற்று அக்கடிதத்துடன் விடத்தல்தீவு அனுமதி வழங்கும் செயலகத்தில் அனுமதிபெற்றுச் செல்லலாம். தேவை ஏற்படும் போது மன்னார் மாவட்டச் சிறப்புத் தளபதி, தளபதி, அரசியல் துறைப் பொறுப்பாளர் ஆகியோரில் எவராவது ஒருவரின் அனுமதிக் கடிதத்துடன் செல்வதற்கு அனுமதிக்கப்படுவர்.

**10. அலுவலகத் தேவை நிமித்தம் செல்வோர் சம்பந்தமானது**

* அரச அலுவலகங்களில் வடபகுதிக்கு வெளியே பணிபுரிவோரும், அலுவலகத் தேவையின் நிமித்தம் வடபகுதிக்கு வெளியே செல்ல வேண்டியவர்களும் அலுவலர் அனுமதி பெறுவதற்கான சகல ஆவணங்களையும் சமர்ப்பித்துத் தமக்கான நிரந்தர அனுமதி தவிர்ந்த ஏனைய அனுமதிகளை, யாழ். பிரதான பஸ் நிலையத்திற்கு அருகாமையில் (அருச்சுனா வீதி) அமைந்துள்ள அலுவலர்க்கான அனுமதி வழங்கும் செயலகத்திலும் வடமராட்சியில் மாலிச்சந்தியில் அமைந்துள்ள அலுவலர்க்கான அனுமதி வழங்கும் செயலகத்திலும் அனுமதியைப் பெறமுடியும்.

**குறிப்பு:**
1. வடபகுதிக்கு வெளியே பணிபுரியவோர், தாம் பணிபுரியும் அலுவலகத்தின் பொறுப்பதிகாரியின் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் சமர்ப்பித்தல் வேண்டும்.

2. வடபகுதிக்கு வெளியே அலுவலகத் தேவைகள் காரணமாகச் செல்லும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அலுவலர்கள் தாம் அலுவலகத் தேவைகள் தொடர்பாகச் செல்வதனைத் தனது யாழ். மாவட்ட அலுவலகத்திற்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரியினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேற்படி கடிதங்கள் (1, 2 இற்குரிய) வழங்கப்பட்ட திகதியில் இருந்து (01) மாதத்திற்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

11. மதகுருமார்கள் தமது அனுமதி பற்றிய முடிவை அலுவலர்க்கான அனுமதி வழங்கும் செயலகங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

12. பல்கலைக்கழக மாணவர்கள் தமது இலவச விண்ணப்பப்படிவங்களை முறையாகப் பூர்த்தி செய்து, அலுவலர்க்கான அனுமதி வழங்கும் செயலகத்தில் கையளித்தல், கையளித்த படிவத்திற்குரிய அனுமதியை ஒரு பிணையைவைத்து உடன் பெற்றுக்கொள்ளலாம். மேற்படி அனுமதியினைத் தாமதித்துப் பெறுவதாயின் படிவம் கையளிக்கப்பட்ட தினத்திலிருந்து ஐந்து நாட்களின்பின் அனுமதி பற்றிய முடிவை முன்னர் படிவம் கையளித்த செயலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

* பொதுமக்கள் தமது வடபகுதிக்கு வெளியே செல்வதற்கான பயண அனுமதி பெறுவது தொடர்பான பிரச்சினைகளுக்கு, கோண்டாவில் பயண அனுமதிக் கான விசாரணைச் செயலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

* அனுமதி அட்டைகளை உங்கள் கைகளில் பெற்றுக்கொண்ட பின் அதிலுள்ள விபரங்கள் அனைத்தும் சரியாக உள்ளதா எனப் பார்த்துக்கொள்ளுங்கள்.

**நன்றி,**

**போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு,**
**தமிழீழ விடுதலைப் புலிகள்,**
**தமிழீழம்.**

## கோடைகாலப் போருக்கு.....

பிய அதேவேளை, மாரி காலத்தில் புலிகள் மேற்கொண்ட 'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கையானது சிறீலங்கா இராணுவக் கட்டமைப்பையே முற்றாகக் குழப்பியது. சிறீலங்கா இராணுவத்தால் விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போரிட முடியுமா என்ற கேள்வியையும் எழுப்பியது. அத்தோடு கடற்புலிகளின் வளர்ச்சியானது கடற்பரப்பில் புதியதோர் போர் முறையையும் திறந்திருந்தது.

இந்நிலையில் 1993 மாரியில் இராணுவக் கட்டமைப்பு முழுமையாகச் சீரமைக்கப்பட வேண்டி இருந்ததோடு, பெருமளவில் ஆயுத தளபாடக் கொள்வனவும் போருக்கான புதிய யுக்திகளும் தேவையாக இருந்தது. சுருக்கமாகக் கூறின் 1993 மாரி காலத்தில் இராணுவம் போரிடும் ஆற்றலை முற்றாகவே இழந்திருந்தது.

இதன் காரணமாகவே அரச தரப்பு, சமாதானப் பேச்சு வார்த்தை என்பவற்றிற்கான சமிக்கைகள் சிலவற்றை இக்காலத்தில் வெளியிட்டது. சமாதான நல்லெண்ண முயற்சிகளில் ஈடுபடுபவர்களுக்கு ஊக்கம் கொடுப்பது போல் காட்டிக்கொண்டது. இந்த வரிசையில் ஒன்றுக்கு மேற்பட்ட நல்லெண்ணத் தூதுக் குழுக்கள் வடக்கே சென்றுவர அனுமதிக்கப்பட்டன. இதில் கிறிஸ்தவ மதப்பிரிவினர் முக்கிய பங்காற்றினர். இதன்பிரகாரம் கத்தோலிக்க அதிமேற்றிராணியார், மெதடிஸ்த திருச்சபை ஆயர், அங்கிலிக்கன் ஆயர் ஆகியோர் வடபகுதிக்கு விஜயம் செய்தனர். அத்தோடு சர்வோதயத் தலைவர் ஆரியரட்ணா வேறு நோக்கங்களுக்காக யாழ்ப்பாணம் வந்து சென்றார். இருப்பினும் அவரும் அரசியலில் அக்கறை காண்பித்தார். இதில் சிலவற்றிற்கு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் தொடர்பு இருந்தது. சிலவற்றிற்கு பிரதமர் ரனில் விக்கிரமசிங்காவின் தொடர்பு இருந்தது.

இதேவேளை, 1993 இல் வடக்கில் அரசு திட்டமிட்ட இராணுவ வெற்றிகள் பகற்கனவாகிப் போன நிலையில், அரசாங்கம் கிழக்கில் தேர்தல் ஒன்றை நடாத்தி அதன் மூலம் நிலைமையைச் சரிசெய்ய முற்பட்டது. ஜனநாயக மரபுகளையெல்லாம் ஒருபுறம் மூட்டைகட்டி வைத்துவிட்டு கிழக்கில் ஒரு தேர்தல் ஒன்றை நடாத்த முனைந்தது. இதற்கு பெருமளவில் துருப்புக்கள் தேவையாக இருந்ததன் காரணமாகவும் சமாதானத்தில் விருப்பமுள்ளதுபோல் காட்ட முற்பட்டுநின்றது.

இவ்வாறானதொரு நிலையிலேயே ஏற்கனவே கூறப்பட்டது போல், 1993 மாரிப்பருவத்தை தனது இராணுவத் தயாரிப்பு வேலைகளுக்குப் பயன்படுத்தியது. இத்தயாரிப்பு வேலைகள் தற்பொழுது கணிசமான முன்னேற்றம் கண்டுள்ளன. ஆனால் இத்தயாரிப்பு வேலைகள் முடியுமுன்னரே தாக்குதல் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட வாய்ப்புக்கள் உண்டு. இத்தாக்குதல் திட்டங்கள் உச்சக் கட்டத்தை அடையும்வேளை இராணுவத் தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டுவிடும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

அதாவது 1994 ஆம் ஆண்டு கோடைகாலப் போருக்கு அரசு தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டுள்ளது. இதன் ஆரம்பக் கட்டம் மட்டுப்படுத்தப்பட்ட குறுகிய கால நடவடிக்கைகளாகவே அமையலாம் என்றே கருதப்படுகிறது. கோடையின் மத்தியில் பெரும் தாக்குதல்களை நடத்தலாம் என்றும் உணரப்படுகிறது. கடந்த கால அனுபவங்களும் கோடைகால மத்தியையே சிறீலங்கா பெரும் தாக்குதல்களுக்கு தேர்ந்தெடுத்திருந்தமை இங்கு

**தொடர்ச்சி 15ம் பக்கம் ....**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



### பிராங்போட் நகரில்

# 900க்கும் அதிகமான தமிழ் மக்கள் கலந்துகொண்ட மேதின ஊர்வலம்

## தமிழீழத்தை சித்தரித்த அலங்கார ஊர்திகள்

கடந்த மே 1ம் நாள் (1-5-94) விடுதலைப் புலிகள் அமைப்பின் யேர்மன் கிளையினர் பிராங்போட் நகரில் மே தின ஊர்வலத்தை ஒழுங்கு செய்து நடாத்தினர். இனவிடுதலை உணர்வுடன் தொளாயிரத்துக்கும் அதிகமான தமிழீழ மக்கள் கலந்துகொண்டனர்.





ஊர்வலத்தில் அலங்கரிக்கப்பட்ட ஊர்திகள் சிறப்பம்சமாகும். தமிழர் கலை பண்பாட்டுக்கழகம் அலங்கரித்திருந்த ஓர் ஊர்தியில் காயமுற்ற குழந்தைகளும், பெண்களும் வேதனைப்படுவது போல்



நடிக்கப்பட்டது. உலகத் தமிழர் இயக்க ஊர்தியில் ஈழத் தமிழரின் இன்றைய நிலையை வெளிப்படுத்தும் விளக்கப்படங்களும், மங்கள வாத்தியக் கலைஞர்களின் இனிய வாத்திய இசையுடன் சிறுவர் நடனமும் இடம்பெற்றது. தமிழர் புனர்வாழ்வுக் கழகம், சிதையுண்ட கிறிஸ்தவ தேவாலயம் ஒன்று பவனி வருவது போன்று ஊர்தியை வடிவமைத்திருந்தது. குண்டுத் தாக்குதலுக்கு மத்தியிலும் உழவு செய்யும் உழவர், படகு கொண்டு மீன் பிடிக்கச் செல்லும் மீனவர் என இரு ஊர்திகளும் ஒரு கரும்புலி வாகனமும் ஊர்வலத்தில் கலந்துகொண்டு ஊர்வலத்தைச் சிறப்புறச் செய்தன.

பிராங்போட் நகரில் நடாத்தப்பட்ட மே தின ஊர்வலங்களுள் விடுதலைப்புலிகள் நடாத்திய ஊர்வலத்திலேயே அதிகமானோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. ■

## புலம் பெயர்ந்த தமிழர்களின் மேதின விழாக்கள்

புலம் பெயர்ந்த தமிழர்கள் தாம் வாழும் நாடுகளில் அதிகளவில் மேதினவிழாக்களில் பங்கு பற்றியதுடன், தமது தாயக மக்களின் துயர வாழ்வையும் உலகிற்கு உணர்த்தக் கூடிய பதாதைகள் அலங்கார ஊர்திகளையும் எடுத்துச் சென்றதுடன், கோசங்களையும் எழுப்பினர். தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் தமிழர்களும் ஊர்வலத்தில் பங்கு கொண்டனர். ஜேர்மனியில் பிராங்போர்ட் நகரில் 900 தமிழர்கள் கலந்துகொண்டு மேதின ஊர்வலத்தில் பத்திற்கும் மேற்பட்ட அலங்கார ஊர்திகளை எடுத்துச் சென்றனர். இவற்றில் தமிழீழ மக்களின் போராட்ட சூழ் நிலைகள் சித்தரிக்கப்பட்டிருந்தன. டென்மார்க்கில் நடைபெற்ற மேதின விழாவில் முந்நூற்றி ஐம்பது தமிழர்கள் கலந்துகொண்டு



சுவிஸில் நடைபெற்ற மேதின ஊர்வலம்

தலைமையில் உலகில் வாழும் தமிழர்கள் ஒரு அணியில், தமிழீழ மக்களின் விடுதலைக்காய் உழைத்து வருவதை இச்செயல்கள் வெளிப்படுத்தின. சுவிற்சலாந்தில் சூரிச் நகரத்தில் 2000 தமிழர்களும் ஜெனிவாவில் 500 சிறப்பித்தனர். பிரான்சில் பெருந்திரளான தமிழர்கள் கலந்துகொண்ட மே தினக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் மத்திய குழு உறுப்பினர் திரு. லோரன்ஸ் திலகர் உரைநிகழ்த்தினார். ■

# செயலால் தமிழீழ....

இது ஒருபுறம் இருக்க, சிறீலங்கா அரசாங்கம் செயலளவில் தமிழர் தாயகத்தில் செயற்பட்டுவரும் தமிழீழ அரசு நோக்கிய அரசின் இருக்கைநிலையை உணர்கிறது. பலவருடங்களாக சிறீலங்காவின் இறைமை தமிழர் தாயகத்தில் செயலிழந்து காணப்படுவதனால், இப்பிரதேசத்தினை சிறீலங்கா அரசு செயலளவில் வேறுநாடாகவே கருதி வருகிறது. இப்பிரதேச மக்களையும் வேற்று நாட்டு மக்களாகவே கருதி, ஒரு அரசாங்கம் தனது சொந்தக் குடிமக்களுக்கு எதை எதையெல்லாம் செய்யக் கூடாது எனக்கூறப்படுகின்றதோ அவ்வளவற்றையும் செய்துவருகின்றது. இந்நிலையில் இப்பிரதேசத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடாத்த முடியாது என்பது, சிறீலங்கா அரசிற்கு தெளிவாகத் தெரியும். எனவே ஜனாதிபதி தேர்தலுக்கு முன் பாரிய யுத்தமொன்றை குடாநாட்டில் நடத்திட சிறீலங்கா முயல்கிறது.

### தமிழர் தேசிய பாதுகாப்பை சிதைப்பது ஒன்றே வழி

இந்நிலையில் 1972 ஆம் ஆண்டு சிங்கள பௌத்த குடியரசமைப்பின் மூலம், நாடற்ற தேசிய இனமாக்கப்பட்டு (Nation without State) விட்ட தமிழீழ மக்கள், சிறீலங்காவின் ஆயுத ஒடுக்குமுறை, அரச பயங்கரவாதம், ஆக்கிரமிப்பு யுத்தங்கள் என்பவற்றிற்கு எதிராக பிரித்தானியரிடமிருந்து தம்மிடம் மீண்டுவிட்ட இறைமையை நிலைநாட்ட, சட்ட பூர்வமாகத் தோற்றுவித்த ஆயுத எதிர்ப்பின் தலைமையை ஏற்று நிற்கும் விடுதலைப்புலிகளை சிறீலங்கா, எதிரிகளாக கருதுகிறது. ஆயுத எதிர்ப்பினூடாகவே தமிழர்களின் தேசிய பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டு, தமிழீழ அரசு நோக்கிய அரசு உருவாக்கப்பட்டு நிற்கிறது என்பதைச் சிறீலங்கா நன்கு அறியும். இயல்பு தன்மையானதும் சட்ட பூர்வமானதுமான இவ் அரசு நோக்கிய அரசும் தமிழீழ மக்களின் தேசிய பாதுகாப்பும் சிதைக்கப்பட்டாலே தமிழர்களின் இறைமையை அபகரித்து ஜனாதிபதித் தேர்தலை இப்பிரதேசத்தில் நடாத்த முடியும் என்பதை உணர்ந்த சிறீலங்கா, அதற்காக எடுக்கும் பகீரதப் பிரயத்தனமே இக் குடாநாடு மீதான படையெடுப்பு என அவதானிகளால் கருதப்படுகிறது.

### தமிழர் இராணுவத் தலைமையுடன் மோதல்

இதுவரை காலமும் தமிழீழத்தின் பலபகுதிகளிலும் பல்வேறு வகையான ஆக்கிரமிப்புக்களைச் செய்த சிறீலங்கா, ஒருபகுதியிலும் கூட நிலைகொள்ள முடியாது சுழன்றுவருகிறது. இதனால் தென்தமிழீழப் பிரதேசங்களுக்கு தேசிய பாதுகாப்பு வழங்கும் தமிழீழ விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்ட பிரதேசமான குடாநாடு மீது, யுத்தமொன்றை நடாத்தி தமிழரின் இராணுவத் தலைமையுடன் நேரடி மோதலை ஏற்படுத்தினாலேயே இப்போரில் வெற்றி பெறலாம் என்பது சிறீலங்காவின் பகற்கனவு. தமிழருடைய இராணுவத் தலைமை சரிந்து தமிழரின் தேசிய பாதுகாப்பு வீழ்ச்சியுற்றால் தமிழரின் அரசியல் தலைமைத்துவத்தின் உறுதி குலைக்கப்படலாம் என்பது சிறீலங்காவின் எதிர்பார்ப்பு. இதற்காகவே குடாநாடு மீதான பாரிய யுத்தம் என்னும் தற்கொலை முயற்சியில் சிறீலங்கா இறங்கத் துடிக்கிறது.

### யுத்தநிலை மாறுகிறது

ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட ஆளணிகளையும் பல்லாயிரம் கோடி ரூபா ஆயுதங்களையும் குவிப்பதான ஒருசெயல்முறை உள்நாட்டு யுத்தமல்ல; பெரும் படையெடுப்பு முயற்சியாகும். எனவே சிறீலங்கா தமிழ் மக்கள் முன்வைத்த அமைதி வழித்தீர்வுக்கான அழைப்புகளை எல்லாம் புறக்கணித்து, அவர்களை செயலளவில் வேற்றுநாட்டினராகக் கருதி, அவர்களின் இறைமையை ஆயுதவழியில் அபகரிக்க முயலும் இன்றைய சூழலில், இலங்கைத் தீவின் இருதேசிய இனங்களுக்கிடையிலான பிரச்சினை, இருநாடுகளுக்கு இடையிலான யுத்தமாக உருமாறியிருப்பதை உலகிற்கு உணர்த்தி நிற்கிறது.

### யுத்த விளைவுகளை தடுக்க அழைப்பு

இந்நிலையில், சுமார் இரண்டாயிரம் சதுர கிலோமீற்றர் பரப்பில் சிறீலங்கா நடத்த முற்படும் ஆயுதப் பலப்பரீட்சை, வீணான உயிர் உடைமை அழிவுகளைத் தோற்றுவிக்க வாய்ப்புகள் உண்டு. 1981 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின்படி யாழ் மாவட்டம் 712 ஆள் / சதுர கிலோமீற்றர் எனும் அடர்த்தியான குடிசன செறிவை கொண்டிருந்தது. தற்போது சிறீலங்கா அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட மக்கள் மீதான யுத்தங்களால் கட்டாய வெளியேற்றத்திற்கு உள்ளான திருமலை, முல்லைத்தீவு போன்ற தென்தமிழீழ பிரதேச மக்களும், தீவுப்பகுதி, மாதகல், கீரிமலை பகுதி மக்களும் குடாநாட்டை நோக்கியே உள்ளக இடம்பெயர்வு அடைந்துள்ளனர். சிறீலங்கா அரசாங்கத்தின் மக்கள் மீதான பொருளாதாரத் தடையினால் உணவு, மருந்து போன்றவற்றிற்கு தட்டுப்பாடு நிலவும் நிலையில் மற்றொரு யுத்தத்தை சிறீலங்கா முடுக்கிவிட்டு வருகிறது.

இது ஒருபுறமிருக்க, சிறீலங்கா படைகளின் தரைவழிநகர்வு குடாநாட்டுக்குள் முற்றாக தடுக்கப்பட்டும், கடல்வழி நகர்வு பலத்த சவாலுக்கு உள்ளாக்கப்பட்டும் இருக்கும் இன்றைய சூழலில், சிறீலங்கா வான்வழி தாக்குதல்களையே நடைமுறையில் தேர்ந்தெடுக்கும். இதனால் மக்களே இலக்குப் பொருளாக்கப்பட்டு தமிழின அழிப்பு வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட இடமுண்டு.

அத்துடன் எதிர்த் தாக்குதல் நடத்தும் நிலைக்கு தமிழீழ விடுதலைப் புலிகளை சிறீலங்கா தூண்டும்போது, சிங்களப் படைகளுக்கு ஏற்படக்கூடிய உடல் உடமை அழிவுகள் சிங்கள மக்களுக்கும் பேரழிவாக மாறக்கூடிய சாத்தியக்கூறுகள்

தொடர்ச்சி 15ம் பக்கம் ....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூட இரண்டாவது ஆண்டு நிறைவு விழா

நோர்வே நாட்டின் தலை நகரான ஒஸ்லோவில் 1-02-92 அன்று 22 தமிழ்ச் சிறார்களுடன் ஆரம்பிக்கப்பட்டு தமிழ், சமயம் (இந்து, கிறிஸ்தவம்) போன்ற பாடங்களுடன் நாட்டியம், சங்கீதம், மிருதங்கம் போன்ற கலைப்பாடங்களும் கற்பிக்கப்பட்டுவரும் 'அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம்' தனது இரண்டாவது ஆண்டு நிறைவை 27-03-94 அன்று கோலாகலமாகக் கொண்டாடியது.




ஈழத்திற்கு வெளியே புலம்பெயர்ந்த தமிழன் கைகட்டி வாய்மூடி வாழாதிருந்துவிடவில்லை. புலம்பெயர்ந்த மண்ணிலும் தமிழர்கள் கலை, கலாச்சாரம் என்று தம் சமூக பாரம்பரியங்களை மறந்துவிடாது அவற்றைத் தமது அடுத்த பரம்பரைக்கும் கற்பித்து வருகிறார்கள் என்ற வகையில் பெற்றோர்களும், நிர்வாகத்தினரும், ஆசிரியர்களும் ஆற்றும் சேவையே இன்று 165 மாணவர்களைக் கொண்ட கலைக்கூடமாக விளங்குவதற்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது. இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக திரு. தாசீசியஸ் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக ரொம் கிறாவ்லி அவர்களும் கலந்துகொண்டனர்.




விழாகுறிப்பிட்ட நேரப்படி மாலை ஆறு மணிக்கு ஆரம்பிக்கப்பட்டதாயினும் விழா மண்டபம் அதற்கு முன்னதாகவே பார்வையாளர்களால் நிரம்பியிருந்தது. சுமார் அறுநூறுக்கும் மேற்பட்டோர் விழாவிற்கு சமூகமளித்திருந்தனர். விழா பாடசாலைக் கீதத்துடன் ஆரம்பிக்கப்பட்டு, மழலைப் பூக்கள் (அபிநயம்), ஜதீஸ்வரம், அந்தி சாயும் நேரம் (சிறுவர் அரங்கம்), கர்நாடக சங்கீதம், மிருதங்க இசை, புதிய ஆக்கப் பாடல்கள் போன்ற நிகழ்ச்சிகள் இடைவேளைக்கு முன்பாக இடம்பெற்றன.

தொடர்ந்து பரிசளிப்பு வைபவம் இடம்பெற்றது. கலைக்கூடத்தால் நடாத்தப்பட்ட பேச்சு, சித்திரம், உறுப்பெழுத்து, நாட்டியம், சங்கீதம், மிருதங்கம் முதலிய போட்டிகளில் தெரிவானவர்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து முறையே தலைமை ஆசிரியர், பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர் உரைகள் இடம்பெற்றன. அடுத்து ஆத்திசூடி -சிறுவர் நாடகம், மீன்பாடும் பண்பாடு (பாரம்பரிய நடனங்கள்) என்பன இடம்பெற்றன. நிகழ்ச்சிகளின் இடையே பேச்சுப் போட்டிகளில் முதல் இடத்தைப் பெற்றவர்களின் பேச்சுகளும் இடம்பெற்றன.

நிகழ்ச்சிகள் எல்லாமே தரமாக அமைந்திருந்தன. 3 வயது பாலகர் முதல் 17 வயது வரையான பெரும்பாலான கலைக்கூட மாணவர்கள் இந்நிகழ்ச்சிகளில் பங்குபற்றினர். சிறுவர்களின் மழலைப்பூக்கள், அந்திசாயும் நேரம் நிகழ்ச்சியும், ஆத்திசூடி நாடகமும், மீன்பாடும் பண்பாடும் நிகழ்ச்சியும் பார்வையாளர்களைக் கவர்ந்த நிகழ்ச்சிகளாக அமைந்துவிட்டன. இந்நிகழ்ச்சிகளை பார்வையாளர்கள் அனைவரும் மெய்மறந்து ரசித்ததைக் காணக்கூடியதாக இருந்தது. மேலும் வேறு நிகழ்ச்சிகள் இடம்பெறாதா என்று ஆவலுடன் எதிர்பார்த்த பார்வையாளர்களுக்கு, இத்துடன் நிகழ்ச்சிகள் முடிவடைந்தன என்ற அறிவிப்பாளரின் அறிவிப்பு பெரும் ஏமாற்றத்தையே கொடுத்தது. நிகழ்ச்சிகள் யாவும் மாலை 10. 45க்கு நிறைவெய்தின. ■

**தகவல்:-றொ. இ. ஜெயானந்தன் ஒஸ்லோ**

## பயங்கர "வாதம்"

பயங்கரவாதம் மட்டுமிங்கு உள்ளதென்று
பயங்கர "வாதம்" மட்டுங்கொண்ட மனிசனின்று
பயங்கர "வாதம்" புரியின் இன்று சொல்வேனொன்று
பயங்கரமாகும் விளைவு பின்பு வருந்து நின்று.

'தவளை' பாய்ந்தே இந்த விளைவெனில்
குருளை பாய்ந்தால் என்னவாகும்
அலிக்கு மீசையேன் அழிக்கு மாசையேன்
புலிக்குப் போர்க்குண மென்றது மானதேன்.

பதறப் பதறப் படுகொலைசெய்த பாவியர் நீவிர்
பயங்கர வாதம் பேசலாமோ?
கதறக் கதறக் கற்பழித்த காமுகர் நீவிர்
காதில் வேதம் உரைக்கலாமோ?
இருட்டினில் வந்து இடறிய நாய்கள்
குமுதினிப் படகில் குதறிய பேய்கள்
குருதியில் எழுதிய குறிப்புகள் இங்கே.
குனிந்த தலையொடு புத்தனு மங்கே.

விறைப்பொடு பேசும் விஜயதுங்கா!
வேங்கை வெகுண்டால் உன்படை தங்கா!
பொறுப்பொடு விலக்கிடு அல்லையேல் உந்தன்
பொறுப்பினை விலக்கிடு போர்க்களம் பதில்சொல்லும்!!!

**- நாயன்மார்கட்டு சிவகுமாரன் -**

## மேலும் இரு தமிழக.....

களை சிறீலங்காவுக்கு திருப்பி அனுப்புவதற்கு ஜெயலலிதா பலவகைகளில் முயற்சித்து வருகிறார். அத்துடன் தமிழ்நாட்டில் இருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளை விரட்டுவதில் விருப்புடைய ஜெயலலிதா எல்லாத் தமிழ் அகதிகளையும் உடனடியாகத் திருப்பி அனுப்புதல் வேண்டும், இல்லையேல் இந்தியாவின் பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படும் என எச்சரிக்கத் தொடங்கியுள்ளார். தமிழ் நாட்டில் அகதி முகாம்களுக்கு வெளியே வாழும் தமிழ் அகதிகளையும் பத்து நாட்களுக்குள் பொலிஸ் நிலையங்களில் பெயர்களைப் பதிய வேண்டும் எனவும், பெயர்களைப் பதியும் போதே எப்போது எந்த மார்க்கத்தினூடாக திரும்பிப் போக விரும்புவதாக தெரிவிக்க வேண்டும் எனவும் ஜெயலலிதாவின் அரசாங்கம் பணித்துள்ளது.

### மறுமலர்ச்சி தி.மு.க. எதிர்ப்பு

இதற்கிடையே திரு. வை. கோபாலசாமியை தலைவராகக் கொண்ட மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பியனுப்பக் கூடாது எனவும், அப்படித் திருப்பி அனுப்புதல் கட்டாயப்படுத்தப்பட்டால் தமது கட்சி தமிழகமெங்கும் கிளர்ச்சிகளை மேற்கொள்ளும் எனவும் அறிவித்துள்ளது. தி. மு. கவிற்கே உதய சூரியன் சின்னம் பயன்படுத்தும் உரிமை உண்டென தேர்தல் கமிசனர் தீர்ப்பளித்ததை அடுத்து, வை. கோபாலசாமி அணியினர் மறுமலர்ச்சி தி.-மு. க. எனும் புதிய அரசியல் கட்சியை உருவாக்கியுள்ளனர்.

### கலைஞர் கருணாநிதி பேரணிக்கு அறிவிப்பு

தமிழக மீனவர்கள் சிறீலங்காக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்படுவதையும் ஜெயலலிதா இதுகுறித்து அக்கறையின்றி இருப்பதையும் கண்டித்து தி. மு. க., பேரணியையும் நாடு தழுவிய ஆர்ப்பாட்டங்களையும் நடத்தப்போவதாக தி. மு. க. தலைவர் கலைஞர் கருணாநிதி அறிவித்துள்ளார். ■

## பிரித்தானிய ....

திரு. கப்ஸ், "சிறீலங்காவில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் பற்றி எவ்வித தொடர்புகளை பிரித்தானிய அரசு அண்மைக் காலங்களில் மேற்கொண்டு வருகிறது?" என வேறொரு வினாவை எழுப்பினார். பிரித்தானிய அரசு மனித உரிமைகள் மீதுள்ள தனது அக்கறை குறித்து சிறீலங்கா அதிகாரிகளுடன் ஒழுங்கான முறையில் தொடர்புகொண்டு வருவதாகவும், மிக அண்மையில் இவ்வருடம் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஐம்பதாவது அமர்வின் போது தொடர்பு கொள்ளப்பட்டதாகவும் திரு. கீட்கோட் அமரி பதிலளித்தார்.

திரு. கப்ஸ் மற்றொரு கேள்வியில், "சிறீலங்காவிலும் சிறீலங்காவுக்கு வெளியிலும் உள்ள தமிழர்களின் அரசியல் அமைப்புக்களுடன் பிரித்தானிய அரசு எவ்விதமான தொடர்புகளையாவது கடந்த வருடத்தில் ஏற்படுத்தியதா?" எனக் கேட்டார். இதற்குப் பதிலளித்த கீட்கோட் அமரி, "நாங்கள் சிறீலங்காவுக்கு உள்ளும் வெளியும் பலவகைப்பட்ட கருத்துக்களைக் கொண்ட தமிழ்ப் பிரதிநிதிகளுடனும் தொடர்புகளைக் கொண்டிருந்தோம்" எனக் கூறினார். ■

## பலவந்தமாக கை...

போது கைது செய்யப்பட்ட கல்லாறைச் சேர்ந்த இளம்பெண் ஒருவர், தடுப்புக்காவலில் வைத்து கற்பழிப்புக் கொடுமைக்கு இலக்காகியுள்ளதாக, சட்ட உதவி நிலைய கடமையதிகாரி சோமசுந்தரம் கொழும்பில் வைத்து பகிரங்கப்படுத்தியுள்ளார்.

### சமூகநிலைத் தந்திரம்

மட்டக்களப்பில் சமூக நிலை திரும்பிவிட்டதாகவும் தமிழர்கள் அமைதி வாழ்வு வாழ்வதாகவும் சிறீலங்கா அரசு சர்வதேச நாடுகளிடையே பொய்ப்பிரச்சாரம் செய்துவருவது யாவரும் அறிந்ததே. மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து வரும் ஒவ்வொரு கடிதமும், அம்மாவட்டத்தில் சிறீலங்கா அரசாங்கம் நடத்தும் அப்பட்டமான ஆக்கிரமிப்பையும், அதன் விளைவாக இடம்பெறும் மனித அநாகரிகச் செயல்களையும் உலகிற்கு வெளிப்படுத்திவருகிறது. ■

## 'ஜெயமகா' இராணுவ...

டன் நிறுத்திவிட்டு, அவ்விடத்தை பலப்படுத்தும் வேலையில் இறங்கி காவலரண்கள் சிலவற்றை அமைத்தனர்.

இக்காவலரண்களில் ஒன்று விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது. புலிகளின் இம்முதல் அதிரடித் தாக்குதலிலேயே ஐந்து இராணுவத்தினர் பலியாகிவிட்டதாகவும், ஐவர் படுகாயமடைந்துள்ளதாகவும் சிறீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

இத்தாக்குதல் நடைபெறுவதற்கு ஒருமணித்தியாலத்திற்கு முன்னர், மன்னாரில் இருந்து ஒரு மைல் தூரத்திலுள்ள பள்ளிமுனை பொலிஸ் நிலையத்தின் மீது விடுதலைப் புலிகள் நடாத்தியதாக்குதலில் இருபொலிசார் உயிரிழந்ததுடன் ஐவரைக் காணவில்லை என சிறீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ■

## கோடைகால.....


சுட்டிக்காட்டக் கூடியவையாகும்.
ஆனால் சிறீலங்கா அரசாங்கத்தின் கோடைகால யுத்தமும், மாரிகால சமாதான முயற்சிகளும் ஒருபோதும் இனப்பிரச்சினைக்கு தீர்வைத் தந்துவிடப் போவதில்லை. அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்றொழிப்பதைத் தவிர இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இராணுவ நடவடிக்கைகளால் எதையும் அரசால் சாதித்துவிட முடியாது. ஆனால் இவ் இராணுவ நடவடிக்கைகளால் நிரந்தரமாக சமாதானப் பேச்சுக்களை தொலைத்துவிட அரசால் முடியும். ■

## செயலால் தமிழீழ.....

உண்டு. எனவே சிறீலங்கா - தமிழீழ யுத்தத்தால் வீணாக மக்கள் துன்பத்துக்குள்ளாகாமல் தடுக்க வேண்டிய கடமை சர்வதேச சமூகத்திற்கு உண்டு. தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள், "அமைதிவழித் தீர்வுகாண சமாதானக் கதவுகள் இன்னும் திறந்துள்ளன" என்றே கூறிவருகிறார். அவரின் நல்லாக்கத்திற்கான அழைப்பை ஏற்கும்படி சிறீலங்கா அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டிய பொறுப்பு, உலகின் அமைதி விரும்பிகள் அனைவர்க்கும் உண்டு. கனடா, அவுஸ்திரேலியா, நோர்வே, சுவீடன் போன்ற பலநாடுகளின் நல்லெண்ண இதயங்கள், இதுகுறித்து பலவழிகளில் சிறீலங்கா ஜனாதிபதியை வழிப்படுத்த முயன்ற போதிலும் அவர் பிடிவாதமாக போர்வெறி கொண்டுநிற்பதாகவே தெரிகிறது. இந்நிலையில் சர்வதேச சட்டங்களுக்கு அமைய சட்ட ரீதியாகவும், நிறுவன ரீதியாகவும் சிறீலங்காவை, இராணுவத் தீர்வை கைவிட வைப்பதற்கான நிர்ப்பந்தங்களை உருவாக்க நாடுகள் முன்வரவேண்டிய நிலையை படையெடுப்பு சூழ்நிலை உருவாக்கி நிற்கிறது. எனவே சர்வதேச நாடுகளில் வாழும் சமாதானத்திற்கும், மனிதாபிமானத்திற்கும் உழைக்கும் அனைவரும், தத்தம் நாடுகளை தமிழர் பிரச்சினையில் தலையிடும்படி கட்டாயப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. உலகநாடுகள், மதத்தலைவர்கள், கற்றறிந்தோர் கூட்டத்தவர் மற்றும் பல்கலைக்கழகங்கள், தொழிற்சங்கங்கள் போன்றவை வெளிப்படையாகவே சிறீலங்கா அரசாங்கத்தை சர்வதேச அமைப்புக்களூடாக நிர்ப்பந்தித்தால் மட்டுமே போரின் கொடிய விளைவுகள் இலங்கைத் தீவில் தடுக்கப்படலாம். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழர் வாழும் சர்வதேச நாடுகளில் எல்லாம் வெண்திரைகளில்,
விரைவில் காண்பிக்கப்படவுள்ளது.

## தமிழீழ விடுதலை வரலாற்றில், பெரும் வீரசாதனை படைத்த

## பூநகரித் தாக்குதல்

# "ஒப்பரேசன் தவளை"

## இராணுவ நடவடிக்கை

சண்டைக் களத்தில் நின்று ஒளிப்பதிவு செய்யப்பட்ட மெய்சிலிர்க்கும் பதிவு.





**U.T.O**
211 Katherine Road
London E6 1BU, UK
T/F 081-470 8593

**L.T.T.E**
Postbox 47, 7600 Struer
Denmark. Tel/Fax
97-841231

**W.T.C.C**
HOF JECKLIN, 7415 RODELS
SWITZERLAND
Tel/Fax: 081-831797

**T.C.G**
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

**T.C.C**
Via Mariano Stabile - 34
90139 Palermo, Italy
T/F091-611 3179

**T.C.C**
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel 435 81142 F 435 81191

**T.C.C**
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

**T.C.C**
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1, Norway
Tel 022-191260 F-190114

**T.C.C**
Groot Hertoginnelaan 106
2517 BL Den Haag, Nederland
Tel 070-346 1963 F-384 0683

**T.C.C**
Glomminge Grand-29
16362 Spanga, Sweden
Tel 08-7612943

Printed by Observer Group Newspapers,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்